ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஏப்ரல் 1, 2004 | புரட்சி 3 | முழக்கம் 12 | விலை : ரூ.2.50

## மதவெறி, பார்ப்பன சக்திகளை எதிர்த்து தீவிரப் பிரச்சாரம்

# தி.மு.க. கூட்டணிக்கு கழகம் ஆதரவு

## ஈரோட்டில் எழுச்சியுடன் நடந்த கழகக் கலந்துரையாடல்

*நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியை ஆதரிப்பது என்று தந்தை பெரியார் திராவிடர் கழகம் முடிவு செய்துள்ளது. 'சங் பரிவார்' விரிக்கும் சூழ்ச்சி வலைகளில் தமிழின உணர்வு பேசி வந்தவர்கள், சுயநலத்துக்காக பலியாகி வருவதையும், கழகம் கண்டித்துள்ளது.*

**28.3.2004** அன்று பகல் **11** மணியளவில் ஈரோடு தமயந்தி பாபுசேட் நகராட்சி திருமண மண்டபத்தில், தந்தை பெரியார் திராவிடர் கழக மாநில கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர்கள் கோவை இராம கிருட்டினன், விடுதலை இராசேந்திரன், ஆட்சிக் குழு உறுப்பினர்கள் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் துரைசாமி உட்பட **149** கழகப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். புதுவை கழகத்தின் சார்பில் மாநிலத் தலைவர் லோகு.அய்யப்பன், கோகுல் காந்திநாத் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். கழகத்தின் கடந்தகால செயல்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் பற்றி **35** தோழர்கள், கருத்துகளைத் தெரிவித்தனர். கூட்டத்துக்கு வழக்கறிஞர் துரைசாமி தலைமை தாங்கினார். பிற்பகல் **3.30** வரை கூட்டம் தொடர்ந்து நடந்தது. இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டன.

**1)** மத்தியில் வாஜ்பாய் தலைமையிலான ப.ஜ.க. ஆட்சி தேசிய ஜனநாயக முன்னணி என்ற கூட்டணி ஆட்சியை நடத்தினாலும், அதன் இந்துத்துவா எனும் மதவெறி செயல் திட்டங்களை அமுல்படுத்துவதற்கே அதிகாரத்தைப் பயன்படுத்தி வந்துள்ளது. தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இந்துத்துவா மதவெறியைத் தீவிரமாக பரப்புவதில், பா.ஜ.க.வையே மிஞ்சும் வகையில் செயல்பட்டு வருகிறது. பெரியாரின் கடும் உழைப்பால் பேணி வளர்க்கப்பட்ட சமூக நீதி மற்றும் மதச் சார்பின்மையை குழி தோண்டிப் புதைத்து, சங்கராச்சாரிகளை வழிகாட்டியாகக் கொண்டு செயல்படுவதோடு, தமிழின உணர்வாளர்களையும் தொடர்ந்து பல்வேறு அடக்குமுறை சட்டங்களால் ஒடுக்கி வருகிறது. மத்திய-மாநில அரசுகளின் இந்த போக்குகளை சுட்டிக்காட்டி கடந்த **2003** மார்ச் மாதத்திலிருந்து "வீழ்த்துவோம் வர்ணாசிரமத்தை" எனும் பிரச்சார இயக்கத்தை தந்தை பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்த இயக்கத்தின் தொடர்ச்சியாகவே இப்போது தேர்தல் களமும் அமைந்துள்ளதாகவே தந்தை பெரியார் திராவிடர் கழகம் கருதுகிறது. மக்களை கூறுபோடும் இந்துத்துவ மதவெறி சக்திகளான பா.ஜ.க., அ.தி.மு.க. ஒரு அணியாகவும் அதை முறியடித்து மதச் சார்பின்மையை காக்க வேண்டும் என்ற முழக்கத்தோடு காங்கிரஸ், தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒரு அணியாகவும், அணி பிரிந்து நிற்கின்றன. இந்த நிலையில் பா.ஜ.க., அ.தி.மு.க. அணியைத் தோற்கடிக்க தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையில் அமைந்துள்ள கூட்டணியை ஆதரிப்பது என்று தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஒரு மனதாக முடிவு செய்கிறது.

இந்துத்துவ - பார்ப்பன பயங்கரவாதத்தை வளர்க்கும் அ.இ.அ.தி.மு.க., பா.ஜ.க.வை அம்பலப்படுத்தும் பிரச்சார கூட்டங்களை நடத்துவது என்றும் இக்கூட்டம் முடிவு செய்கிறது.

**2)** தமிழ்நாட்டில் சங்பரிவார்கள் காலூன்றும் முயற்சிகள் வேகமாக நடந்து வருவதும், அவர்கள் விரிக்கும் சூழ்ச்சி வலையில் இதுவரை, தமிழின உணர்வு பேசி வந்தவர்கள்கூட சுயநலத்துக்காக பலியாவதும், தமிழகத்தில் மிக மோசமான பின் விளைவுகளை உருவாக்கிவிடும் என்பதை கருத்தில் கொண்டு இத்தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ.க. அணியைத் தோற்கடிக்க வேண்டும் என்று தமிழ் மக்களை தந்தை பெரியார் திராவிடர் கழகம் கேட்டுக் கொள்கிறது.

**3)** ஒவ்வொரு மாநிலத்திலும் ஆளும் கட்சிகள், தங்களின் அரசியல் சுயநலத்துக்காக வெவ்வேறு வடிவங்களில் பயன்படுத்தி வரும் "பொடா" சட்டத்தையும், மனித உரிமைக்கும், மனித நேயத்திற்கும் எதிரான மரண தண்டனையை முற்றாக நீக்க வேண்டுமென தந்தை பெரியார் திராவிடர் கழகம் வலியுறுத்துகிறது.

### முஸ்லீம்கள் இட ஒதுக்கீடு

**4)** கல்வி, அரசு வேலை வாய்ப்புகளில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் முஸ்லீம் மக்களின் தனி இட ஒதுக்கீட்டுக் கோரிக்கையை தந்தை பெரியார் திராவிடர் கழகம் முழுமையாக ஆதரிக்கிறது.

சமூக நீதியில் அக்கறையுள்ள இயக்கங்கள், கட்சிகள் அனைத்தும் இக் கோரிக்கையை ஆதரித்து குரல் கொடுக்குமாறு தந்தை பெரியார் திராவிடர் கழகம் கேட்டுக் கொள்கிறது.

**5 )** கோவை, ஈரோடு, நாமக்கல், கரூர் மாவட்டங்களின் முதன்மைத் தொழிலான நெசவுத் தொழில் நசிந்து போகவும், அதனால் நெசவுத் தொழிலை நம்பியே வாழும் இலட்சக்கணக்கான மக்களை வறுமையிலும், பட்டினியிலும் ஆழ்த்தும் அரசின் வரி விதிப்புக் கொள்கையை மறுபரிசீலனை செய்து, வரி விகிதங்களில் உரிய மாற்றங்கள் செய்ய வேண்டுமென தந்தை பெரியார் திராவிடர் கழகம் வலியுறுத்துகிறது. ❑

### சுப்புலட்சுமி ஜெகதீசன்

ஈரோட்டில் மாநில கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது - தேனீர் இடைவேளையின் போது, கழகத் தோழர்களை சந்திக்க வந்தார், தொகுதியின் தி.மு.க. நாடாளுமன்ற வேட்பாளர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன். தோழர்களிடையே சிறிது நேரம் உரையாற்றினார். "கருஞ்சட்டைப் படையினரிடம் எப்போதுமே கொள்கை ரீதியாக மிகவும் நெருக்கமாக இருந்து வருகிறேன்; ஒரு வேட்பாளர் என்ற முறையில் நான் இங்கு வரவில்லை; கருஞ்சட்டைத் தோழர்களை சந்திக்கவே வந்தேன்; வந்தபோது நீங்கள் தி.மு.க. அணிக்கு ஆதரவு தர முடிவு செய்துள்ளதை அறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தேன். தந்தை பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து உண்மையாகவே பெரியார் லட்சியங்களுக்காக உழைத்து வரும் இயக்கம் என்பதை நான் அறிவேன். எதிர்காலத்திலும் - பெரியார் லட்சியத்தில், உறுதியாக செயல்படக்கூடிய இயக்கம் இது தான் (கைதட்டல்). இங்கே மாநிலக் கலந்துரையாடல் கூட்டம் நடப்பதை அறிந்து, மாவட்ட செலயாளர் தம்பி இளங்கோவனிடம், தோழர்களை சந்திக்க வரலாமா என்று நானே கேட்டேன்; தாராளமாக வாருங்கள் என்றார்; உங்களை எல்லாம் சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் என்றார் சுப்புலட்சுமி ஜெகதீசன்.

### ஒருங்கிணைப்பாளர்கள்

கழகத்தின் களப்பணி ஒருங்கிணைப்பாளர்களான திண்டுக்கல் தாமரைக் கண்ணன், கொளத்தூர் குமார், பொள்ளாச்சி பிரகாஷ் ஆகிய மூவருடன், சென்னை கேசவன், திருப்பூர் அங்ககுமார், சின்ன உடைப்பு பெரியசாமி ஆகியோரும் களப்பணி ஒருங்கிணைப் பாளர்களாக செயல்படுவார்கள் என்று, ஈரோட்டில் கூடிய கழகத்தின் மாநில கலந்துரையாடல் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

### நூல் விற்பனைக் குழு

கழகத்தின் நூல் விற்பனைக்குழு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான முடிவு - ஈரோட்டில் கூடிய கழக மாநில கலந்துரையாடல் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. நூல் விற்பனைக்குப் பொறுப்பேற்று - அந்தந்த மாவட்டங்களில் விற்பனை செய்யும் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ள தோழர்கள்: கோவை - சோமு; சேலம் - சக்திகுமார்; தர்மபுரி - மூவேந்தன்; ஈரோடு- பொ.பொன்னுசாமி; புதுவை - வீரமோகன்; சென்னை - உமாபதி; திண்டுக்கல் - ஆல்பர்ட்; மதுரை - மாயாண்டி; திருச்சி - எஸ்.டி.இராசேந்திரன், பெரம்பலூர் - இலட்சுமணன்; வேலூர் - திலீபன்; இராமேசுவரம் - நாகேசுவரன்; மயிலாடுதுறை - இளையராசா.

### இரங்கல்

திராவிடர் கழக பொதுச்செயலாளர் துரை. சக்ரவர்த்தி, ஈரோடு மாவட்ட திராவிடர் கழக முன்னாள் தலைவர் ஈரோடு நடேசனார், ஈரோடு மாவட்ட தி.க. முன்னாள் துணைத் தலைவர் அக்கிரகாரம் பெருமாள், செம்பனார் கோயில் எஸ்.பி. கோதண்டபாணி, சென்னை மாவட்டக் கழகத் தோழர் இரமேஷ், சின்ன உடைப்பு வீரமணி, சுந்தரம், பட்டுக்கோட்டை கழகத் தோழர் என்.ஆர்.சந்திரன் ஆகியோர் மறைவுக்கு ஈரோடு, கலந்துரையாடல் கூட்டத்தில் இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ❑

தலையங்கம்

# ஈரோடு தீர்மானம்

ஈரோட்டில் மார்ச் 28 ஆம் தேதி கூடிய கழகத்தின் மாநில கலந்துரையாடல் கூட்டம் – தேர்தலில், தி.மு.க. தலைமையில் அமைந்துள்ள கூட்டணியை ஆதரிக்க முடிவு செய்துள்ளது. ஏற்கனவே கழகம் நடத்தி வரும் பிரச்சார இயக்கத்தின் தொடர்ச்சியாகவே – இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மத்தியில் வாஜ்பாய் ஆட்சியும் – தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சியும், வெவ்வேறு அணிகளில் இருந்தாலும் கூட, பார்ப்பன மதவெறிக் கொள்கைகளில் இரண்டும் ஒரே படகில் சவாரி செய்யும் ஆட்சிகளாகவே இருந்தன. இதைப் புரிந்து கொண்டு தான் பா.ஜ.க., அ.தி.மு.க. எனும் வர்ணாஸ்ரமக் கூட்டணிக்கு எதிரான பிரச்சாரத்தை, கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலேயே தந்தை பெரியார் திராவிடர் கழகம் துவக்கியது. ‘வீழ்த்துவோம் வர்ணாஸ்ரமத்தை’ என்ற முழக்கத்தை முன் வைத்து கழகம் இந்த இயக்கத்தை நடத்திய போது, நாம் மட்டும் அந்தப் பிரச்சாரக் களத்தில் தனித்து நின்றோம். இப்போது, மதச்சார்பற்ற கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகள் பலவும், அப்போது, வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி அமைச்சரவையில் இடம் பிடித்திருந்தன; எனவே அந்தக் கட்சிகள், தமிழ்நாட்டைச் சூழ்ந்து நின்ற இந்த ஆபத்துகளின் முழுப் பரிமாணத்தை உணரவில்லையே என்ற வருத்தம் நமக்கு உண்டு.

தமிழ் நாட்டில் – பா.ஜ.க.வுடன் தனக்கு எவ்வித உறவும் இல்லை என்று தி.மு.க. வெளிப்படையாகவே அறிவித்தாலும், மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த காரணத்தால், அடக்கி வாசிக்கவே விரும்பியது. ‘பொடா’ சட்டத்தை ஆதரித்த ம.தி.மு.க.வுக்கு எதிராகவே, ஜெயலலிதா இந்த சட்டத்தைப் பயன்படுத்தினார். மதமாற்றத் தடைச் சட்டத்தை கொண்டு வந்த போதும், கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை சங்பரிவார்களின் கண்ணோட்டத்திலே கண்டித்த போதும், மோடி பதவி ஏற்பு விழாவுக்கு, தனி விமானத்திலே பறந்து போய், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டபோதும், சோனியா ஒரு அன்னியர் என்று, கோட்டையிலேயே பேட்டி அளித்த போதும், ஜெயலலிதாவை பா.ஜ.க. வட்டாரங்கள் போற்றிப் புகழ்ந்தன. பா.ஜ.க.வின் தூதுவரான காஞ்சி சங்கராச்சாரியை – தமிழக அரசின் வழிகாட்டியாகவே ஜெயலலிதா அங்கீகரித்தார்; மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், தேசிய ஜனநாயக முன்னணியில் இடம் பெற்றிருந்த தமிழக கட்சிகள் மவுன சாட்சிகளாக இருந்ததும், மற்றொரு புறத்தில் ஜெயலலிதாவின் ஆட்சி, தீவிரமாக சங்பரிவார் கொள்கைகளைப் பின்பற்றியதும் – பா.ஜ.க.வுக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பமாகிவிட்டது. பாட நூல்களில் வரலாறுகளை மாற்றினார்கள்; சமஸ்கிருதத்தை வளர்த்தார்கள்; ஆளுநர்களாக ஆர்.எஸ்.எஸ்.காரர்களைத் திணித்தார்கள்; கல்வி தொடர்பான நிறுவனங்களிலும், ஆராய்ச்சி மய்யங்களிலும் காவிச் சிந்தனையாளர்களைக் கொண்டு வந்து அமர்த்தினார்கள். ‘பொடா’ சட்டத்தை நிறைவேற்ற – இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தைக் கூட்டி நிறைவேற்றினார்கள். அயோத்தியில் நீதிமன்றத்தால் – ராமன் கோயில் கட்டுவதற்கு தடை செய்யப்பட்ட இடத்தில், மீண்டும் ராமன் கோயிலைக் கட்ட, தடையை நீக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். இப்படி மடமட வென்று – எதிர்ப்புகள் எதுவுமின்றி, பா.ஜ.க.வின் செயல் திட்டங்கள் அரங்கேற்றப்பட்டன!

தேர்தல் அறிவிக்கப்பட்ட போதுதான் – அணி மாற்றங்கள் ஏற்பட்டன. பா.ஜ.க. – அ.இ.அ.தி.மு.க. அணி, கைகோர்த்துக் கொண்டு பகிரங்கமாக வெளியே வந்தது. தி.மு.க. – காங்கிரஸ், ம.தி.மு.க., பா.ம.க., இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒரே அணியில் இணைந்தன; இந்தச் சூழ்நிலையில் ‘வீழ்த்துவோம், வர்ணாஸ்ரமத்தை’ என்ற முழக்கத்தை இந்தத் தேர்தல் களத்திலும் அதன் தொடர்ச்சியான செயல்பாடாக கழகம் முன் வைத்துள்ளது. இதையே, கழகத்தின் தீர்மானமும் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறது.

தமிழ்நாட்டில் வேறூன்றி வரும் பார்ப்பன – இந்துத்துவா ஆபத்துக்களை முறியடிக்க – தமிழகத்தில் வலிமையாக உருவாகியுள்ள மதச்சார்பற்ற கூட்டணியை நாம் கொள்கை ரீதியாக முடுக்க வேண்டும். அதற்கேற்ப – பிரச்சாரத் திட்டங்களை வகுத்து செயல்பட வேண்டியது அவசியமாகும்.

தமிழ்நாட்டில் தமிழின உணர்வைப் பேசிவந்த சில சுயநல சக்திகள் – சங்பரிவார் சூழ்ச்சி வலையில் விழுந்திருப்பது உண்மையிலே வேதனைக்குரியதாகும். நம் கைகளைக் கொண்டே நம் கண்களைக் குத்தும் சதி வேலைகளைப் பார்ப்பனர்கள் தீவிரமாகத் துவக்கி இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் – வேகமாக வளருவதற்கு – சங்பரிவார்கள் திட்ட மிட்டுக் காய்களை நகர்த்துகின்றனர். இதற்கு தேர்தலை அவர்கள் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தும் போது, நாம் ஒதுங்கி நிற்க முடியாது. எனவே தேர்தல் களத்தை பார்ப்பன – இந்துத்துவ சக்திகளின் எதிர்ப்புக் களமாக நாம் வார்த்தெடுக்க வேண்டியது அவசியமாகிறது; என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

# திருச்சியில் ‘குடிஅரசு 1925’ நூல் அறிமுகக் கூட்டம்

திருச்சியில் ‘குடிஅரசு 1925’ அறிமுகக் கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது. பெரியாரின் எழுத்தும் பேச்சும் - தொகுதிகள் தொடர்ந்து வெளியிடப்படும் என்று, கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தெரிவித்தார். நிகழ்ச்சி விவரம்:

திருச்சி மரக்கடை அருகே உள்ள திருச்சி மாவட்ட வியாபாரக் கழகம் ஞானராஜ் அரங்கத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழக வெளியீடான பெரியாரின் எழுத்தும் பேச்சும் அடங்கிய குடிஅரசு 1925 நூல் முதல் தொகுதி அறிமுகக் கூட்டம் சிறப்புடன் நடந்தது.

நூலை தி.மு.க. வெளியீட்டு செயலாளர் செல்வேந்திரன் அறிமுகப் படுத்தி வெளியிட்டார். திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் கே.என். சேகரன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சிக்கு சிந்தனையாளர் கழகத்தைச் சேர்ந்த கு.ம.சுப்பிரமணின் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் செல்வராசு, ம.தி.மு.க. மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் கங்கை செல்வன், தமிழர் அறிவியக்கப் பேரவை குறள் மொழி, தொழிலதிபர்கள் மார்க்கெட் ஆறுமுகம், தங்கவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக திருச்சி மாவட்ட தந்தை பெரியார் திராவிட கழக அமைப்பாளர் இராசேந்திரன் வரவேற்றுப் பேசினார். கழக களப்பணி ஒருங்கிணைப்பாளர் தாமரைக்கண்ணன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி பேசியதாவது:

வெளிநாடுகளில் பொது உடைமை கருத்துக்களை பரப்பிய லெனின், காரல் மார்க்ஸ் போன்றவர்களின் சிந்தனைகள் தொகுக்கப்பட்டு புத்தகமாக வெளி வந்துள்ளன. ஆனால் தமிழகத்தில் பொது உரிமை கருத்துக்களைப் பரப்பிய தந்தை பெரியாரின் சிந்தனைகள் முழுமையான புத்தக வடிவம் பெறாமலே இருந்து வந்தன. அந்த குறையை போக்கத்தான் பெரியாரின் சிந்தனைகளும் பேச்சும் இப்போது முழுமையாகத் தொகுக்கப்பட்ட புத்தகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நம் சமுதாயத்தை அடுத்த நிலைக்கு முன்னேற்றம் அடையச் செய்ய இது போன்ற புத்தகங்கள் பயன்படும்.

சாதி என்ற சக்கரத்தை சுற்ற விட்டு விட்டு ஒன்றும் தெரியாதது போல மறைந்திருப்பவர்களை பெரியார் இந்த புத்தகத்தில் நமக்கு அடையாளம் காட்டுகிறார். மதப்போர்வைக்குள் ஒளிந்திருப்பவர்களையும் துகிலுரித்துக் காட்டுகிறார்.

ஒருவரது மூலத்தைப் படித்தால் தான் அவரைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியும். பெரியார் 1948-ல் திருக்குறள் மாநாடு நடத்திய பின்னர் தான் அது பற்றி மக்களுக்குத் தெரிய வந்தது.

பெரியார் 1925-ல் குடி அரசு பத்திரிகையில் எழுதியவற்றையும் பேசியவற்றையும் தொகுத்துத் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்று திட்டமிட்டுள்ளோம்.

1926-ல் ‘பெரியாரின் சிந்தனைகள்’ என்ற அடுத்த தொகுப்பு 2 மாதங்களில் வெளிவரும் என்றார் கொளத்தூர் மணி.

புத்தகத்தை அறிமுகம் செய்து தி.மு.க. வெளியீட்டுச் செயலர் செல்வேந்திரன் பேசுகையில், பெரியாரின் கருத்துகளை உணவு போல் வைத்திருக்க வேண்டும். தேவைப்படும்போது எடுத்துக் கொள்ளும் மருந்து போல வைத்திருக்கக் கூடாது” என்றார். ❑

# ‘வாஸ்துச் செடி’ மோசடி... ஏமாந்த ஆசிரியர்கள்!

சேலம் மாவட்டம், தாரமங்கலத்திலுள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றில், மோசடிப் பேர்வழி ஒருவன் ‘வாஸ்து செடி’ என்ற பெயரில் ஒருவகையான செடியை விற்பனை செய்துஏமாற்றியிருக்கிறான். ஏமாந்தது மாணவர்கள் அல்ல... பாடம் நடத்தும் ஆசிரியர்கள் என்பதுதான் கொடுமை.

சில நாட்களுக்கு முன் நாகரீகமாக உடை அணிந்து கொண்டு ஒரு ஆசாமி அந்த பள்ளிக்கு வந்திருக்கிறான். ஆசிரியர்களை சந்தித்த ஆசாமி, தான் தோட்டக்கலை நிபுணரென்றும், ஒவ்வொரு பள்ளிக்கும் சென்று பல அபூர்வ ‘வாஸ்துச் செடி’களைப் பற்றி விளக்கிச் சொல்லி வருவதாகவும் கூறியிருக்கிறான்.

ஒவ்வொரு செடியையும் எடுத்து விளக்கம் கொடுத்திருக்கிறான். “இது சந்தன மல்லிச் செடி! இது வேறெங்கும் கிடைக்காது. கோவையில் எனது ஆராய்ச்சி மையத்தில் மட்டும்தான் கிடைக்கும். இது அபூர்வ ‘வாஸ்து’ செம்பருத்திச் செடி! இதை வீட்டின் வாசலிலிருந்து மூன்று அடி இடைவெளிவிட்டு, நட்டு வைத்து தினம் நீரூற்றி வந்தால் வாஸ்து முறைப்படி கட்டாத வீடுகள்கூட இடித்துக் கட்டாமலேயே சரியாகி, குடும்பம் நன்றாக இருக்கும். வீட்டில் செல்வம் கொழிக்கும்” என்று பேராசை காட்டியிருக்கிறான்.

உடனே அனைத்து ஆசிரியர்களும் எனக்கு, உனக்கு எனறு போட்டிப் போட்டு, அந்த மோசடி ஆசாமி சொன்ன அதிக விலையைக் கூட பொருட்படுத்தாமல் செடிகளை வாங்கினார்கள்.

செடிகளை வியாபாரம் செய்து முடித்த ஆசாமி, ‘செடிகள் எப்படி வளர்கின்றன என்பதைப் பற்றி கோவை ஆராய்ச்சி மையத்திலுள்ள இந்த தொலை பேசி எண்ணில் தகவல் சொல்லுங்கள்’ என்று தனது முகவரி அட்டையை கொடுத்துச் சென்றானாம்.

ஆசிரியர்கள் செடிகளை வீட்டில் நன்றாக நட்டு வைத்து நீரூற்றி வந்தார்கள். இரண்டு, மூன்று வாரங்களில் செடிகள் காய்ந்து கருகிவிட்டன. எந்தச் செடியும் உருப்படியாய் பிழைக்கவில்லை. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த ஆசிரியர்கள், கோவை ஆசாமி கொடுத்த தொலைபேசி எண்ணில் கடந்த வாரம் பேசியிருக்கிறார்கள். எதிர்முனையில் “ஆராய்ச்சி மையமும் இல்லை, இங்கே எந்த வாஸ்து செடியும் இல்லை. இது ஒரு மோட்டார் கம்பெனிங்க. எங்க தொலைபேசி எண்ணைக் கொடுத்து, உங்களை எவனோ ஒருத்தன் நல்லா ஏமாத்தியிருக்கான். இனி மேல் எங்களை எந்த தொந்தரவும் செய்யாதீர்கள்” என்று ஒரு பெண்ணின் குரல் கோபமாக ஒலித்திருக் கிறது.

ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பது அப்போதுதான் ஆசிரியர்களுக்கு ஒட்டு மொத்தமாக உறைத்திருக் கிறது. வாஸ்து செடிகளை வாங்கி ஏமாந்தவர்களில் அறிவியல் ஆசிரியரும் ஒருவராம்.

போளூரில் 24.4.1927-ல் நடந்த ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் இப்படிப் பேசினார்கள்: “**நீங்கள் எப்படி பிள்ளைகளை படிப்பிக்கின்றீர்களோ அப்படியே அவர்கள் தேசத்திற்கும், தேச நன்மைக்கும், ஒழுக்கத்திற்கும்** உரிய மக்களாய் வாழக் கூடும். எனவே, தேசம் மக்களாலும், மக்கள் ஆசிரியர்களாலும் உருப்பட வேண்டி இருக்கிறது”

- தந்தை பெரியாரின் வார்த்தைகளை ஆசிரியர்கள் சிந்தித்து உணர்வார்களா? ஆசிரியர்களே மூடத்தனங்களை நம்பி ஏமாந்தால், அவர்களிடம் கற்கும் மாணவர்களின் கதி என்னாவது?

~ பவளத்தானூர் ஏ. மாரியப்பன்

**ஆர்.எஸ்.எஸ். இந்து பாசிசம்**

‘சுயமரியாதை வீரர்’ நாத்திகம் பி.இராமசாமி, ‘ஆர்.எஸ்.எஸ். இந்து பாசிசம்’ நூலை மூன்றாம் பதிப்பாக வெளியிட்டுள்ளார்; சங்பரிவார்களின் பார்ப்பன முகமூடியைக் கிழிக்கும் பல்வேறு வரலாற்றுச் செய்திகளுடன், தொகுத்துத் தந்திருக்கிறார், நூலாசிரியர்.

நன்கொடை: உரு.40; கிடைக்குமிடம்: ‘நாத்திகம் கட்டிடம்’, 97/55, என்.எஸ்.கிருஷ்ணன் சாலை, கோடம்பாக்கம், சென்னை-600 024. தொ.பே. 52134024

# ஜெயலலிதா ஆட்சியில் ஆர்.எஸ்.எஸ். கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி

தென்னகத்தில் - சங் பரிவார் சக்திகள் வேகமாகக் காலூன்றி வருவது பற்றி 'பிரன்ட் லைன்' இதழ் (மார்ச் 26, 2004) கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு, கேரளம், கருநாடக மாநிலங்களின் நிலை அதில் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் சங் பரிவார் எப்படி வளர்ந்து கொண்டிருக் கிறது; குறிப்பாகக் கல்வி நிறுவனங்களில்; என்பது பற்றி, எஸ்.விசுவநாதன் எழுதியுள்ள கட்டுரையை - இங்கு தமிழில் வெளியிடுகிறோம். மூத்த பத்திரிகையாளர் விசுவநாதன், ஆழமான சமூகக் கண்ணோட்டத்தோடு, தலித் மக்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து எழுதி வருபவர்.

''தமிழ்நாட்டில் இன்று ஜெயலலிதா தலைமையில் ஆன்மீக ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது'' குடந்தையில் - மகாமகக் குளத்தில் புனித முழுக்குப் போட்டுவிட்டு - தமிழக இந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.சி.இராமசாமி, மார்ச் 6ம் தேதி இவ்வாறு பத்திரிகையாளர்களிடம் கூறினார். குடந்தை மகாமகக் குளத்தில் முழுக்குப் போட்டவர்கள் சுமார் 10 லட்சம் பக்தர்கள் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் - திரிசூலங்களைக் கையில் ஏந்திக் கொண்டு புரோகிதர்களும் முழுக்குப் போட்டார்கள்.

ஜெயலலிதா ஆட்சியில், 2822 கோயில்கள் புனரமைப்பு செய்யப்பட்டன என்றும் அமைச்சர் அந்தப் பேட்டியில் கூறினார். தமிழக அரசு, எந்தப் பிரச்சினைக்கு முன்னுரிமை தருகிறது என்பதை அவரது பேட்டி உணர்த்துகிறது. அதே நேரத்தில், மத நம்பிக்கைகளைப் பயன்படுத்தி, தங்களின் வகுப்புவாத திட்டங்களைத் தீவிரப்படுத்தி அதன் மூலம் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கும் சங்பரிவார்களுக்கு வசதியான, இலகுவான சூழலை, தமிழக அரசு உருவாக்கித் தருகிறது என்பதையும், உணர முடிகிறது.

பாரதிய ஜனதா கட்சி மத்தியில் ஆட்சியில் இருப்பதும், தமிழ்நாட்டில் அ.தி.மு.க., தி.மு.க. கட்சிகள் தொடர்ந்து பா.ஜ.கவை ஆதரித்து வந்ததும், சங் பரிவார்களுக்கு நல்வாய்ப்பாக அமைந்து விட்டது. தேர்தல் லாபத்துக்காக, திராவிட கட்சிகள் மேற்கொண்ட இந்த அணுகு முறைகள், பெரியார் உருவாக்கிய திராவிடர் இயக்க லட்சியங்களின் அடித்தளத்தை நீர்த்துப் போகச் செய்துவிட்டது என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்தாகும். அதே நேரத்தில் இந்துத்துவா வளர்வதற்கும், இது வாய்ப்பாகி விட்டது. தி.மு.க. ஆட்சியில் இருந்த போது, சங்பரிவார்களுக்கு, கொள்கை ரீதியான ஆதரவு தராமல், அதே நேரத்தில் சங்பரிவார்களைக் கடுமையாக எதிர்க்காத அணுகு முறையை மேற்கொண்டது. சங்பரிவார்களின், பொது சிவில் சட்டம் , அயோத்தி ராமன் கோயில் பிரச்சினைகளில், திமுக உடன்படவில்லை. ஆனால், அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, சங் பரிவார்களின் கொள்கைகளை ஆதரிப்பதில் எந்தத் தயக்கமும் காட்டவில்லை. இன்னும் ஒரு படி மேலே போய், இந்துத்துவா கொள்கைகளை அமுல்படுத்துவதில், சங்பரிவார்களையே முந்திக் கொண்டு, முன்னோடியாக செயல்பட்டது. பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் கொண்டு வரப்படாத சட்டங்களை எல்லாம் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி கொண்டு வந்தது. அதில் ஒன்று மதமாற்றத் தடைச் சட்டம். இந்தச் சட்டத்தை மத்தியில் பா.ஜ.க. அணியில் இடம் பெற்றிருந்த போதிலும், தி.மு.க. எதிர்த்தது. கோயில்களைப் புதுப்பிக்க தாராளமாக நிதி ஒதுக்குதல், பூசாரிகளுக்கு பென்ஷன், கோயில்களில் அன்னதானம், 150 இந்துக் கோயில்களில் ஆன்மீகப் பயிற்சிகள், இந்துக்களுக்கு மட்டும் கோயில்களில் இலவசத் திருமணம் என்று பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தினார் ஜெயலலிதா.

1991-96ல் முதல்முறையாக ஜெயலலிதா முதலமைச்சரானவுடன், அர்ச்சர்களுக்கு வேத பாடசாலைகளை ஆரம்பித்தார். மைனாரிட்டிகள் நடத்தும் கல்வி நிறுவனங்களில், அரசு தலையிட உரிமை உண்டு என்று அவசரச் சட்டம் பிறப்பித்தார். கடும் எதிர்ப்புக்குப் பிறகு அதைத் திரும்பப் பெற்றார். 1992 நவம்பரில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில், அயோத்தியில் 'கரசேவை' நடத்த அனுமதிக்க வேண்டும் என்றார். அடுத்த 15 நாட்களில் பாபர் மசூதியை இடித்து விட்டார்கள்.

கடந்த 5 ஆண்டுகளாக அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, இந்துத்துவா செயல்திட்டங்களுக்கு உடன்பட்டு, ஒத்துழைத்து வருகிறது. அதில் ஒன்று 'வினாயகன்' ஊர்வலம். மைனாரிட்டி மக்களுக்கு எதிரான கலவரங்களை உருவாக்கவே, இந்த ஊர்வலம் முதல் சில ஆண்டுகள் பயன்படுத்தப்பட்டன. இப்போது இரண்டு திராவிடக் கட்சியினருமே, தங்கள் கட்சிக் கொடிகளுடன் 'வினாயகன்' ஊர்வலத்தில் கலந்து கொள்வதைப் பார்க்க முடிகிறது.

கிராமப் பூசாரிகளை ஒருங்கிணைத்து, அவர்களுக்கு அரசு உதவிகளைப் பெற்றுத் தரும் திட்டத்தை விசுவ இந்து பரிஷத், இந்து முன்னணி அமைப்புகள் கையில் எடுத்தன. ஆயிரக்கணக்கான கிராமக் கோயில்களை, தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதே, அவர்கள் நோக்கம். கிராமக் கோயில்களை 'பார்ப்பனமயமாக்கி', தலித் பிற்படுத்தப்பட்டவர்களை தங்களுக்கு ஆதரவாக மாற்றிக் கொள்வதே, இவர்களின் நோக்கம் என்கிறார் இது பற்றி ஆய்வு செய்துவரும் பேராசிரியர் சிவ சுப்பிரமணியன்.

கோயில்களில் ஆடு, கோழி வெட்டத் தடை செய்து ஜெயலலிதா ஆட்சி பிறப்பித்த உத்தரவு - சங்பரிவார்களுக்கு ஆதரவானதாகும்! (இதில் நமக்கு மாறுபட்ட கருத்து உண்டு; சங்பரிவார்க்கு மூளையாக செயல்படும் பார்ப்பனர் குருமூர்த்தி - இந்த ஆணையை எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.)

தமிழகத்தில் தலித் மக்கள் வாழும் பகுதிகளில் 120 கோயில்களைக் கட்டியுள்ளதாக விசுவ இந்து பரிஷத் கூறுகிறது. இந்தக் கோயில்களில் எல்லா சமூகத்தினரும் சென்று வழிபடுகிறார்கள் என்றும் அது கூறுகிறது. இதனால் தீண்டாமைப் பிரச்சினை பெருமளவு குறைந்து விட்டதாகவும் அந்த அமைப்பினர் கூறுகிறார்கள். உண்மையில், தலித் மக்களின் கோரிக்கை, தங்களுக்குத் தனிக் கோயில்கள் வேண்டும் என்பது அன்று. அனைத்துப் பெரும் கோயில்களிலும், சட்டம் வழங்கியிருக்கிற உரிமைப்படி, உள்ளே நுழையும் உரிமை வேண்டும் என்பதற்கே பல பகுதிகளில் போராடுகிறார்கள். ஆனால், இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக, விசுவ இந்து பரிஷத்தோ அல்லது அவர்களின் ஆதரவு அமைப்புகளோ, எந்த ஒரு இடத்திலும், இவர்களுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்று சிந்தித்ததுகூட இல்லை. சாதி ஒடுக்கு முறையை எதிர்த்து தமிழ்நாட்டின் பல பகுதிகளில், தலித் மக்கள் நடத்திய போராட்டத்தை இவர்கள் ஆதரித்ததும் இல்லை; பல நேரங்களில் சாதி ஆதிக்க வாதிகளின் ஆதரவோடுதான், தங்கள் மதவாத நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக - கல்வித் துறையில் இந்துத்துவாவின் ஊடுறுவல் கணிசமாக அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் சங்பரிவார் துணை அமைப்பான 'வித்யாபாரதி அகில் பாரதிய ஷிக்ஷா, சனஸ்தான்' என்ற அமைப்பு. தமிழகத்தில் சுமார் 150 பள்ளிகளை நடத்தி வருகிறது. 'இந்தியக் கலாச்சாரத்தையும் - அதன் வாழ்க்கை முறையையும்' பரப்பிடும் ஒருங்கிணைந்த கல்வியைத் தருவதே, இந்தப் பள்ளிகளின் நோக்கம் என்று கூறுகிறார்கள். இதில் - விசுவ இந்து பரிஷத் 'இந்து வித்யாலயா' என்ற பெயரில் 24 பள்ளிகளை நடத்தி வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக, இந்தப் பள்ளிகளின் எண்ணிக்கைக் கணிசமாக அதிகரித்துள்ளது. உதாரணமாக, 'விவேகானந்தா கல்விக் கழகம்' நடத்தும் பள்ளிகள் 1998ல் 10 ஆக இருந்தது; 2003ல் இது 16 ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு, மாணவர்கள் அங்கேயே தங்கிப் படிக்கும் 'குருகுலக்' கல்வியையும், இந்தக் கழகம் துவக்கியுள்ளது.

சென்னை புறநகர்ப் பகுதிகளில் தான் - இவைகள் அதிகமாக இயங்குகின்றன. மத்தியதர வர்க்கத்தினர் வீட்டுப் பிள்ளைகள் தான் இதில் படிக்கிறார்கள். 17,000 மாணவர்களுக்கு, யோகா, இசை, நடனம், உடற்பயிற்சிகளைக் கற்றுத் தருகிறார்கள். இந்தி, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றோடு, சமஸ்கிருதம் கட்டாயமாகக் கற்றுத் தரப்படுகிறது. பொது ஒழுக்கக் கல்வி என்ற பெயரில், இதிகாசங்கள், புராணங்கள் கற்பிக்கப்படுகின்றன.

இந்தப் பள்ளிகளில் பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களின் விண்ணப்பங்களை - அருகில் உள்ள இந்துக் கோயில்களுக்கு எடுத்துப் போய், கடவுள் சிலையின் காலடியில் வைத்து, வணங்கும் வழக்கம் இந்தப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. எந்த மதத்தினராக இருந்தாலும், இந்த சடங்கைக் கட்டாயம் செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் 'புத்துணர்ச்சி' பயிற்சிகள் தரப்படுகின்றன. ஒரு கட்டத்தில் மாணவர்களை கன்யாகுமரியில் உள்ள, விவேகானந்தா மய்யத்துக்கு அழைத்துச் சென்று, அங்கே அவர்களுக்கு 'ஷாகா'வைப் போல் (ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்பு) 21 நாட்கள் பயிற்சி தரப்படுகின்றன. ஆர்.எஸ்.எஸ்.க்கு, தொண்டர்களை தேர்வு செய்வதற்கு, இந்தப் பயிற்சிகள் பயன்படுகின்றன. எல்லாப் பள்ளிகளிலும், இந்துக் கடவுள்களின் படங்களோடு வழிபாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக வித்யாபாரதி பள்ளிகளில், 'தேசிய கல்வி மற்றும் ஆராய்ச்சிக் குழு' தயாரித்துள்ள பாட நூல்களே பயன்படுத்தப்படுகின்றன. (ஆர்.எஸ்.எஸ். ஆதரவு சிந்தனையாளர்களால், இந்தக் குழு உருவாக்கப்பட்டு, பாடத் திட்டங்கள் இந்துமத வெறிக் கண்ணோட்டதோடு உருவாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது - ஆர்) கடந்த காலங்களில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் மட்டுமே, இந்தப் பாடல் நூல்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இப்போது மேற்குறிப்பிட்டக் குழு, வரலாற்றை மாற்றி, பாட நூல்களை வெளியிடத் துவங்கியதால் எல்லா வகுப்புகளுக்கும், இந்தப் பாடங்களைப் பயன்படுத்தத் துவங்கி விட்டார்கள். ஆர்.எஸ்.எஸ். பயிற்சியாளர்களின் உதவியோடு இந்தப் பள்ளிகள், கோயில்களில் பெண்களுக்கான 'திருவிளக்கு' பூஜைகளை ஏற்பாடு செய்கின்றன. இந்தப் பள்ளிகளில் - ஆர்.எஸ்.எஸ் பயிற்சிகளுக்கும், இடமளிக்கப்படுகின்றன.

பல்கலைக் கழகங்களிலும், வேத சோதிடம், வேத கணிதம் என்ற பாடத் திட்டங்கள் புகுத்தப்பட்டுள்ளன. ஆனாலும், பல்கலைக் கழகங்களில், அகடமிக் கவுன்சில், செனட் மற்றும் சிண்டிகேட் அமைப்புகள், இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. உதாரணமாக, பல்கலைக் கழக நிதி உதவிக் குழு மேற்குறிப்பிட்டப் பாடங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்று கூறியபோது, மதுரை காமராசர் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும், பல்கலைக் கழகத்தின் பல்வேறு அமைப்புகளும், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்தப் பாடங்களை ஏற்கவிடாமல் தடுத்த விட்டன. (மதுரை பல்கலைக் கழகம் இந்தப் பாடங்களை ஏற்று நடத்திய நிலையில், தந்தை பெரியார் திராவிடர் கழகம், பல்கலைக் கழகத்தின் முன், இதை எதிர்த்து பஞ்சாங்க எரிப்புப் போராட்டம் நடத்தியது. 300 கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்; அதனைத் தொடர்ந்து, பல்கலைக் கழகத்துக்குள்ளும் எதிர்ப்பு வந்தது, பிறகு வேதச் சோதிடக் கல்வி நிறுத்தப்பட்டது. - ஆர்)

சென்னை பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. பட்டப் படிப்பில் 'நாட்டியம்' பற்றிய பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், இதற்கான பாடத் திட்டத்தை உருவாக்க முன் வந்தார்கள். ''இந்தப் பாடத் திட்டத்தில் விஞ்ஞான அடிப்படை இல்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன் அமுலில் இருந்த 'குரு-சிஷ்ய பரமபாரா' என்ற அறிவியலுக்கு மாறான முறையை, இப்போது, அறிவியலோடு இணைத்துத் தர முயற்சிக்கிறார்கள்'' என்று, பல்கலைக் கழகத்தின் பல்வேறு அமைப்புகள் எதிர்த்தன. எனவே துணைவேந்தர் இத் திட்டத்தைக் கிடப்பில் போட்டு விட்டார்.

இப்படி, அண்மைக்காலமாக - தமிழ்நாட்டில் சங்பரிவார் வளர்ச்சி அதிகரித்து வருகிறது. இது தமிழ்நாட்டின் நல்லிணக்கச் சூழலுக்கு கடும் ஆபத்தை உருவாக்கிடும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனாலும், இவைகளினால் பா.ஜ.க. தனது அரசியல் தளத்தை பெரிய அளவில் விரிவாக்கிக் கொள்ளும் வாய்ப்புகள் இல்லை என்றே தோன்றுகிறது. கன்யாகுமரி, கோவை மாவட்டங்கள் மட்டுமே, அந்த அமைப்புகள் வலிமையாகக் காலுன்றி உள்ளன.''

- இவ்வாறு 'பிரன்ட் லைன்' பத்திரிகை படம் பிடித்துள்ளது.

## ரஜினியின் 'வாய்ஸ்' யாருக்காக?

பாட்டாளி மக்கள் கட்சிப் போட்டியிடும் தொகுதிகளில் பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணியை ஆதரிப்பாராம், ரஜினி காந்த்! அறிவிப்பு வெளிவந்திருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காகவே 'வாய்ஸ்' கொடுப்பதாக, ரஜினி கூறி வருகிறார்; இப்போது பா.ம.க.வை எதிர்த்து ''வாய்ஸ்'' கொடுத்திருப்பது எதற்காக? மக்கள் நலனுக்காகவா?

ரஜினியின் 'பாபா' படத்தை - பா.ம.க. எதிர்த்ததால்; பா.ம.க.வை எதிர்க்கிறாராம்! எனவே தனது சொந்த நலனுக்காக - அவர் எதிர்த்து வந்த ஜெயலலிதாவுக்கு ஆதரவாகவே வாய்ஸ் கொடுத்திருக்கிறார் ரஜினி!

'பாபா' படத்தில் - பெரியார், ராஜாஜியாக மாறிவிட்டார் என்று வாலி பார்ப்பனர் ஒரு பாடல் எழுதினார்; அதை நமது கழகம் உட்பட பலரும் எதிர்த்தோம்; விடுதலை சிறுத்தைகள் பொதுச் செயலாளர் திருமாவளவனும் எதிர்த்தார்; அதற்காகவே, ரஜினி, இப்போது பா.ம.க.வை எதிர்க்கிறார்; சொந்தத் தொழிலை மக்கள் பிரச்சினையாக்கும் இவர்களை மக்கள் மன்றம் அடையாளம் காண வேண்டும்!

# பழனி கோயிலில் சங்கராச்சாரியின் 'நள்ளிரவு சதி' அனைத்துக் கட்சியினர் கண்டனம்

பழனி முருகன் கோவிலில் போகரால் நிறுவப்பட்ட நவபாசான மூலவர் சிலையை மறைத்து அம்பொன்னாலான புதிய சிலையை இரவோடு இரவாக நிறுவிய சங்கராச்சாரியாரைக் கண்டித்து கழகத்தின் சார்பில் 17.3.04 புதன் மாலை 6 மணிக்கு பழனி மின்வாரியம் எதிரில் கண்டனப் பொதுக்கூட்டம் நடந்தது.

பழனி நகர அமைப்பாளர் பெ.குருநாதன் தலைமையில் நடந்த கூட்டத்திற்கு கி.இராசா முன்னிலை வகிக்க, நகர அமைப்பாளர் இரா.நாத்திகன் வரவேற்புரையாற்றினார். நகர தி.மு.க. செயலாளர் க. குமாரசாமி, தி.மு.க. ஒன்றியச் செயலாளர் க.மாரியப்பன், நகர.ம.தி.மு.க. செயலாளர் கோ.சீனிவாசன், கழக மாவட்டத் தலைவர் த.சக்திவேல், கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பொள்ளாச்சி இரா.மனோகரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

"கடவுள் மறுப்பாளர்களான நாங்கள், பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து, தமிழர்களின் உரிமைக்காகவே இந்தக் கூட்டத்தை நடத்து கிறோம். சங்கராச்சாரியாரின் பார்ப்பன ஆதிக்கத்தை முறியடிக்க தமிழர்கள் முன் வரவேண்டும்" என்று தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் குறிப்பிட்டார்.

இறுதியில், தி.மு.க. அமைப்புச் செயலாளரான கோவை மு.இராம நாதன் சிறப்புரையாற்றினார். அவர் ஒன்றரை மணி நேரம் மிகச் சிறந்த முறையில், யாரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், பழனியின் பெயர்க் காரணம், பழனியின் உண்மையான வரலாறு, போகரால் உருவாக்கப்பட்ட புலிப்பாணி மடத்தின் வரலாறு, இடைக்காலத்தில் பார்ப்பனர்களால் உண்டான வழிபாட்டுத் தலங்களில் வல்லாண்மை, அதை அடியொட்டி தொடரும் பார்ப்பன ஆதிக்கம், சங்கராச்சாரியாரின் ஆகம விதிகளுக்கு எதரான நடவடிக்கைகள் என பல்வேறு செய்திகளை நுணுக்கமாகவும், தெளிவாகவும் பேசினார். இறுதியில் இரா. சங்கர் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர்கள் திண்டுக்கல் தாமரைக் கண்ணன், பொள்ளாச்சி பிரகாசு மற்றும் பழனி நகர மன்ற உறுப்பினர் ச.பற்குணம், பழனி ஒன்றிய ம.தி.மு.க. துணைச் செயலாளர் கே.பிச்சை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பொது மக்கள் பெருமளவு கலந்து கொண்டு சிறப்பித்த இக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஜே.ஜோசப், வைரமுத்து, தமிழ்முத்து, கல்யாண சுந்தரம், மோகன், மருதமூர்த்தி, பொன்ராசு, அடிவாரம் மோகன், மணிகண்டன், சுல்தான், சிவக்குமார் மற்றும் அழகாபுரி, பழனி தோழர்கள் செய்திருந்தனர்.

# திருப்பூரில் மக்கள் விழிப்புணர்வுக் கூட்டம்

21.3.2004 ஞாயிறன்று கழகத்தின் சார்பில் திருப்பூர் வளையன்காடு முதன்மை சாலையில் "மக்கள் விழிப்புணர்வுப் பொதுக் கூட்டம்" நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் ச.முத்து தலைமையேற்க தோழர் சி.இராணவன் வரவேற்றார். தோழர்கள் க.அகிலன், வீ.குமார், இர.குமார், இரா.மூர்த்தி, சண்முகம், மணி, முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக கழகப் பாடகர் தியாகு பகுத்தறிவுப் பாடல்களை பாடினார். மாநில நிதிக்குழு உறுப்பினர் இல.அங்ககுமார் பேசிய பிறகு, கழகப் பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஒன்றிய இளைஞரணி செயலாளர் இர.குமார், 'பெரியார் முழக்கம்' இதழுக்கான 5 சந்தாக்களை கழகத் தலைவரிடம் வழங்கினார். பேராசிரியர் பெரியார்தாசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

# சாதி மறுப்பு இயக்கங்களின் கூட்டமைப்பு

29.2.2004 ஞாயிறு காலை 11 மணிக்கு திண்டுக்கல் தாமரைக்கண்ணன் இல்லத்தில் "சாதி மறுப்புத் திருமணக் கூட்டமைப்பின்" கலந்துரையாடல் நடைபெற்றது. கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1) இதுவரை சாதி மறுப்புத் திருமணக் கூட்டமைப்பு என இயங்கி வந்த இவ்வமைப்பு இனி "சாதி மறுப்பு இயக்கங்களின் கூட்டமைப்பு" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2) சாதி மறுப்புத் திருமணம் புரிந்தோர் கணக்கெடுப்புப் படிவம் இறுதி செய்யப்பட்டு அச்சிட ஏற்பாடு செய்யப்பட்டது.

3) சாதி மறுப்புக் கருத்தை தம் கொள்கையாய் வைத்திருக்கின்ற தனியார் நிறுவனங்களிடம் சாதி மறுப்புத் திருமணம் புரிந்தோருக்கும் அவர்கள் வாரிசுகளுக்கும் இடஒதுக்கீடு கோரத் தீர்மானிக்கப்பட்டது.

4) தமிழ்நாடு தழுவி சாதி மறுப்பாளர்களையும், அமைப்புகளையும் தொடர்பு கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

# மகளிர் நாளில் சிந்திப்போமா! பெண்களுக்கு மட்டும் எதற்கு?

- சில வேலைகளை பெண் செய்ய முடியாதென்று மனிதன் நினைப்பது எதற்கு ?
- பெண் தந்தையை, கணவனை, மகனை - சார்ந்து வாழவேண்டியிருப்பது எதற்கு ?
- பெண்ணுக்கு மட்டும் தாலி, மெட்டி, தோடு, மூக்குத்தி எதற்கு ?
- திருமணம் என்ற பெயரில் பெண் பிறந்த வீட்டை விட்டுப் போவது எதற்கு ?
- தாய், தந்தை இறந்தால் பெண் கொள்ளி வைக்க முடியாமல் இருப்பது எதற்கு ?
- தலை முடி வளர்த்து சடை போடுவது எதற்கு ?
- பெண்ணுக்குத் தனி உடை எதற்கு ?
- பூவும், பொட்டும் இவளுக்கு மட்டும் எதற்கு ?
- புகையிலை விரிச்சா போச்சு - என்கிற மாதிரி பெண்ணைக் குறித்த பழமொழிகள் எதற்கு ?
- கற்பு என்பது முழுக்க முழுக்க 'பொம்பிளைங்க சமாச்சாரமாக' இருப்பது எதற்கு ?
- இரவு வெளியில் தங்கிவிட்டு வரும் பெண் மீது மட்டும் சந்தேகம் எதற்கு ?
- உணவில், உடையில், சொத்தில் பெண்ணுக்கு பேதம் காட்டுவது எதற்கு ?
- தினம் மலம் கழிப்பது தீட்டு இல்லை - மாதத்தில் சிலநாள் இரத்தப் போக்கு மட்டும் தீட்டு என்பது எதற்கு ?
- குழந்தையைப் பெற்று வளர்ப்பவளுக்கு அறிவும், ஞானமும், தெளிவும் ஏற்பட வழி இல்லாமல், ஆண்கள் அதில் ஏகபோகம் கொள்வது எதற்கு ?
- குழந்தையை வளர்ப்பவளுடைய பேரில் சொத்து இல்லாமல் ஆணின் பேரில் சொத்து எதற்கு ?
- ஆணுக்கு பெண்டாட்டி, இரண்டாம் பெண்டாட்டி, வைப்பாட்டி, விலைமாது என்று தேவை இருக்கும்போது பெண் கல்லையோ, புல்லையோ கடைசிவரைக் கணவனாக மதிக்க வேண்டியது எதற்கு.
- மோகம். ஆணின் தன்மையாக மட்டும் சித்தரிக்கப்பட்டிருப்பது எதற்கு ?
- இயற்கையில் பாதிக்குப் பாதியாக இருக்கும் பெண்கள் கல்வியில், வேலை வாய்ப்பில் 5%, 10% என்று இருப்பது எதற்கு ?
- 50% மக்கட் தொகையில் இருக்கும் பெண்களுக்கு 30% மட்டும் இட ஒதுக்கீடு செய்யும் தரும சிந்தனை எதற்கு ?
- சிந்திக்கும் கோணங்களில் எல்லாம், பார்க்கும் இடங்களில் எல்லாம் பெண்ணுக்கு மட்டும் உலகம் முழுவதும் பேதமும், இடர்பாடும் எதற்கு ?

நன்றி: சங்கமித்ரா சிந்தனைகள்

கோவை, மாணவர் கழக சார்பில் மகளிர் நாளில் - வழங்கப்பட்ட துண்டறிக்கை

## ஈரோடு மாவட்ட புதிய பொறுப்பாளர்கள்

ஈரோடு மாவட்டக் கழகத்துக்கு புதிய பொறுப்பாளர்களை - மாநில கலந்துரையாடல் கூட்டத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார்.

ஈரோடு மாவட்ட பகுத்தறிவாளர் கழக அமைப்பாளர் - செ.துரைசாமி, ஈரோடு நகரத் தலைவர் - பிரகாசபதி, ஈரோடு நகர அமைப்பாளர் - அழகேசன்.

## வாசகர் கடிதம்

பெரியார் முழக்கம் சிறப்பாக வருகிறது. 'காசி கோயிலை அவுரங்கசீப் ஏன் இடித்தார் ?' - தேவையான, அறிய வேண்டிய செய்தி. மேலும் தமிழக அரசியல், கொள்கையற்ற போக்கு, எதிர்காலத்தில் பெரியாரியலின் பங்கு பணி போன்றவை குறித்து எழுதினால் இன்னும் சிறப்பாக அமையும். பெண்ணியம் குறித்தும் கூடுதலான தகவல்களை வெளியிட வேண்டும்.

- **பூ. மணிமாறன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை.

### "புரட்சிப் பெரியார் முழக்கம்"

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/- சந்தாதாரர் ஆகி விட்டீர்களா?**

தொடர்புக்கு:
ஆசிரியர், எண்.29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041.
தொலைபேசி: 2451 2857, 2847 4830

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 2nd April 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஏப்ரல் 8, 2004 | புரட்சி 3 | முழக்கம் 13 | விலை : ரூ.2.50

## ‘அன்னியர்’ பற்றிப் பேச இவர்களுக்கு தகுதி உண்டா?

# “தேசத் துரோகம்” செய்த வாஜ்பாய்

**‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் சகதோழர்களைக் காட்டிக் கொடுத்தது யார்? வெளிநாட்டுத் துறை அமைச்சராக இருந்த போது - உறவு துண்டிக்கப் பட்டிருந்த இஸ்ரேல் நாட்டு அமைச்சரை ரகசியமாக அழைத்தது யார்?**



தற்பொழுது பா.ஜ.க. சோனியாவை அன்னியர் என்றும் அன்னியர் இந்திய நாட்டை ஆளலாமா ? என்றும் பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறது. இந்திய நாட்டை நாங்கள் தான் காப்பாற்றுகிறோம். பா.ஜ.க.வினால் மட்டுமே இந்தியாவை ஒரு வலிமை மிகுந்த வல்லரசாக வாஜ்பாய் தலைமையில் மாற்றிக் காட்டுவோம் என்றும், இந்திய நாட்டிலே ஒப்பற்ற தலைவர் வாஜ்பாய் தான் என்றும், வாஜ்பாய் “ஒரு அக்மார்க் இந்தியர்” என்றும் சொல்கிறார்கள் பா.ஜ.க.வினர் !

வாஜ்பாய் இந்திய தேசத்திற்காக திருமணம்கூட செய்து கொள்ளாமல் இந்த நாட்டிற்காக பாடுபட்ட தேசியத் தலைவர் என்று கூறுவது தேசிய பொய்யை பரப்பும் முயற்சியே தவிர வேறொன்றுமில்லை.

‘அன்னியர் சோனியா’ என்று பிரச்சாரம் செய்யும் இவர்களின் கதை என்ன ?

1942 ஆம் ஆண்டு “சுதந்திர”ப் போராட்டத்தில் “தேச பக்த திலகம்” வாஜ்பாய் செய்த வேலை என்ன தெரியுமா ? காட்டிக் கொடுக்கும் வேலை ! ஆம் ! அந்த வேலையைத்தான் வாஜ்பாய் செய்தார்.

1942 ஆம் ஆண்டு “வெள்ளையனே வெளியேறு” போராட்டத்தில் வாஜ்பாய் கலந்து கொண்டார். அவரோடு அவரது ‘புரட்சி’ சகாக்களும் கலந்து கொண்டு சிறை புகுந்தனர். வெள்ளையனே வெளியேறு போராட்டம் தொடர்பாக நடந்த ஒரு வன்முறை சம்பவத்தைத் தொடர்ந்து இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. சிறைக்குப் போன வாஜ்பாய் என்ன செய்தார் தெரியுமா ? இந்த சம்பவத்தில் கலந்து கொண்டு சிறை பிடிக்கப்படாத தனது ‘புரட்சி’ நண்பர்களின் பெயர்ப் பட்டியலை எல்லாம் போலீசாரிடம் கொடுத்துவிட்டு, தான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுதலை ஆகிவிட்டார். இந்த சம்பவம் பற்றி மும்பையிலிருந்து வெளிவரும் ‘பிளிட்ஸ்’ பத்திரிகை 1974 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் அன்று ஒரு நீண்ட கட்டுரை வெளியிட்டது. அந்த வழக்கின் முழு விவரம், கோர்ட் நடவடிக்கைகள் எல்லாவற்றையும், அந்தக் கட்டுரை தெளிவாக விளக்கியது.

வாஜ்பாயின் சகோதரர் பிரேம் பிகார் லால்பாஜ்பாய் என்பவர், மத்திய பிரதேச அரசாங்கமே நடத்தும் ‘சந்தேஷ்’ (SANDESH) என்ற பத்திரிகையில் 12.5.1973-ல் இது பற்றி ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். அந்தக் கட்டுரையில் தானும் தனது சகோதரர் வாஜ்பாயும் பட்டேஸ்வர் கலவரம் தொடர்பாக கைது செய்யப்பட்டோர் என்பதையும் வாஜ்பாய் இழைத்த துரோகத்தையும் ஒப்புக் கொண்டிருக்கிறார். அது மட்டுமா ? கிரிஜாஷங்கர் பாஜ்பேய் என்ற பார்ப்பனர் அப்போது வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினர். அவரது தலையீட்டின் பேரில் தான் நாங்கள் இருவரும் சிறையிலிருந்து விடுதலை பெற்றோம் என்ற உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். 26.01.1974 ‘பிளிட்ஸ்’ ஏடு இந்த உண்மைகளை எல்லாம் திரட்டி, வாஜ்பாய் செய்த துரோகத்தை நாட்டுக்கு அடையாளம் காட்டியது.

அதைத் தொடர்ந்து முன்னாள் ஜனதா கட்சியின் பொதுச்செயலாளரும், தீவிர ஆர்.எஸ்.எஸ்.காரருமான நானாஜிதேஷ்முக் என்பவரும், வேறு சில ஆர்.எஸ்.எஸ்.காரர்களும், ‘பிளிட்ஸ்’ ஏடு மீது வழக்கு தொடர்ந்தனர். ஆனால் இந்த வழக்கில் நேரடியாக சம்பந்தப்பட்ட வாஜ்பாய் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ, அல்லது ‘பிளிட்ஸ்’ ஏடு மீது மான நஷ்ட வழக்கு தொடரவோ முன் வரவில்லை. வழக்கை விசாரித்த நீதிமன்றம், வழக்கையே தள்ளுபடி செய்து தீர்ப்பளித்து விட்டது.

மேலும் ஜனதா ஆட்சிக் காலத்தில் வாஜ்பாய் என்ற ஆர்.எஸ்.எஸ்.காரர் வெளிநாட்டுத் துறை அமைச்சராக இருந்த போது இந்திய நாட்டிற்கு செய்த ஒரு அரசியல் மோசடியை பார்ப்போம்.

இஸ்ரேல் நாட்டு வெளி விவகார அமைச்சர் “மோஷி தயான்” இந்தியாவுக்கு ரகசியப் பயணம் வந்தார் என்பது இந்தியாவில் மட்டுமல்ல; உலக அரங்கிலேயே ஒரு அதிர்ச்சிக்குரிய செய்தியாக இருந்தது. அப்போது - இந்தியா-பாலஸ்தீனப் பிரச்சினைக்காக இஸ்ரேலுடன் தனது உறவைத் துண்டித்துக் கொண்டிருந்த காலம்.

எனவே, கூட்டு சேராத நாடுகளிலும் அய்க்கிய நாடுகள் சபையிலும் இந்தியாவின் குரலுக்கு மதிப்பு இருக்கும் என்ற நம்பிக்கையில் இந்தியாவை சரிக்கட்டும் முயற்சிகளில் இஸ்ரேல் ஈடுபட்டது. இந்தியா-இஸ்ரேலுக்கு எதிரான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்திருக்கிறது. அது மட்டுமல்லாது, இஸ்ரேலின் வெறித்தனமான போக்கை - கூட்டு சேரா நாடுகள் எல்லாம் கண்டிக்கின்றன. இஸ்ரேலுடன் நெருக்கம் கொண்டு விட்டால் - அது இந்தியா ஏற்றுக் கொண்டுள்ள வெளிநாட்டுக் கொள்கைக்கு விரோதம் என்பது மட்டுமல்லாமல்; அரேபிய நாடுகளின் எண்ணெய் சப்ளையும் இந்தியாவுக்கு வராமல் போய் விடும்.

இப்படிப்பட்ட நெருக்கடிகள் இருந்த நிலையில் தான் “மோஷி தயான்” இந்தியாவுக்கு ரகசியப் பயணம் மேற்கொண்டார். வெளி நாட்டுத் துறை அமைச்சராக வாஜ்பாய் என்ற ஆர்.எஸ்.எஸ்.காரர் வந்துவிட்டார் என்றவுடன், அவர்களுக்கு நம்பிக்கை பிறந்தது.

இஸ்ரேல் நாட்டு பிரதமர் தனது நாட்டின் வெளிவிவகாரத்துறை அமைச்சரை இந்தியாவுக்கு அனுப்பி, இது பற்றி பேச வேண்டும் என்று விரும்பிய போது, வாஜ்பாயும், மொரார்ஜியும் சேர்ந்து நாட்டுக்கே தெரியாமல் ஒரு ரகசியத் திட்டம் போட்டார்கள். மோஷி தயான் இஸ்ரேல் நாட்டு அமைச்சர் என்று இல்லாமல், ஒரு குடிமகன் என்ற முறையில் பெயரை மாற்றிக் கொண்டு இந்தியாவுக்கு வரவழைப்பதற்கு முடிவு எடுத்தார்கள். ஒரு நாட்டின் அமைச்சர் தனது பெயரை மாற்றிக் கொண்டு ரகசியமாக வருவதற்கு ஒரு அரசாங்கம் அனுமதிக்கிறது என்றால் அது எவ்வளவு பெரிய மோசடி ?

மும்பையில் உள்ள இஸ்ரேலிய தூதரக அலுவலகத்திற்கும் மும்பையைச் சேர்ந்த இரண்டு உயர் அதிகாரிகளுக்கும் மட்டுமே இந்த விவகாரம் தெரியும். மோஷி தயான் பெயரை மாற்றிக் கொண்டு இந்தியாவுக்கு பயணிகள் வரும் வழக்கமான விமானத்திலேயே வந்தார். அவர் வைத்திருந்த பாஸ்போர்ட் ஒரு மோசடி பாஸ்போர்ட். மாறுவேடம் போட்டுக் கொண்டு எப்போதும் அணிந்திருக்கும் ஒரே ஒரு லென்ஸ் பொருத்தப்பட்ட கண்ணாடியையும் கழற்றிவிட்டு அவர் மும்பை வந்து இறங்கினார். மோசடியாக வந்த மோஷி தயானை ஏற்றிச் செல்ல இந்திய விமானப்படை விமானம் வந்தது. ஆனால் விமானப்படை அதிகாரிகளுக்கே விவரம் தெரியாது. டில்லியில் தனியார் வீடு ஒன்றில் தங்கினார். மொரார்ஜியும், வாஜ்பாயும் தனித்தனியே போய் அவரைப் பார்த்து நீண்ட நேரம் விவாதிக்கிறார்கள். வாஜ்பாய் இரண்டு முறை சந்திக்கிறார்; மொரார்ஜியும் இரண்டு முறை சந்திக்கிறார். இவர்கள் சந்தித்தது இந்திய வெளிநாட்டுத் துறை செயலாளருக்கோ, வெளிநாட்டுத் துறை துணை அமைச்சர்களுக்கோகூட இந்தச் செய்தி தெரியாது. நான்கு நாள்கள் தங்கி பல இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு பிறகு அவர் திரும்பிப் போகிறார். மோஷி தயானின் இந்த ரகசியப் பயணத்தின் முழு விவரத்தையும் 24.04.1980 அன்று “சண்டே” இதழ் வெளியிட்டது.

இந்தப் பிரச்சினை பிறகு எப்படியோ வெளியே வந்துவிட்டது. வாஜ்பாய் அப்போது அடியோடு மறுத்துவிட்டார். மோஷி தயான் இந்தியாவுக்கு வரவே இல்லை என்று ‘சத்தியம்’ செய்தார்.

ஆனால் இந்த ரகசியத்தை முதன்முதலாக இஸ்ரேல் நாட்டுப் பத்திரிகையே வெளியிட்டுவிட்டது. அதற்குப் பிறகு பிரதமர் மொரார்ஜி தேசாய் பதவியிலிருந்து இறங்கிய பிறகே இந்த உண்மையை ஒப்புக் கொண்டார்.

வாஜ்பாய் என்ற ஆர்.எஸ்.எஸ்.காரர் வெளிநாட்டுத் துறை அமைச்சர் பொறுப்பில் நியமிக்கப்பட்டதால் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான மோசடி இந்த நாட்டிலே நடந்தது. இஸ்ரேல் நாட்டுடன் இந்தியா உறவைத் துண்டித்துக் கொண்டிருந்த காலத்தில், அந்நாட்டு அமைச்சரை ரகசியமாக இந்தியாவுக்கு அழைத்துப் பேசியவருக்கு, “அன்னியர்” சோனியாவிடம் அதிகாரத்தைக் கொடுத்தால் நமக்கு ஆபத்து என்று பேச, என்ன உரிமை இருக்கிறது ?

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் தங்கள் இனத்துக்காக நாட்டையே விலை பேசக் கூடியவர்கள்; எந்த இடத்திலும் எந்தக் குற்றத்தையும் செய்ய கூடியவர்கள் என்பதை இந்தச் செய்திகள் நன்றாகவே உறுதிப்படுத்துகின்றன.

இவரைத்தான் அத்வானி போன்ற “இந்தியர்”( ?)கள் பிரதமராக்குவோம் என்று ரதயாத்திரை நடத்திக் கொண்டுள்ளார்கள்.

இந்திய நாட்டிற்கே துரோகம் செய்த இவர்கள் தானே அந்நியர்கள் ?

சோனியாவை அந்நியப் பெண் என்று கூறப்படும் வாதத்திற்கும் அப்போதைய காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி ஒரு வார ஏட்டில் சரியான பதிலடி தந்துள்ளார்.

“இது, பா.ஜ.க. பிரச்சாரம். அத்வானி மட்டும் யாராம் ? அவர் பாகிஸ்தான் சிந்து மாகாணத்தைச் சேர்ந்தவர். **இந்தியர் அல்ல.** தன் இந்து உடன் பிறப்புக்கள் கொல்லப்பட்டு வந்த சமயத்தில் அவர்களை கைவிட்டு வந்தவர் அத்வானி”. மக்களை அன்னியமாக்கும் தத்துவம் தான் இந்துத்துவா; இந்துத்துவத்தை அன்னியப்படுத்துவதே, உண்மையான அன்னிய எதிர்ப்பு !

**- மே.கா.கிட்டு, மேட்டூர் அணை.**

# ரஜினி யார்? அவர் எவருடைய பிரதிநிதி?

மதுரையில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் - தேர்தல் பிரச்சாரக் கூட்டத்துக்குச் சென்ற போது, ரஜினிகாந்த் ரசிகர்கள் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டியிருக்கிறார்கள்; ஜெயலலிதா ஆட்சியின் காவல்துறை, அதை அனுமதித்திருக்கிறது. கறுப்புக் கொடி காட்ட வந்தவர்கள் திடீரென்று வந்துவிடவும் இல்லை; ஏற்கனவே அறிவித்து, சுவரொட்டிகளை ஒட்டி விளம்பரப்படுத்தி விட்டுத்தான் வந்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் கறுப்புக் கொடிக் காட்ட கூடும் போதே, காவல்துறை அவர்களைக் கைது செய்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை; கறுப்புக் கொடி காட்டினால், எதிர் விளைவுகள் வரும்; மோதல் உருவாகும் என்பது காவல் துறைக்குத் தெரியாதது அல்ல. அப்படி ஒருமோதலை உருவாக்க வேண்டும் என்ற திட்டமிட்ட உள்நோக்கத்தோடு தான், இது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

அண்மைக்கால தமிழக வரலாற்றில் - கருப்புக் கொடி போராட்டம் நடத்திய எந்த அமைப்பும், நேருக்கு நேராக கறுப்புக் கொடி காட்ட அனுமதிக்கப்பட்ட வரலாறு உண்டா ? முன்கூட்டியே கைது செய்வார்கள்; அல்லது கருப்புக் கொடிக் காட்டுவதற்கு புறப்படும் இடத்திலே கைது செய்வார்கள்; குஜராத்தில், பல்லாயிரக்கணக்கான முஸ்லீம்களைக் கொன்று குவித்த நரேந்திரமோடி, கோவைக்கு வந்த போது, தந்தை பெரியார் திராவிடர் கழகம், கருப்புக் கொடி போராட்டத்தை அறிவித்தது; என்ன செய்தது காவல்துறை ? பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், ஆட்சிக்குழு உறுப்பினர் ஆறுச்சாமி ஆகியோரை முதல் நாளே கைது செய்தார்கள். அடுத்த நாள் ஆட்சிக் குழு உறுப்பினர் பொள்ளாச்சி மனோகரன் தலைமையில், கருப்புக் கொடி காட்டச் சென்ற கழகத்தினரை, புறப்பட்ட இடத்திலே கைது செய்தார்கள். இந்த நடைமுறைகள் எல்லாம் - மதுரையில் பின் பற்றாதது ஏன் ? பா.ம.க. - ரஜினி ரசிகர்கள்மோதலைக் கூர்மைப்படுத்தி, அவர்களை உசுப்பி விட்டு, அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்கு ஆதரவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற திட்டமிட்ட உள்நோக்கம் தானே ?

ரஜினியும் உடனே 'வாய்ஸ்' கொடுத்து விட்டார். 'தமிழகம் திரும்பிய பிறகு மனம் திறக்கப் போகிறேன் பார்' என்று மிரட்டுகிறார் ! பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் தொகுதிகளில், ரஜினி ரசிகர்கள் - அ.இ.அ.தி.மு.க.வையும் - பா.ஜ.கவையும் ஆதரிப்பார்களாம் ! ரஜினியின் இந்த முடிவுக்கு என்ன காரணம் ? நாட்டு மக்கள் மீது கொண்ட கவலையா ? அல்ல; ரஜினியின் 'பாபா' படத்தைத் திரையிடுவதற்கு, பா.ம.க. எதிர்ப்பு தெரிவித்ததால் ! அதாவது தனது சொந்தத் தொழில் பிரச்சினையை - தமிழ்நாட்டு மக்களின் தேசப் பிரச்சினையாக்கிக் குளிர் காயப் பார்க்கிறார் ரஜினி !

பா.ம.க. போட்டியிடும் தொகுதிகளில் - அ.தி.மு.க. அணியை ஆதரிப்போம் என்று ரஜினி சார்பில் அறிவித்தவுடன் பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி என்ன சொன்னார் ? "அரசியல் ரீதியாக யாருக்கு வாக்களிப்பது என்று முடிவெடுப்பது அவர்களின் உரிமை" என்றார். டாக்டர் ராமதாஸ் என்ன சொன்னார் ? பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி ஏற்கனவே இதுப்பற்றிக் கூறி விட்டார்; நான் எதுவும் சொல்வதற்கில்லை என்று கூறினார். இவ்வளவுக் குப் பிறகு, சுமார் ஓராண்டு காலத்துக்கு முன்பாக, 'பாபா' படத்தை பா.ம.க. எதிர்த்ததற்கு, இப்போது கருப்புக் கொடி காட்டுவது என்ன நியாயம் ? திட்டமிட்ட உள்நோக்கம் தானே ! வீண் வம்பை உருவாக்குவதற்குத் தானே !

> **பார்ப்பனக் குடும்பத்துக்குள் அய்க்கிய மாகி ~ பார்ப்பன வட்டத்திலும், பார்ப்பன சிந்தனையிலும் மூழ்கிப் போய் கிடக்கும் ரஜினியை, தங்களின் மற்றொரு அரசியல் தலைவராக முடிசூட்டி, தமிழகத்தில் உலா வரச் செய்ய, பார்ப்பன வட்டாரங்களும், பார்ப்பன ஏடுகளும் திட்டமிட்டுக் காய் நகர்த்துகின்றன.**

சரி; அப்படி என்ன ரஜினி, தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்திருக்கிறார் ? தமிழ்நாட்டு மக்களின் பிரச்சனை களுக்காக, 'தியாகத் தழும்புகளை' அவர் ஏற்றிருக்கிறார் ?

● அரசு விழாவிலேயே பெரியார் கொள்கைகள் எல்லாம், இனிமேல் எடுபடாது; அது காலாவதியாகிவிட்டது என்று திமிரோடு பேசியவர் - இதே ரஜினிகாந்த் ! அப்போதே தமிழகம் கொந்தளித்தது; பெரியார் திராவிடர் கழகம் கண்டனக் கூட்டங்களை நடத்தியது.

● 'பாபா' படத்தில் - வாலி என்ற பார்ப்பனரின் பாடல் மூலம் பெரியாரை அவமதித்தார் ரஜினி; பெரியார் ராஜாஜியாக மாறிவிட்டதாக அந்தப் பாடல் எழுதப்பட்டது; அப்போது தான் - பா.ம.க. தன்மான உணர்வுடன் எதிர்த்தது; தந்தை பெரியார் திராவிடர் கழகம், ரஜினி வீட்டின் முன் மறியல் கிளர்ச்சியை அறிவித்தது; எதிர்ப்புக்குப் பணிந்து ரஜினி, அந்தப் பாடல் வரிகளை நீக்கினார்.

● தமிழகத்தின் காவிரி நீர் உரிமையை - கருநாடகம் அடாவடியாக மறுத்த போது பாரதி ராஜா தலைமையில், தமிழ்த் திரையுலகமே திரண்டு, நெய்வேலி நிலக்கரியை - கருநாடகத்துக்கு அனுப்பாதே என்று முற்றுகைப் போராட்டம் நடத்த முன் வந்தது; அப்போது ரஜினியின் 'வாய்ஸ்' யார் பக்கம் நின்றது ? தமிழ்க் கலைஞர்களின் போராட்டத்தை எதிர்த்தார்; கருநாடக அரசைக் கண்டிக்க மறுத்தார். தன்னிடம் கலந்து ஆலோசிக்காமல் போராட்டம் நடத்துகிறார்கள் என்று தன்னையே முன்னிலைப் படுத்தினார்; பிரச்சினையைத் திசைதிருப்ப 'நதிகளை இணைக்க வேண்டும்' என்று கூறி சென்னையில் 'உண்ணாவிரத' நாடகத்தை அரங்கேற்றினார்; தமிழக விவசாயிகளுக்கு, ரஜினி இழைத்த இந்த துரோகத்தை, தமிழர்கள் எப்போதும் மறக்க மாட்டார்கள்; ரஜினியின் இந்த ஒரு துரோகம் - நூறு துரோகத்துக்குச் சமம் !

● பார்ப்பனக் குடும்பத்துக்குள் அய்க்கியமாகி - பார்ப்பன வட்டத்திலும், பார்ப்பன சிந்தனையிலும் மூழ்கிப் போய் கிடக்கும் ரஜினியை, தங்களின் மற்றொரு அரசியல் தலைவராக முடிசூட்டி, தமிழகத்தில் உலா வரச் செய்ய, பார்ப்பன வட்டாரங்களும், பார்ப்பன ஏடுகளும் திட்டமிட்டுக் காய் நகர்த்துகின்றன. ஏற்கனவே பார்ப்பன ஜெயலலிதா வின் ஆட்சியால் பாழ்பட்டு நிற்கும் தமிழினத்தை, இப்போது ரஜினி காந்துகளைப் பயன்படுத்தி, தமிழின உணர்வுகளை மேலும் தரை மட்டமாக்கிடத் துடிக்கிறார்கள்.

ரஜினி ரசிகர்கள் எல்லாம் - ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த தமிழர்கள் தான் ! எந்தப் பார்ப்பானும் ரஜினிக்காக போஸ்டர் ஒட்ட வீதிக்கு வரமாட்டான் என்பது நமக்குத் தெரியும்; சிந்தப்படுவது தமிழன் ரத்தம் தான் ! எனவே ரஜினி ரசிகர்களுக்கும் நாம் வேண்டுகோள் வைக்கிறோம்; தமிழ் நாட்டை தமிழ் சினிமா மாயை சீரழித்தது போதும்; தமிழனை மழுங்கடித்த இந்த மாயை இப்போது ஆரியப் படுகுழியில் தள்ளுவதற்கு தமிழர்களை அழைத்துப் போக வலை விரிக்கிறது; ஏமாறாதீர்கள் !

கேரளாவைப் பாருங்கள் - அங்கே நடிகர் என்ற ஒரே தகுதி - தலைவர்களை உருவாக்குகிறதா ? நடிகைகள் என்ற ஒரே தகுதி முதலமைச்சர்களை உருவாக்குகிறதா ? சிந்தியுங்கள்.

**ரஜினிக்கும் - அவருக்கு முடி சூட்ட நினைக்கும் பார்ப்பன பரிவாரங்களுக்கும் சொல்லிக் கொள் கிறோம் -**

**தமிழ்நாட்டில் இப்போது தேர்தல் களத்தில் தமிழர்கள் ஓரணியாகியிருக்கிறார்கள்;**

**அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக - தமிழ்நாட்டு மக்களோடு மக்களாக தங்களை ஒப்படைத்துக் கொண்டு, அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்று, தமிழர்களின் அரசியல் நலனைத் தாங்கள் பொது வாழ்க்கையாக்கிக் கொண்ட அனைத்துக் கட்சிகளும், இன்று ஒரே அணியில் திரண்டு நிற்கின்றன;**

**தமிழக வரலாற்றில் - இது ஒரு திருப்புமுனை!**

தமிழர்களோடு தொடர்பில்லாத - தமிழின நீரோட்டத் திலிருந்து அன்னியப்பட்டு நிற்கும் அன்னிய சக்திகளான பார்ப்பன ஜெயலலிதாவும் - பார்ப்பன பா.ஜ.க.வும் கை கோர்த்து விட்டன. உண்மையான அன்னியர் - அன்னியரல் லாதார் பிரச்சினை தமிழகத்தில் தான் மய்யம் கொண்டிருக் கிறது என்பதை ரஜினிகாந்துகள் மறந்துவிடக் கூடாது. அன்னிய சக்திகளோடு தங்களை ரஜினி காந்த் தன்னை வெளிப்படையாகவே அடையாளம் காட்டிக் கொள்ள முன் வருவார் என்றால், தமிழினத்தின் இன உணர்வுக் களம், மேலும் சூடேறும்; கொதிப்படையும்; வீறு கொள்ளும்; அன்னியப் படப் போகும் கூட்டம் யார் என்பது அப்போது தெளிவாகிவிடும்; இந்த உணர்வுகளுக்கு ரஜினி உரமேற்ற முன் வருவார் என்றால், நாமும் வரவேற்கத் தயார் ! சரி தானா ? ■

## திருப்பூர் தோழர் துரைசாமி இல்லத் திறப்பு விழா

# கழக ஏட்டுக்கு ரூ.5000 நன்கொடை

கடந்த 21.3.2004 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு திருப்பூர் குப்பாண்டம்பாளையம் அய்யன் தோட்டத்தில், பாரதி நகர் தி.மு.க. பொறுப்பாளரும், பகுத்தறிவாளர் பேரவையைச் சார்ந்தவரும் கழக ஆதரவாளருமான சு.துரைசாமி அவர்களது இல்லத் திறப்பு விழா சிறப்புடன் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பொதுச்செயலாளர் கோவை. கு. இராமகிருட்டிணன் தலைமை வகித்தார். தொழிலதிபர் எம்.சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி இல்லத்தை திறந்து வைத்தார். பேராசிரியர் பெரியார் தாசன் சிறப்புரை நிகழ்த்தினார்.

முடிவில் சு.துரைசாமி-சுசீலா தம்பதியினர் பெரியார் முழக்கம் இதழுக்கு ரூ.5000/- நன்கொடை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் கட்டிடப் பணி யாளர்களுக்கு நினைவுப் பரிசுகளை கழகத் தலைவர் வழங்கினார். நிகழ்ச்சியில் இல.அங்ககுமார், ஒன்றிய செயலாளர் வீ.குமார், மாவட்டச் செயலாளர் இரமேசுபாபு, நகரச் செயலாளர் அகிலன், தி.மு.க. பனியன் சங்க செயலாளர் இராமகிருட்டிணன், இராயபுரம் இராஜன், இரா. ஈசுவரமூர்த்தி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். ■

## 'நியூமராலஜி' சந்திரபாபு

ஆந்திர முதல்வர் சந்திரபாபுவுக்கு அதிர்ஷ்ட எண் 8 என கணித்துக் கூறப்பட்டிருக் கிறதாம். (சமஸ்கிருதத்தில், திருஷ்டம் என்றால் பார்வை; அதிர்ஷ்டம் என்றால் குருட்டுத்தனம் என்று பொருள்) அந்த அதிர்ஷ்டத்தைப் (குருட்டுத் தனத்தை) பின்பற்றி சந்திரபாபு அவர்கள் தனது கூட்டணிக் கட்சியான பா.ஜ.க.வுக்கு தொகுதிகளை ஒதுக்கியிருக்கிறார்.

பா.ஜ.க.வுக்கு ஒதுக்கப்பட்ட நாடாளுமன்றத் தொகுதிகள் 9. சட்டமன்றத் தொகுதிகள் 27 (கூட்டுத் தொகை 9). அது மட்டுமன்றி, சந்திரபாபு வெளியிட்ட தனது கட்சியின் முதல் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றவர்கள் 72 பேர் (கூட்டுத் தொகை 9).

இவ்வளவையும் செய்த சந்திரபாபு, ஒரு முக்கியமான விஷயத்தில் கோட்டை விட்டு விட்டார். ஆந்திராவில் தேர்தல் நடைபெறுவது ஏப்ரல் 20, 26. வாக்குகள் எண்ணிக்கை மே 12. மேற்சொன்னவற்றின் எதன் கூட்டுத்தொகை யிலும் அவர் நம்பும் அவரின் அதிர்ஷ்ட (குருட்டுத்தன) எண்ணான 9 வரவில்லை. இதற்கு தேர்தல் கமிஷனிடம் விண்ணப்பிக்க சந்திரபாபு மறந்துவிட்டார் போலும். இவரின் பட்டப் பெயர் தான் ஹை-டெக் முதல்வர். ஆனால் மூளையில் குடிகொண்டிருப்பதோ அடி முட்டாள்தனம்.

– ஜஸ்டின் ராஜ்

# இதுதான் இந்துத்துவா

### வாஜ்பாயின் 'பல்டி'

மகாராஷ்டிரா அரசு கடந்த ஜனவரி மாதம் - சிவாஜி பற்றிய நூல் ஒன்றைத் தடை செய்தது. "சிவாஜி - இஸ்லாமிய இந்தியாவில் ஓர் இந்து மன்னன்" என்ற அந்த நூலை எழுதியவர் ஜேம்ஸ்லேயின் என்று வெளிநாட்டு ஆய் வாளர்; இந்த நூலில் சிவாஜியை குறை கூறும் வாசகங்கள் இடம் பெற்றிருப்பதாகக் கூறி, 'சாம்பாஜி படை' என்ற சங்பரிவார் அமைப்பினர் - பூனேயில் உள்ள ஒரு மதச் சார்பற்ற ஆய்வு மய்யத்துக்குள் புகுந்து சூறையாடினர்; அப்போது, பம்பாய் வந்த பிரதமர் வாஜ்பாய், புத்தகங்களைத் தடை செய்வதில் தனக்கு உடன்பாடு இல்லை என்று கூறினார்; அதே வாஜ்பாய் - இப்போது மகாராட்டிராவில் தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்தபோது - "நம்முடைய தேசிய மாவீரர்களின் பெருமையை வெளிநாட்டு ஆய்வாளர்கள், சீர்குலைப்பதை அனுமதிக்க முடியாது" என்று பேசியுள்ளார். சிவாஜியைப் பெருமைப்படுத்தி மராட்டியர்களின் ஓட்டுகளை வாங்குவதில் மகாராஷ்டிர அரசியல் கட்சிகள் போட்டி போடுகின்றன. அதனால் ஜனவரியில் நூல் தடை செய்ததைக் குறை கூறி - கருத்துரிமையாளராக வேடம் போட்ட வாஜ்பாய், இப்போது, சிவாஜியைக் குறை கூற எவரையும் அனுமதிக்க மாட்டோம் என்று தலைகீழ் பல்டி அடித்துள்ளார்.

### வெங்கய்யா 'பொய்'

நெல்லூரிலிருந்து சென்னைக்கு - தனி விமானத்தில் வர இருந்த வாஜ்பாய், திடீரென்று காரில் வந்தது ஏன்? பிரதமருடன் வரும் அதிகாரிகள் கூறும் காரணம் என்ன? நெல்லூரில், வெங்கய்யா நாயுடு, சந்திரபாபு நாயுடு ஆகியோருடன் வாஜ்பாய் கலந்து கொண்ட தேர்தல் பிரச்சார நிகழ்ச்சி முடிவதற்கு திட்டமிட்ட நேரத்தைவிட தாமதமாகி விட்டது. அப்போது மாலை 5.30மணி. சூரியன் மறைந்து இருட்டி விட்டது. விமானப் படையைச் சார்ந்த ஹெலிகாப்டர் விமானத்தை, சூரியன் மறைவுக்குப் பிறகு எடுப்பது பாதுகாப்பாக இருக்காது என்று பைலட்டுகள் கூறிவிட்டனர். இந்த நிலையில், காரிலே சென்னைக்குப் போய், அங்கிருந்து தனி விமானத்தில் டெல்லி போகலாம் என்று வாஜ்பாய் முடிவு எடுத்தார். பிரதமர் வந்த தனி விமானம், சென்னை விமான நிலையத்தில் தான் நின்றது. அங்கிருந்த தனி ஹெலிகாப்டரில் தான் வாஜ்பாய் நெல்லூர் போனார். ஆனால் பா.ஜ.க. தலைவர் வெங்கய்யா நாயுடு இதையும் ஒரு அரசியலாக்க நினைத்தார். துணிந்து இந்துத்துவா பாணியில் ஒரு "ராமன்" கதையைத் தயாரித்தார். "நெல்லூர் கூட்டம் மிகச் சிறப்பாக அமைந்து விட்டது; உற்சாகமடைந்த பிரதமர், தென்னகத்தில் தேசிய நெடுஞ்சாலை எப்படி அமைந்துள்ளது என்பதை நேரில் பார்க்க விரும்பி, காரிலே சென்னை போகலாம் என்று முடிவெடுத்தார்" இது வெங்கய்யா நாயுடு, பத்திரிகையாளர்களிடம் பரப்பிய 'பொய்க்' கதை. இப்படியுமா, அரசியல்?

### மோடியின் 'தரம்'

அத்வானி ரதயாத்திரையில் பங்கேற்றுப் பேசிய குஜராத் முதல்வர் நரேந்திர மோடி - சோனியாவைப் பற்றி தரம் தாழ்ந்து விமர்சனம் செய்தார். "குஜராத்தில் நரோடா பகுதியில், ஒரு ஆய்வு நடத்தினோம். அங்கே இருந்த கடை உரிமையாளர்களிடம், சோனியாவை கிளார்க் வேலைக்கு சேர்த்துக் கொள்வீர்களா என்று கேட்டோம்; மறுத்து விட்டனர். சோனியாவின் மகன் ராகுலை, டிரைவர் ஆக வைத்துக் கொள்வீர்களா என்று கேட்டோம், முடியாது என்று கூறிவிட்டனர். ஒரு கிளார்க் வேலைக்கோ, டிரைவர் வேலைக்கோ தகுதி இல்லாதவர்கள் எப்படி நாட்டை ஆள முடியும்?" - இது மோடியின் பேச்சு. அத்வானியை வைத்துக் கொண்டு பேசிய பேச்சு. பா.ஜ.க. தலைவர்கள் இத்தகைய கீழ்த்தரமான பிரச்சாரத்தைத் திட்டமிட்டே நடத்துகிறார்கள் என்கிறார், காங்கிரசின் அதிகாரபூர்வ பேச்சாளர் அபிஷேக் கிங்வி! 'இந்துத்துவா' தரம் இது தானா?

### 'ஜெ'யின் 'பரிவு'

கடந்த ஜூலை மாதம் - இந்திய முதலாளிகள் கூட்டத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா பேசியதை - 'நமது எம்.ஜி.ஆர்.' பத்திரிகை வெளியிட்டது. அதில் இவ்வாறு பேசி இருந்தார். "சமூக அரசியல், பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்றவாறு, அரசாங்கம் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் எடுக்கும் முடிவுகளை செயல்படுத்த, பொது மக்கள் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுத்து ஒத்துழைக்க வேண்டும்" பேசிய இடம், முதலாளிகளின் கூட்டம், அங்கே, அரசுத் திட்டங்களை அமுல்படுத்த முதலாளிகள் தங்கள் உரிமைகளை விட்டுத் தர வேண்டும் என்று பேசவில்லை. மாறாக பொதுமக்கள் தான் விட்டுத்தர வேண்டும் என்று, முதலாளிகளிடம் பேசுகிறார். இதுதான் 'ஜெ' மக்களிடம் காட்டும் 'பரிவு' - பாசம்! ■

# 69 சதவீதம் என்ற ஏமாற்றுப் 'பல்லவி'

அ.இ.அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை 69 சதவீத இடஒதுக்கீட்டை நிறைவேற்ற சட்டத் திருத்தம் கொண்டு வருவோம் என்று கூறுகிறது.

'கேழ்வரகில் நெய் வழிகிறது என்றால் கேட்பாருக்கு மதி இல்லையா' என்ற பழமொழி தான் நினைவுக்கு வருகிறது. காதில் பூ சுற்றிப் பார்க்கிறது, அம்மாவின் கட்சி!

உண்மையிலேயே 69 சதவீத இடஒதுக்கீட்டைக் காப்பாற்றுவதற்கு - இந்தப் பார்ப்பன அம்மையார் எடுத்த நடவடிக்கை என்ன? வரலாறுகளைத் திருப்பிப் பாருங்கள்!

69 சதவீத இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க - தமிழக சட்டமன்றத்தில் 31(சி) பிரிவின் கீழ், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து தீர்மானம் நிறைவேற்றினார்கள். எதற்காக? இந்தச் சட்டத்தை எதிர்த்து, நீதிமன்றங்களில் வழக்குத் தொடராமல் தடுப்பதற்காக! 31(சி) பிரிவின் கீழ் கொண்டு வரப்படும் சட்டங்களை எதிர்த்து நீதிமன்றங்களுக்குப் போக முடியாது.

இந்தச் சட்டம் - சட்டப் பேரவையில் நிறைவேறுவதற்கு முன்பாகவே, 69 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுவிட்டது. உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு என்ன சொல்லியிருக்க வேண்டும்? 31(சி) சட்டத்தின் கீழ், இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுவிட்டதால், நீதிமன்றம், இதை விசாரிக்க முடியாது என்று கூறியிருக்க வேண்டும். உண்மையில், இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதே அந்த நோக்கத்துக்காகத்தான். ஆனால், தமிழக அரசின், வழக்கறிஞர் இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டதையே உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை! தமிழ்நாட்டு மக்களையும், சட்ட மன்றத்தையும் ஏமாற்றிய இந்தத் துரோகத்துக்குச் சொந்தக்காரர் தான், இப்போது மீண்டும் 69 சதவீத இடஒதுக்கீட்டுக்காக தேர்தல் அறிக்கையில் உறுதி கூறுகிறார். சரி; அதுதான் போகட்டும். அ.இ.அ.தி.மு.க. ஆதரவோடு - வாஜ்பாய் பிரதமர் ஆனார். அ.இ.அ.தி.மு.க.வினரும், மத்திய அமைச்சர்களானார்கள். இந்த உறவு குறுகிய காலம் தான் நீடித்தது. தன் மீதுள்ள ஊழல் வழக்குகளை, மத்திய அரசு திரும்பப் பெற முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று ஜெயலலிதா, நிர்ப்பந்தம் தந்தார். இதை அப்போது வாஜ்பாயே - 'குமுதம்' ஏட்டுக்கு அளித்த பேட்டியில், வெளிப்படையாகவே குறிப்பிட்டார்.

**"ஒரு மாபெரும் விலையுடன் தான் அ.தி.மு.க. ஆதரவு எங்களுக்கு கிடைத்தது என்று நாங்கள் விரைவில் உணர்ந்தோம். கருணாநிதியின் அரசைக் கலைக்க வேண்டும். பல ஊழல் வழக்கிலிருந்து ஜெயலலிதாவை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என்ற இரண்டும் அவருடைய நிபந்தனையாக இருந்தது. ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்திருந்த காலத்தில் நான் தூக்கம் இல்லாமல் தவித்தேன்."**

-(குமுதம் 23.9.99 - வாஜ்பாய் பேட்டி)

இது வாஜ்பாய் தந்த ஒப்புதல்; தன் மீதுள்ள ஊழல் வழக்குகளிலிருந்து விடுவிக்க தீவிர முயற்சிகள் எடுக்கவில்லை என்பதால், ஜெயலலிதா, வாஜ்பாய் ஆட்சிக்கு அளித்த ஆதரவைத் திரும்பப் பெற முன் வந்தார்.

ஆட்சியைத் தொடர்ந்து ஆதரிக்க வேண்டுமானால், பாதுகாப்புத் துறை அமைச்சர் பெர்னாண்டசை நீக்க வேண்டும்; அவரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட துணை ராணுவத் தளபதியை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் - இதுதான் ஜெயலலிதா வெளிப்படையாக அறிவித்த நிபந்தனை. உண்மையிலேயே, பெரும்பான்மை மக்களின் சமூகநீதிப் பிரச்சினையான 69 சதவீத இடஒதுக்கீட்டில் ஜெயலலிதாவுக்கு அக்கறை இருந்திருக்குமானால், இதற்கான சட்டத்திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று நிபந்தனை விதித்திருக்க மாட்டாரா? அந்த அளவுக்கு, முக்கியத்துவமல்லாத பிரச்சினையா, அது? வாஜ்பாய் ஆட்சியே, அ.தி.மு.க. உறுப்பினர்களின் ஆதரவோடுதான் நடக்க வேண்டும் என்ற நிலையிலேகூட, 69 சதவீத ஒதுக்கீட்டுக்கு சட்டத்திருத்தம் செய்யக் கூடிய நல்ல வாய்ப்பான சூழ்நிலை இருந்தும்கூட, அதைச் செய்வதற்கு, ஜெயலலிதா முன்வரவில்லை!

சரி; இப்போது ஆட்சிக்கு வந்த பிறகு, சமூக நீதியைக் காப்பாற்ற இவர் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

■ அரசு கலைக்கல்லூரிகளில் சேருவதற்கு தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த, வயது வரம்பு சலுகையை, ரத்து செய்தார். பாதிக்கப்பட்ட மாணவர் நீதிமன்றம் போன பிறகு தான், ஜெயலலிதா இப்படி ஒரு விபரீத முடிவை எடுத்தது வெளியே தெரிய வந்தது. உயர்நீதி மன்றமே, இது சமூக நீதிக்கு எதிரான ஆணை என்று கூறி ரத்து செய்தது;

■ அதே போல் - மாஜிஸ்திரேட்டுகள் நியமனத்தில் - தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வயது வரம்பு சலுகையை ஜெயலலிதா ஆட்சி ரத்து செய்தது;

■ தமிழக அரசின் தலைமைச் செயலாளர்களாக ஜெயலலிதா ஆட்சியில் தொடர்ந்து அவ்வப்போது மாற்றப்பட்டு நியமிக்கப்பட்டவர்கள் அத்தனை பேருமே பார்ப்பனர்கள் தான்!

■ அரசுத் துறையில் முக்கியப் பொறுப்புகளில் - பார்ப்பன அதிகாரிகளையே நியமித்தவர் ஜெயலலிதா.

■ தனியார் துறைகளில் - தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை வலிமை பெற்று - தி.மு.க., பா.ம.க., தேர்தல் அறிக்கைகளில் இது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், ஜெயலலிதா கட்சியின் தேர்தல் அறிக்கை இதுபற்றி மூச்சே விடவில்லை;

பொடா வழக்குகள் அனைத்துக்கும் - பிணையில் விடக்கூடாது என்று உச்சநீதி மன்றத்துக்கு அப்பீலுக்குப் போகிறார் ஜெயலலிதா ஆனால் கிராமப்புற மாணவர்களுக்கு 25 சதவித இடஒதுக்கீட்டை உயர் நீதிமன்றம் ரத்து செய்ததை எதிர்த்து மேற்முறையீடே செய்யவில்லை.

இப்படி நாட்டில் பார்ப்பன தர்பாரை - சங்கராச்சாரி ஆட்சியை, சூப்பர் இந்துத்துவா ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவுக்கு 69 சதவீத இடஒதுக்கீட்டைப் பற்றிப் பேச என்ன தார்மீக உரிமை இருக்கிறது? ■

## தோழர் பெரியார் பித்தன் பிரச்சினை

மதுரைதோழர் பெரியார் பித்தன் - தந்தை பெரியார் திராவிடர் கழகத்திலிருந்து விலகி, தி.க. தலைவர் வீரமணி முன்னிலையில் திராவிடர் கழகத்தில் சேர்ந்து விட்டதாக 'விடுதலை'யில் செய்தி வந்தது. தொடர்ந்து பெரியார் பித்தன் தன்னை சதிகாரர்கள், சதி செய்து தி.க.வுக்கு அழைத்துப் போய்விட்ட தாகவும், தந்தை பெரியார் திராவிடர் கழகத்திலே மீண்டும் இணைந்து தான் பணியாற்ற விரும்புவதாகவும், கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு கடிதம் எழுதினார். திராவிடர் கழகத் துரோகிகளின் முகத்திரையைத் தாம் கிழித்துக் காட்டப் போவதாகவும், ஆவேசமாக அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இது பற்றி எல்லாம் - ஈரோட்டில் நடக்கும் கழகத்தின் மாநில கலந்துரையாடல் கூட்டத்தில், நேரில் வந்து விளக்கம் அளிக்குமாறு தோழர் பெரியார் பித்தனுக்கு தெரிவித்தோம். ஆனால் அவர் ஈரோடு கலந்துரையாடல் கூட்டத்துக்கு வராததால், தோழர் பெரியார் பித்தன் பிரச்சினையில் தந்தை பெரியார் திராவிடர் கழகம் இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை என்பதைத் தோழர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

- **கொளத்தூர் மணி**, தலைவர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்.

## மயிலாடுதுறையில் எழுச்சியுடன் நடந்த பொதுக்கூட்டம்

இந்துத்துவா - பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டம் 26.3.2004 அன்று மாலை மயிலாடுதுறை நகரப் பூங்காவில் எழுச்சியுடன் நடந்தது. மாவட்டத் தலைவர் சீர்காழி பரசுராமன் தலைமை தாங்கினார். வழக்கறிஞர் குபரேந்திரன், நா.க. ரகுபதி, முரளிதரன் ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர். மாவட்ட அமைப்பாளர் இளையராஜா, மாவட்ட செயலாளர் ரமேஷ் மற்றும் கழகச் செயல்வீரர்கள், கூட்டத்துக்கு மிகச் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்; பொது மக்கள் ஏராளமாகத் திரண்டு வந்திருந்தனர்.

முன்னதாக - மாலை 3 மணியளவில் மயிலாடுதுறை கச்சேரி சாலையில் அமைந்துள்ள ரோசா திருமண மண்டபத்தில், மாணவர்கள் கருத்தரங்கம் நடைபெற்றது. 200 கல்லூரி மாணவர்கள், இதில் கலந்து கொண்டனர். இந்துத்துவா - உலக மயக் கொள்கைகளால், இளைஞர்களும், மாணவர்களும் சந்திக்கும் சமூக பொருளாதார நெருக்கடிகளையும், பாதிப்புகளையும் விளக்கி, பேராசிரியர் ஜெயராமன், விடுதலை இராசேந்திரன், கொளத்தூர் மணி ஆகியோர் மாணவர்களிடையே பேசினர். கருத்தரங்கம் - பொதுக்கூட்டம் இரண்டுமே, நல்ல கொள்கைப் பயனை விளைவித்தது. ■

# பா.ஜ.க. புரட்டுகளை விளக்கி ஆனூரார் பேச்சு

சென்னை தியாகராயர் நகரில் 23.3.04 அன்று மாலை 6.30 மணி அளவில் கழகத்தின் சார்பில் 'தெருமுனைக் கூட்டம்' நடைபெற்றது. தபசி குமரன் தலைமையில், சைதை மு.இராசா, சைதை மா. அன்பரசன், புலவர் முத்து எத்திராசன், ப.மனோகரன், அன்பு தனசேகர் ஆகியோர் உரையாற்றினர். கழக ஆட்சிக்குழு உறுப்பினர் ஆனூர் செகதீசன் சிறப்புரையாற்றினார். காஞ்சி சங்கராச்சாரியின் தகிடுதத்தங்களை, பா.ஜ.க.வின் புரட்டுகளை விளக்கி ஆனூரார் பேசினார். திரளாக மக்கள் செவிமடுத்தனர். ஜெ.செந்தில் நன்றி கூற கூட்டம் 10 மணிக்கு நிறைவுற்றது.

## பேராசிரியர் கல்விமணி வீடு புகுந்து வன்முறைக் கும்பல் தாக்குதல்

திண்டிவனத்தில் கடந்த 18 ஆண்டுகளாக - மனித உரிமைகளுக்காகவும், மக்கள் பிரச்சினைகளுக்காகவும் போராடி வரும் பேராசிரியர் கல்விமணி (கல்யாணி)யை - வன்முறையாளர்கள் வீடு புகுந்து தாக்க முயன்றிருப்பதை, வன்மையாகக் கண்டிக்கிறோம். கடந்த 24 ஆம் தேதி, தனது வீட்டின் அருகே உள்ள ஒரு கடையில் தகராறு செய்த பா.ம.க.வைச் சார்ந்த இருவரை, பேராசிரியர் தட்டிக் கேட்டுள்ளார். இதற்காக, முருங்கப்பாக்கத்தைச் சார்ந்த அக்கட்சியினர், பேராசிரியர் வீடு புகுந்து தாக்க முயன்றுள்ளனர். அவரது வீட்டில் இருந்த மக்கள் கண்காணிப்பகத்தின் மண்டல செய்தியாளர் இரா.முருகப்பன் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக அனைத்துக் கட்சியினர் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் திண்டிவனத்தில் கூட்டப்பட்டுள்ளது. ■


## புதுவை ஆளுநரின் 'நேர்மை'

புதுவை மாநில துணை நிலை ஆளுநராக இருப்பவர் என்.என்.ஜா., ஆர்.எஸ்.எஸ்.காரர். ஆளுநர் மாளிகையில் புதுவையில் பா.ஜ.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள லலிதா குமாரமங்கலத்தை அழைத்து விருந்து வைத்து, அவரை முக்கிய பிரமுகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். விருந்தில் பங்கேற்றவர்களில் - புதுவை மாநில தேர்தல் அதிகாரி சேட்டன் பி.சாங்கியும் அடக்கம். லலிதா குமாரமங்கலத்தின் சிகை அலங்காரம் பற்றி ஆளுநர் குறிப்பிடும் போது, 'இவர் வெளிநாட்டுக்காரர் அல்ல; இந்தியர் தான்' என்று சோனியாவை மறைமுகமாகக் கிண்டலடித்துள்ளார். பா.ஜ.க. வேட்பாளரை ஆளுநர் மாளிகைக்கு அழைத்து விருந்து கொடுத்தது, அதிகார அத்து மீறல். தேர்தல் ஆணையம், அந்த தேர்தல் அதிகாரியை பொறுப்பிலிருந்து நீக்கியிருக்கிறது. ஆளுநர் மட்டும் நீக்கப்பட மாட்டாரா ? ■

# சமூகநீதிக்கு சாவுமணி அடித்த "சமூகநீதி காத்த வீராங்கணை"

தமிழ்நாட்டில் கட்சி வேறுபாடு இன்றி தொடர்ந்து கட்டிக் காப்பாற்றப்பட்டு வரும் சமூகநீதிக் கொள்கைகளுக்கு சாவு மணிஅடித்தது, ஜெயலலிதாவின் ஆட்சி.

மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட தொழில் கல்லூரிகளில், கிராமப் புற மாணவர்களுக்கு தனியாக 15 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத்தியது தி.மு.க. ஆட்சி. இதனால் -



1997 - 98ல் - 864 கிராமப்புற மாணவர்களும்

1998 - 99ல் - 1,190 கிராமப்புற மாணவர்களும்

1999 - 2000-ல் - 1544 கிராமப் புற மாணவர்களும் பயனடைந்தனர்.

2001-ல் அ.தி.மு.க. பதவிக்கு வந்தவுடன் இந்த இடஒதுக்கீட்டை 25 சவீதமாக உயர்த்தி அறிவித்தது. யாரும் கோரிக்கை வைக்காமலேயே ஜெயலலிதா ஆட்சி உயர்த்தியது. உடனே புதிய அறிவிப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் சிலர் வழக்கு தொடர்ந்தனர். உயர்நீதிமன்றமோ, கிராமப்புற மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை ஒட்டு மொத்தமாக ரத்து செய்துவிட்டது. தி.மு.க. ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட 15 சதவீத இடஒதுக்கீடு தொடர்ந்து நீடித்திருந்தால், கடந்த 3 ஆண்டுகளில், 5000 கிராமப்புற மாணவர்கள் பயனடைந்திருப்பார்கள்; ஆனால் உயர்நீதி மன்றத் தீர்ப்புக்குப் பிறகு, ஜெயலலிதா ஆட்சி, இந்த அநீதியைக் களைய எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பொடா வழக்கில் - கைது செய்யப்பட்டவர்களுக்கு சாதகமான தீர்ப்புகள் எது வந்தாலும், உடனே உச்ச நீதிமன்றத்துக்கு அவசர அவசரமாக மேல் முறையீடு செய்யும் ஜெயலலிதா ஆட்சி, கிராமப்புற மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் களைய, எந்த மேல் நடவடிக்கையும் எடுக்ககாதது ஏன் ?

இதுதான் "சமூக நீதி காத்த வீராங்கனைகளின்" சரித்திரம் ! மண்ணின் மைந்தர்களான கிராமப்புற மாணவர்களின் கல்வி உரிமை பற்றியே கவலைப்படாத பார்ப்பன அம்மையார் தான் - 'அன்னியர்' சோனியா ஆட்சிக்கு வரக்கூடாது என்று, ஊர் ஊராகப் போய் பிரச்சாரம் செய்கிறார் ! நல்ல நாடகமப்பா ! ■

### இதழுக்கு நன்கொடை

திருப்பூர் கழகக் கூட்டத்தில் - பெரியார் முழக்கம் வளர்ச்சிக்காக ஏ.அய்.ஒய்.எல். வட்டாரக் குழு சார்பில் ரூ.50; தி.மு.க.வைச் சார்ந்த தோழர் இளங்கோவன் ரூ.50-ம்; மேட்டுப் பாறை தோழர் சுப்பராயன் ரூ.50; கழகத் தலைவரிடம் வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்.)

நூல் மதிப்புரை

# ம.க.இ.க.வின் மறைமுகப் பார்ப்பனியமும் மனங்கவர்ந்த இந்திய தேசியமும்

தமிழகத்தில் மக்களால் மதிக்கப்படக்கூடிய கவனத்தை ஈர்க்கக்கூடிய அமைப்புகளில் மக்கள் கலை இலக்கியக் கழகமும் ஒன்று. தேர்தல் அரசியல் பங்கேற்பின்றி மக்களுக்காக போராடும் அமைப்பு ம.க.இ.க.வாகும். இத்தகைய அமைப்பு சமீப காலங்களில் பெரியாரை முன்னெடுக்கிறது. பெரியார் சுட்டிய பார்ப்பனீயத்தை எதிர்க்கிறது. மாநாடு நடத்துகிறது. மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரம் செய்கின்றது. பண்பாட்டுத் தளங்களில் தனது பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளது. இத்தகைய மாறுதலான சூழலில் மேற்கண்ட தலைப்பிலான நூல் ஒன்றினை தமிழ்த் தேசிய பொதுவுடமைக் கட்சியின் 'தமிழர் கண்ணோட்டம்' வெளியிட்டுள்ளது. இந்நூலில் உள்ள கட்டுரைகள் 'தமிழர்கள் கண்ணோட்டத்தில்' தொடராக வெளி வந்தவையே. வாசகர்களிடையே ஏற்பட்ட ஆதரவை கருத்தில் கொண்டு நூலாக வெளியிட்டுள்ளனர். இந்நூல் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய நூலாகும். தமிழர்கள் சிந்திக்க சீர்தூக்கிட இது உதவும்.

பாட்டியூர் பாவலர் என்பவர் இந்நூலை எழுதியுள்ளார். இந் நூல் கீழ்க்காணும் புள்ளிகளில் விவாதித்துள்ளது.

- இடஒதுக்கீடு - இதில் ம.க.இ.க.வின் நிலையென்ன ? தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் இடஒதுக்கீட்டை ஆதரிக்கும் ம.க.இ.க. பிற்படுத்தப்பட்டோரின் இட ஒதுக்கீட்டை எதிர்ப்பது ஏன் ?
- 'பிற்படுத்தப்பட்ட சாதிகளில் ஒரு சில சாதிகளே இட ஒதுக்கீட்டை அனுபவிக்கின்றன' என்கிறது ம.க.இ.க. சரி, அதற்கான உள் கட்டமைப்பை இட ஒதுக்கீட்டில் மாற்றலாம் என மண்டல் குழு பரிந்துரைத்துள்ளதே அது பற்றி ம.க.இ.க.வின் நிலைப்பாடு என்ன ?
- பெரியாரின் மிக அடிப்படையான சமூகநீதியை வகுப்புவாரி உரிமையை புறக்கணித்து விட்டு, ம.க.இ.க. பெரியாருடன் உடன்படுகிறோம் என்பது ஏமாற்று வேலையல்லவா ?

கிட்டத்தட்ட நூலின் முதல் 29 பக்கங்கள் மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் வினாக்களை முன் வைக்கிறது.

30 முதல் 50 பக்கம் வரை தேசிய இனப் பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்களை மார்க்சிய நோக்கில் அணுகுகிறது இந்நூல். இப் பிரச்சினையில் ம.க.இ.க. முரண்படும் இடங்களை 'புதிய சனநாயகம்' எனும் ம.க.இ.க.வின் ஏட்டை ஆதாரமாகக் கொண்டே கருத்துகளை நிறுவுகிறது.

அடுத்த படியாக இந்நூல் ம.க.இ.க.வின் அரசியல் இடத்தை கேள்விக்குள்ளாக்குகிறது.

"ம.க.இ.க.வின் அரசியல் அமைப்பான இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனிஸ்ட் மாநில அமைப்புக் கமிட்டி) என்பது அனைத்திந்திய அமைப்பா ? தமிழகத்தில் மட்டும் உள்ள அமைப்பா ?"


- என்ற கேள்வியை எழுப்புகிறது. இக்கேள்வி ம.க.இ.க.வின் தேசிய இனப் பிரச்சினையில் அதன் நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த வைக்கும் வினாவாகும்.

பெரியாரின் அடிப்படை கொள்கையான சூத்திர இழிவுத் தன்மை நீக்கம், சமூக நீதி, பார்ப்பன எதிர்ப்பு போன்றவற்றை தவிர்த்து விட்டு பெரியாரை ஏற்பதாக கூறுவது, ஏமாற்று அல்லவா என்ற கேள்வியை முன் வைக்கிறது.

ஏங்கெல்ஸ் மதம் பற்றி கூறியனவற்றில் ம.க.இ.க. மறுத்தியங்கும் போக்கினையும் இந்நூல் சுட்டிக் காட்டுகிறது.

இந்நூலுக்கு ம.க.இ.க.வின் பதில், இதுவரை வரவில்லை; படிப்பதற்கும் விவாதிப்பதற்கும் உரிய நூல்.

வெளியீடு: தமிழர் கண்ணோட்டம், 20-7 முத்துரங்கம் சாலை, தியாகராயர் நகர், சென்னை-17. விலை: ரூ.18 தொ.பே. 044-24337251 – **பூ. மணிமாறன்**




வாஜ்பாய் ஒளிர்கிறார்!

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 8th April 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஏப்ரல் 15, 2004 | புரட்சி 3 | முழக்கம் 14 | விலை : ரூ.2.50

# பா.ஜ.க. - அ.தி.மு.க.வுக்கு எதிரான பிரச்சார நூல் - கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டி

பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியை ஏன் தோற்கடிக்க வேண்டும் என்பதை விளக்கி பல்வேறு தகவல்களை ஆதாரங்களோடு தொகுக்கப்பட்டுள்ள பிரச்சார நூல் ஒன்றை தந்தை பெரியார் திராவிடர் கழகம் வெளியிட இருக்கிறது. இத் தகவலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கடந்த 12 ஆம் தேதி - புதுவையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்தப் பிரச்சார நூல் வெளியீட்டு நிகழ்ச்சி, ஏப்.22ம் தேதி புதுவையில் நடக்கிறது என்றும் அவர் கூறினார். கழகத்தின் தேர்தல் நிலைப்பாட்டை - கழகத் தலைவர் செய்தியாளர்களிடம் விளக்கினார்.

“இந்தத் தேர்தலில் - பா.ஜ.க. - அ.தி.மு.க. பார்ப்பன மதவெறிக் கூட்டணியை தோற்கடிக்க, அதற்கு மாற்றாகக் களத்தில் நிற்கும் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை ஆதரிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். அ.தி.மு.க.வும் - பா.ஜ.க.வும் வெவ்வேறு அணிகளிலே இருந்த போதே - இந்த இரண்டு கட்சிகளும் - ஒரே கருத்துள்ள பார்ப்பன இந்துத்துவா கட்சிகள் என்பதை நாங்கள் சுட்டிக் காட்டி, பா.ஜ.க. - அ.தி.மு.க. - சங்கராச்சாரிகள் இணைந்துள்ள கூட்டணிக்கு எதிராக - கடந்த 2003 மார்ச் மாதத்திலிருந்தே இயக்கம் நடத்தி வருகிறோம். இவர்களை எதிர்த்து வீழ்த்துவோம். வர்ணாஸ்ரமத்தை எனும் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகிறோம். நாங்கள் கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து நடத்தி வரும் பிரச்சார இயக்கத்தின் தொடர்ச்சியாகவே இந்தத் தேர்தலைக் கருதுகிறோம். அதே அடிப்படையில், அ.தி.மு.க. - பா.ஜ.க. அணியை வீழ்த்த வேண்டும் என்று, இந்தத் தேர்தலில் முடிவெடுத்திருக்கிறோம். தமிழகம் முழுதும், பல பகுதிகளில் பிரச்சாரம் செய்து வருகிறோம். புதுவையில் வரும் 22, 23, 24 தேதிகளில், பொதுக் கூட்டங்கள், தெரு முனைக் கூட்டங்களை எங்களது புதுவை மாநிலக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. அதில் கலந்து கொள்கிறோம்” என்று கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.

பேட்டியின் போது, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், புதுவை மாநில தி.க. தலைவர் லோகு. அய்யப்பன் மற்றும் தோழர்கள் ஆகியோர் உடனிருந்தனர். ●

## தத்துவமே; நீ படமல்ல; பாடம்!



சாதிக் கோட்டையில் பிளவு ஏற்படுத்த வேண்டும் என்றால், பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் ஒரு சிறிதும் இடம் கொடுக்காத வேதங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் வெடி வைத்தே தீர வேண்டும். ‘ஸ்ருதிகள்’ - ‘ஸ்மிருதி’களான (இந்து) மதத்தை அழித்தொழிக்க வேண்டும். வேறு எந்த செயலும் பயன் தராது. இதுவே என் முடிவான கருத்து.

**- அண்ணல் அம்பேத்கர்**

# காந்தியைக் கொன்று - காமராசரைக் கொல்ல முயன்ற மதவெறிக் கூட்டமே! திரும்பிப் போ!

# ஆர்.எஸ்.எஸ். தலைவர்களை எதிர்த்து கழகம் மறியல்

## புதுவையில் லோகு. அய்யப்பன் தலைமையில் 110 தோழர்கள் கைது

புதுவை அரவிந்தர் ஆசிரமத்தில் நடக்கும் அன்னையின் விழாவை - ஆர்.எஸ்.எஸ். விழாவாக மாற்ற சங்பரிவார் கூட்டம் புதுவைக்குள் நுழைவதை எதிர்த்து, கழக சார்பில் மறியல் போராட்டம் நடந்தது. 110 கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

புதுவையில் உள்ள அரவிந்தர் ஆசிரமம்- ‘ஆன்மீக நிறுவனம்’ என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது. வெளிநாட்டினர் பலரும் இந்த மடத்துக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். சர்வதேச நிறுவனமாக செயல்பட்டு வரும் இந்த ஆன்மீக நிறுவனத்தைப் பயன்படுத்தி - ஆர்.எஸ்.எஸ். விசுவ இந்து பரிஷத் தலைவர்கள் புதுவைக்குள் தங்களின் மதவெறி நடவடிக்கைகளைப் பரப்பத் திட்டமிட்டனர்; அதற்கான முன்னோட்டமாக கடந்த ஏப்ரல் 3 ஆம் தேதி ஆசிரமத்தில் நடக்கும் “அன்னையின் விழா”வுக்கு, விசுவ இந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால், ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்சன் இருவரும் அழைக்கப்பட்டிருந்தனர். நாடு முழுதும் மதக் கலவரங்களைத் தூண்டி விட்டு, பச்சையாக, இந்துத்துவ வெறியைக் கிளப்பி விட்டு வரும், இந்த இரு பார்ப்பனர்களும், புதுவைக்கு வரவிருக்கும் செய்தி அறிந்தவுடன், புதுவை கழகச் செயல் வீரர்கள், உடனே செயலில் இறங்கினர். ஒரே நாள் இடைவெளியில், மறியல் போராட்டத்துக்குத் தயாரானார்கள். போராட்டம் அறிவிக்கப்பட்டவுடன், புதுவை பரபரப்பானது.

மாலை 3 மணியளவில் புதுவை பிள்ளைத் தோட்டம் பெரியார் சிலையிலிருந்து கண்டன ஊர்வலம் புறப்பட்டு, காந்தி சிலை அருகே மறியல் நடத்தப்படும் என்று அறிவித்தனர்.

புதுவைக்குள் நுழையும் பார்ப்பன மதவெறி சக்திகளே; திரும்பிப் போ !

தேசத் தந்தை காந்தியை சுட்டுக் கொன்ற மதவெறிச் சட்டமே ! புதுவைக்குள் நுழையாதே !

அனுமதியோம்; அனுமதியோம்; புதுவையைக் கலவரப்பகுதியாக்க அனுமதியோம்.

பச்சைத் தமிழர் காமராசரை உயிருடன் கொளுத்த முயன்ற சங்பரிவார் கூட்டமே ! திரும்பிப் போ !

அன்னையின் விழாவை, ஆர்.எஸ்.எஸ். விழாவாக்காதே;

- என்ற முழக்கங்களுடன் புதுவை மாநில தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் தலைமையில், கழகத் தோழர்கள் திரண்டனர். ஊர்வலத்துக்கு அனுமதிக்காமல், காவல்துறை, கைது செய்ய முயன்றபோது, சாலையிலே அமர்ந்து, சங்பரிவார் பார்ப்பனத் தலைவர்களை எதிர்த்து முழக்கமிட்டனர்; போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டன. சில நிமிடங்களுக்குப் பிறகு தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். 110 கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். உருளையன் பேட்டை காவல் நிலையத்துக்கு அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டு இரவு 7 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

கைதான பொறுப்பாளர்கள்: புதுவை மாநிலத் தலைவர் லோகு. அய்யப்பன் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் கோகுல் காந்திநாத், துணைத் தலைவர் இராம. வீராசாமி, பொருளாளர், வீர.மோகன், இளைஞரணித் தலைவர் சார்லஸ், செய்தித் தொடர்பாளர் ம.இளங்கோ, அரியாங்குப்பம் தொகுதித் தலைவர் சு.அகிலன், சிவராந்தகம் பகுதித் தலைவர் அ.பெருமாள்.

புதுவை, விடுதலைச் சிறுத்தைகள் தலைமை நிலையச் செயலர் ப. அமுதவன், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் இரா. அழகிரி, செந்தமிழர் இயக்கச் செயலாளர் ந.மு. தமிழ்மணி, தொண்டர் படை அமைப்பாளர் சி.மூர்த்தி உட்பட 110 தோழர்கள் கைதானார்கள். ●

## பழனியில் கழகம் ஆர்ப்பாட்டம்

பழனி தண்டபாணி முருகன் கோயிலில் - காஞ்சி சங்கராச்சாரியின் பார்ப்பனத் தலைமையீட்டைக் கண்டித்து கழக சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

18.4.2004 ஞாயிறு காலை 10 மணியளவில் பழனி - சன்னதி தெரு தேவர் சிலையிலிருந்து தோழர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு பழனி அடிவாரத்தில் உள்ள தேவஸ்தான அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள்.

தலைமை : **கழகத் தலைவர் கொளத்தூர் மணி**

முன்னிலை : **பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டினன்**

தமிழர் வழிபாட்டுரிமைகளில் - பார்ப்பன சங்கராச்சாரிகளின் தலையீட்டைத் தட்டிக் கேட்க தன்மான உணர்வுள் தமிழர்களே, திரண்டு வாரீர் !

**- தந்தை பெரியார் திராவிடர் கழகம், பழனி ஒன்றியம்.**

ஆர்ப்பாட்டம் ஏன் ? உள்ளே

தலையங்கம்

# வாஜ்பாயும் – மோடியும் தேடித் தந்துள்ள ‘‘பெருமைகள்’’

பாரதிய ஜனதா கட்சி மிகவும் வித்தியாசமான கட்சி என்று, அக்கட்சியினர் பிரச்சாரம் செய்கிறார்கள். கொள்கைகளுக்கான கட்சி என்றும், பொது வாழ்க்கையில் அறநெறிகளைப் பின்பற்றும் கட்சி என்றும், மார்தட்டிக் கொள்கிறார்கள். இவைகள் எல்லாம் உண்மைக்கு மாறான பிரச்சாரங்கள் என்பதற்கு இப்போது நடந்துள்ள இரண்டு செய்திகளை சான்றாகக் கூறலாம்.

பிரதமர் வாஜ்பாய் போட்டியிடும் லக்னோ தொகுதியில் நடந்துள்ள துயரச் சம்பவத்தைத் தான் குறிப்பிடுகிறோம். இந்த தொகுதியில் வாஜ்பாயின் அதிகார பூர்வ பிரதிநிதியாக செயல்படுபவர் லால்ஜி தண்டன். வாக்காளர்களுக்கு இலவச சேலைகளை தரும் நிகழ்ச்சியை, இவர் லக்னோ தொகுதியில் நடத்தியிருக்கிறார். இப்படி பகிரங்கமாக பரிசுப் பொருள்களைத் தருவது தேர்தல் விதிமுறைகளுக்கு மாறானது. எனவே தனது பிறந்தநாள் விழா என்ற பெயரில் லால்ஜிதண்டன் இலவச சேலைகளை விநியோகித்திருக்கிறார். அந்த இலவச சேலைகளை வாங்குவதற்குக் கூட்டத்தில் நெருக்கித் தள்ளிக் கொண்டு போய், நெரிசலில் சிக்கி 25 ஏழைப் பெண்கள் உயிரையே இழந்துவிட்டார்கள். மக்களின் வாழ்க்கை நிலை எவ்வளவு வறுமையாக இருக்கிறது என்பதைத் தான் இந்த சம்பவம் சந்தேகத்துக்கு இடமின்றி படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. இலவசமாக ஒரு சேலை கிடைக்கிறது என்பதற்காக உயிரையே இழக்கக்கூடிய அவலமான நாட்டைத் தான் ஒளிரும் நாடு என்று இவர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமராக இருக்கும் ஒருவரின் தொகுதியிலேயே வாக்காளர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்படுவதும், அது மரணத்தில் முடிவதும், நாட்டையே வெட்கித் தலைகுனிய வைத்துள்ள மாபெரும் அவமானமாகும். பிரதமர் தொகுதி என்பதால் இது உலகம் முழுதும் கவனத்தை ஈர்க்கக் கூடிய செய்தியாகி விட்டது. பார்ப்பன–பனியா–பன்னாட்டு நிறுவனங்கள் தான் நாட்டில் கொழுத்துக் கொண்டிருக்கின்றனவே. தவிர பாமர மக்கள் அல்ல. இதற்குப் பிறகும் இந்தியா ஒளிர்கிறது என்று பிரச்சாரம் செய்யக் கூடிய தார்மீக உரிமை இவர்களுக்கு இல்லை என்றே சொல்ல வேண்டும். பிரதமர் போட்டியிடும் தொகுதியிலேயே நடந்துள்ள, இந்த முறை கேடுகளுக்கு தேர்தல் ஆணையம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பது தான், இப்போது எல்லோரும் எதிர்பார்ப்பதாகும்.


இதே போல் குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சியில் நடந்த முஸ்லீம்கள் இனப்படுகொலை தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள ஒரு தீர்ப்பு. பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழித்துக் காட்டுவதாக இருக்கிறது. ‘பெஸ்ட் பேக்கரி’ என்ற ரொட்டிக் கடையில் 14 முஸ்லீம்களை மதவெறிக் கும்பல் உயிருடன் எரித்துக் கொலை செய்தது. ஜஹீரா என்ற பெண் மட்டும் உயிருடன் தப்பினார். இந்த வழக்கில் ஒரே சாட்சி அந்தப் பெண் மட்டும் தான். அந்தப் பெண்ணின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 9 பேர் எரித்துக் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர். இதில் குற்றம் சாட்டப்பட்ட 21 குற்றவாளிகளையும் நிரபராதி என்று கூறி விடுதலை செய்துவிட்டது, குஜராத் உயர் நீதிமன்றம்.

வழக்கில் ஒரே சாட்சியான ஜஹீரா மிரட்டப்பட்டார். எந்த ஆதரவும் இல்லாமல் குடும்பத்தையே இழந்த அந்தப் பெண் உயிருக்கு பயந்து நீதிமன்றத்தில் உண்மையை மறைத்தார். குற்றவாளிகள் விடுதலையாகி விட்டனர். பிறகு ‘கம்பட்கம்யூனலிசம்’ பத்திரிகையைச் சார்ந்த திருமதி டீஸ்டா ஷெடால்வத் – அந்தப் பெண்ணுக்கு உரிய உதவிகளைச் செய்து மீண்டும் உயர்நீதிமன்றத்தில் மனுபோடச் செய்தார். எனக்கு உண்மைகளைக் கூற அனுமதி வேண்டும், அச்சுறுத்தல் காரணமாக உண்மைகளைக் கூற முடியவில்லை’ என்று ஜஹிரா தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் ஏற்காததோடு திருமதி டீஸ்டா ஷெடால்வத்தையும் நீதிமன்றம் கண்டித்தது. இப்போது உச்ச நீதிமன்றம் – காந்தி பிறந்த குஜராத் மண்ணில் இப்படி ஒரு அவலத்துக்குத் துணை நின்ற மோடி அரசைக் கடுமையாகக் கண்டித்துள்ள தோடு, இந்த வழக்கை மீண்டும் விசாரணை நடத்தி மகாராஷ்டிராவில் விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பளித் துள்ளது. மோடி இதற்குப் பிறகும், பதவி விலக மறுக்கிறார். பா.ஜ.க. வித்தியாசமான ஆட்சி என்ற வாதம் பொய்மையானது என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

# சவர்க்கார் பற்றி வை.கோ. பேசியதில் என்ன தவறு?

24.3.04 அன்று இரவு ஜெயா தொலைக்காட்சியில் நேர்காணல் ஒன்று ஒலி-ஒளி பரப்பப்பட்டது. நேர்காணலில் பதிலளித்தவர் பா.ஜ.க. தேசியச் செயலாளர் இல.கணேசன். நல்ல திருடன் கூட்டாளிக்கு துரோகம் செய்வதில்லை என்பதைப் போல, பார்ப்பன கும்பலுக்கு வாய்ப்பானவற்றையே வினாக்களாகத் தொடுத்தார் சுதாங்கன்.

அந்த நேர்காணலில், ‘வை.கோ. அவர்கள், சாவர்க்கரைப் பற்றி விமர்சித்துள்ளாரே ?’ என சுதாங்கன் எடுத்துக் கொடுக்க,அதற்கு பதிலளித்த இல.கணேசன், ‘சாவர்க்கரைப் பற்றிப் பேச வை.கோ.வுக்கு தகுதி இல்லை; சாவர்க்கரின் கால் தூசுக்குக்கூட வை.கோ. ஈடாக மாட்டார்; சாவர்க்கரின் தேசபக்திக்க ஈடாக இந்தியாவில் வேறு எவரையும் கூற முடியாது’ என்று சிண்டு இருந்தால் அவிழ்ந்து விழும் அளவுக்கு மிகக் காட்டமாக பதிலளித்தார். ‘பச்சைப் புல்லின் கீழே படுகுழி’ என்பதைப் போன்று சாவர்க்கரை தூக்கிப் பிடிக்கும் வாய்ப்பில் பெயரைக் குறிப்பிடாமல் ‘காந்தியாரை’த் தூக்கிப் போட்டு உடைத்தார் இல.கணேசன்.



வை.கோ. ‘பொடா’ என்ற ஆள் தூக்கிச் சட்டம் மூலம் இன எதிரிகளால் சிறை வைக்கப்பட்டார். ஆனால், மிகநீண்ட காலம் பிணையில் வருவதைப் பற்றி வை.கோ. கிஞ்சித்தும் சிந்தித்துப் பார்க்கவில்லை என்பதை அவரின் அரசியல் எதிரிகள் கூட ஒப்புக் கொள்வர். பின்னர், நீதிமன்ற நடவடிக்கைகள் அனுமதியளித்திருக் கின்ற வழியில் பிணையைப் பெற்று நேர்மையான முறையில் தான் சிறையிலிருந்து வெளியே வந்தார். இப்போது ‘பொடா’ மறுபரிசீலனை ஆணையம் - வை.கோ. மீதும், ம.தி.மு.க.வினர் மீதும் ‘பொடா’வின் கீழ் வழக்குகள் தொடர்ந்ததே தவறு என்று திட்ட வட்டமாகத் தெரிவித்துவிட்டது.

வை.கோ. எந்தவிதமான மன்னிப்புக் கடிதத்தையும் அரசுக்கு எழுதிக் கொடுத்துவிட்டோ அல்லது அவரின் குடும்பத்தினர் அரசிடம் மன்றாடியோ - நேர்மையற்ற வழியில் அவர் சிறையிலிருந்து வெளிவரவில்லை.

காந்தியாரின் கொள்கைகளில் பல முரண்பாடுகளைக் காண்பவர்கள் நாம். இன்னும் ஒரு படி மேலே போய் சொல்வதென்றால், சத்திய சோதனை எழுதிய காந்தியாரின் நேர்மையையே விமர்சனத்துக்குள்ளாக்கு பவர்கள் நாம். ஏனெனில், வைக்கம் போராட்டத்தைப் பற்றி ‘யங் இந்தியா’ பத்திரிகையில் ஏறத்தாழ 70 பக்கங்கள் எழுதிய காந்தியார், எந்த இடத்திலும் ‘வைக்கம் வீரர் பெரியாரைப்’ பற்றிய ஒரு சொல்கூட இடம் பெறக்கூடாது என்பதில் மிகக் கவனமாக( !) இருந்தார் என்ற அளவில் காந்தியாரின் நேர்மையில்( ?) கூட நாம் நம்பகத்தன்மை அற்றவர்கள். இருப்பினும் விடுதலையின் லாப நட்டக் கணக்கில் காந்திக்கு பங்குண்டு. ஆனால், இந்தியத் துணைக் கண்ட விடுதலையில் காந்தியாரின் பெயரைக்கூட உச்சரிக்க மறுத்து சாவர்க்கரை தூக்கிப் பிடிக்கிறாரே இல. கணேசன், அந்த தேச ‘பக்தித் திலகம்’ சாவர்க்கரின் பங்கையும், தகுதியையும் சற்று அலசுவோம்.

நாசிக் மாவட்டத்தின் அன்றைய ஆட்சியாளராக இருந்த ‘ஜாக்சன்’ என்ற வெள்ளைக்கார அதிகாரியை கொன்றதாகவும், சட்டப்பூர்வமாக உருவாக்கப்பட்ட அரசைக் கவிழ்க்க முயன்றதாகவும் சாவர்க்காரின் மேல் குற்றம் சாட்டப்பட்டு அவருக்கு 50 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது. விதிக்கப்பட்டது தான் 50 ஆண்டுகளே தவிர, அவர் தண்டனை அனுபவித்தது 1911 முதல் 1924 வரையிலான 13 ஆண்டுகள் தான்.

இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைந்ததால் சாவர்க்கர் விடுவிக்கப்பட்டாரா ? அல்லது சிறையில் சாவர்க்கரின் நெஞ்சுரத்தையும், போர்க்குணத்தையும் எண்ணி வியந்த வெள்ளையர்கள் ‘ஒரு மாவீரனை சிறையிலடைத்து விட்டோமே’ என வெட்கித் தலை குனிந்து விடுதலை செய்தனரா ? இவ்வகை வினா எழுதல் இயல்பு தானே ? அதெல்லாம் ஒன்றுமில்லை.

சாவர்க்கரின் குடும்பத்தினர் 1920 முதலே அவரை விடுதலை செய்யும்படி வெள்ளையர்களிடம் மன்றாடினர். தன் குடும்பத்தினர் மன்றாடியும் மசியாத வெள்ளையர்களிடம் மனமுவந்து மண்டியிட்டார் சாவர்க்கார். கடைசியில் வெள்ளையர் அவருக்கு விதித்த இரு நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து சாவர்க்கர் வெளியே வந்தார்.

அந்த இரு நிபந்தனைகள் என்ன ?

1) விடுதலையான பிறகு சாவர்க்கர் பம்பாய் மாகாணத்தின் ரத்னகிரி மாவட்டத்தில் தான் தங்க வேண்டும். அரசின் அனுமதியின்றி அம் மாவட்டத்தை விட்டு வெளியேறக் கூடாது.

2) எந்தவிதமான அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது.

இது தவிர நிபந்தனையாக இல்லாமல், ‘சாவர்க்கர் மீது நடத்தப்பட்ட விசாரணை பாரபட்சமாக நடக்கவில்லை என்றும், சாவர்க்கருக்கு விதிக்கப்பட்ட தண்டனை நியாயமானது தான் என்பதை சாவர்க்கர் ஒப்புக் கொள்ள வேண்டும்’ என்றும் பிரிட்டிஷ் அரசு கூறியது.

தேசபக்தர் திலகமான( ?) சாவர்க்கர் என்ன செய்தார் தெரியுமா ?

வெள்ளையர் விதித்த இரு நிபந்தனைகளை ஏற்றதோடு, அவர்கள் நிபந்தனையாக விதிக்காமல் வலியுறுத்தியதையும் சேர்த்து பின்வருமாறு எழுதிக் கொடுத்தார்.

‘‘என் மீதான விசாரணை பாரபட்சமின்றி நடந்தது. எனக்கு விதிக்கப்பட்ட தண்டனை நியாயமானது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். கடந்து போன காலங்களில் நான் பின்பற்றிய வன்முறைப் பாதையை மனதார வெறுக்கிறேன். எனது சக்திக்குட்பட்ட வரையில் (வெள்ளையர் போட்ட) சட்டத்தையும், அரசியல் சாசனத்தையும் உயர்த்திப் பிடிப்பது எனது கடமை என்று உணர்கிறேன்... ?’’ இதுதான் சாவர்க்கர் எழுதிக் கொடுத்த ‘வீர சரண்டர்’ காவியம்.

அது மட்டுமன்றி, சாவர்க்கர் விடுதலையான பிறகு எழுதிய ஒரு கட்டுரையில் ‘சுயராஜ்ஜியம்’ என்ற சொல்லை பயன்படுத்த அதை வெள்ளையர் கண்டித்தபோது ‘சுயராஜ்ஜியம்’ என்ற சொல் எனது கருத்தல்ல என்று விளக்கம் அளித்து வெள்ளையர்க்கு தனது விசுவாசத்தைக் காட்டிய ‘சுயராஜ்ஜியப் புலி’ தான் சாவர்க்கர்.

இந்த சாவர்க்கரைப் பற்றி வை.கோ. பேசுவதில் என்ன தவறு இருக்கிறது ? வைகோ மன்னிப்புக் கேட்கவில்லை. பொடா நீதிமன்ற நிபந்தனைகளை கண்ணை மூடிக் கொண்டு ஏற்காமல் - அதற்கும் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து, நிபந்தனைகளை தளர்த்தி வெளியே வந்தவர். அதோடு காந்தியார் கொலையில் குற்றம்சாட்டப்பட்ட குற்றவாளி சாவர்க்கர், அவரது படத்தை நாடாளு மன்றத்தில் திறந்த வைத்த கூட்டம் தேசபக்தி பற்றி பேசலாமா ?

– ஜஸ்டின் ராஜ்

# புதுவை – பெரம்பலூர் வேட்பாளர்கள் கழகத் தலைவருடன் சந்திப்பு

புதுவை நாடாளுமன்றத் தொகுதியில் பா.ம.க. வேட்பாளராகப் போட்டியிடும் பேராசிரியர் இராமதாஸ் 12.4.2004 அன்று புதுவையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், புதுவை மாநில கழகத் தலைவர், லோகு அய்யப்பன் ஆகியோரை சந்தித்து சால்வை அணிவித்தார். கழகத் தலைவர் தங்கியிருந்த அரசு விருந்தினர் மாளிகைக்கு வந்த அவர், தேர்தல் நிலவரம் பற்றி உரையாடினர். கழகத்தின் சார்பில் புதுவையில் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்த இருப்பது பற்றியும், பிரச்சார நூல் வெளியிடுவது பற்றியும் அறிந்து மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

பெரம்பலூரில் 11.4.2004 அன்று மறைந்த பெரியார் தொண்டர் சி. துரைராஜ் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி இலாடபுரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி படத்தைத் திறந்து வைத்து இரங்கல் உரையாற்றினார். மாலை பெரம்பலூர் தி.மு.க. நாடாளுமன்ற வேட்பாளர் முன்னாள் அமைச்சர் ராஜாவை ஆதரித்து நடந்த பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசினார். இரண்டு நிகழ்ச்சிகளும், முன்னாள் அமைச்சர் ராஜா, கழகத் தலைவருடன் கலந்து கொண்டார்.

# அன்று 'ராமப்பய்யன்', இன்று சங்கராச்சாரி!

## பழனி கோயிலில் என்ன நடக்கிறது?

பழனி முருகன் கோயிலில் வழிபாட்டு முறைகளில், பார்ப்பனியமோ, பார்ப்பனர்களோ இருந்தது இல்லை. அந்தக் கோயிலில் அர்ச்சகர்களாக பண்டாரகர்கள் என்று அழைக்கப்படும் பார்ப்பனரல்லாத தமிழர்களே, தொன்று தொட்டு இருந்து வந்தனர்.

● மதுரையில் ஆட்சி புரிந்த திருமலை நாயக்கர் மன்னர் காலத்தில் அமைச்சராக இருந்த ராமப்பய்யர் என்ற பாாப்பனர் - பழனி கோயிலுக்குப் போனபோது பார்ப்பனரல்லாத பண்டாரகர்களிட மிருந்து விபூதி வாங்குவதை இழிவு என்று கருதி, விபூதி வாங்க மறுத்தான். உடனே ஈரோடு மாவட்டம் கொடுமுடியிலிருந்து நான்கு பார்ப்பனர்களை அழைத்து வந்து அவர்களிடம் - அர்ச்சகர் பொறுப்புகளை ஒப்படைத்து, அதுவரை காலம் காலமாக அர்ச்சனை செய்து வந்த பார்ப்பனரல்லாத பண்டாரகர்களை வெளியேற்றினான்.

● பார்ப்பான் நுழைந்த பிறகு - அதுவரை பழனி கோயிலிலே இடம் பெற்று வந்த தமிழர் வழிபாடு நிறுத்தப்பட்டு சமஸ்கிருத அர்ச்சனைகள் துவங்கின.

● கொடுமுடியிலிருந்து - பழனி முருகன் கோயிலுக்கு அர்ச்சகர்களாக பொறுப்பு ஏற்க வந்த நான்கு பார்ப்பனர் களும் - புறப்படுவதற்கு முன் கொடுமுடி யில் உள்ள ஒரு குளத்தில் "புனித" முழுக்குப் போட்டனர். எதற்குத் தெரி யுமா ? பழனி கோயில் - பார்ப் பனரல்லாத தமிழர்களான பண்டாரகர்கள் கோயிலுக் குள் நடத்தி வந்த 'அர்ச்சனைகளால்' ஏற்பட்டு விட்ட 'தீட்டை'க் கழிப்பதற்காக.

● தமிழர்கள் - அர்ச்சனை செய்த தால் தீட்டுப்பட்டுவிட்டது என்று கூறி தமிழர்களை பார்ப்பான் அவமதித்தான் என்ற வரலாற்று உண்மையைப் புரியாத தமிழர்கள் - இப்போதும் பழனிக்கு காவடி எடுப்பதற்குப் போகும் வழியில் கொடுமுடி போய், பார்ப்பான் மூழ்கி எழுந்த "குளத்தில்" இவர்களும் முழுக்குப் போட்டு, பார்ப்பான் சுமத்திய அவமானத்துக்கு தங்கள் அங்கீகாரத்தை வழங்கி வருகிறார்கள். இதற்குப் பெயர் "தீர்த்தக் காவடி" - பார்ப்பான் கற்றுத் தந்த மரபு களை கண்மூடித்தனமாக பின்பற்று வதால், நாம் எப்படி இழி மக்களாகி வருகிறோம் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

● பழனி கோயில் உள்ள மூலவர் சிலை 18 சித்தர்களில் ஒருவரான போகர் என்வரால் மூலிகைகளால் உருவாக்கப் பட்டதாகும். சித்தர் பரம்பரையில் வந்த புலிப்பாணிசாமிகள் சிலைக்கு நீருற்றி ஆராதனை செய்து வந்தார். பழனி முருகன் கோயிலில் புலிப்பாணி பரம் பரைக்கு உரிமை உண்டு. புலிப்பாணியின் 'சமாதி' பழனி முருகன் கோயிலுக்குள் தான் இருக்கிறது.

● மூலிகைகளால் ஆன முருகன் சிலை குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக - கோயில் கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி, நீர் இருக்கும் வகையில் தடாகங்களை ஏற்படுத்தி, அதில் தண்ணீரை நிரப்புவது வழக்கம். தற்போது, அவைகள் எடுக்கப்பட்டுவிட்டன.

● மூலிகையால் ஆன முருகன் சிலையை பாதுகாப்பதற்காக - அதற்கான பரிந்துரைகளைக் கூற, 1984-ல் எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில் - உயர்நீதிமன்ற நீதிபதி சோமசுந்தரம் தலைமையில், சிலை பாதுகாப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. குழு தனது பரிந்துரையில், பழனி முருகன் சிலையை மாற்றிவிடலாம் என்ற யோசனையை நிராகரித்துவிட்டது.

● அதன் பிறகு, சிலை முழுவதற்கும், முகத்தைத் தவிர, தங்கக் கவசம் சாற்றலாம் என்று சங்கராச்சாரி ஆலோசனை கூறி, ஜெயலலிதா ஆட்சியும் அதை ஏற்றுக் கொண்டது. மூலிகையால் ஆன சிலையும் - தங்கமும் வேதியல்படி பொருந்தி வராது என்று, புலிப்பாணடி உட்படப் பக்தி பிரமுகர்களும், பொது மக்களும் எதிர்த்தனர். பிறகு அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

● தன்னுடைய திட்டத்தை - ஜெயலலிதா ஏற்றுக் கொண்ட பிறகும், நிறைவேறாமல் தடுக்கப்பட்டதை சகிக்க முடியாத சங்கராச்சாரி, பார்ப்பன மரபுக்கு எதிரான முருகன் சிலையை மாற்றுவதில் மிகவும் குறியாக இருந்தார்.

● தொடர்ந்து சங்கராச்சாரி பழனி கோயிலுக்குள் வரத் துவங்கினார். பழனி முருகன்கோயிலுக்குள் மூல விக்ரகம் வரை சென்று அர்ச்சனை நடத்தும் உரிமை சங்கராச்சாரிக்கு இல்லை. பொதுவாக சங்கராச்சாரி போன்ற ஸ்மார்த்தப் பார்ப்பனர்களுக்கு எந்தக் கோயிலுக்குள்ளும் கருவறைக்குள் நுழையும் உரிமை கிடையாது. பார்ப்பனர்கள் கூறும் ஆகமவிதிகளே, இந்த உரிமைகளை அவர்களுக்கு மறுக்கின்றன. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதை, ஆகமவாதிகளைக் காட்டி தடுக்கும் சங்கராச்சாரி பார்ப்பனர்கள், தங்கள் ஆதிக்கத்துக்காக ஆகம விதிகளை மீறி செயல்படுகிறார்கள் என்பதைத் தமிழர்கள் கவனிக்க வேண்டும்.

● பழனி கோயிலுக்குத் தொடர்ந்து வரத் துவங்கிய சங்கராச்சாரி, படிப்படியாக தலையிடத் துவங்கினார். முதன்முதலாக 6 கால பூஜையில் குறுக்கிட்டார். கோயில் பூஜைகளில், தண்டாயுத பாணிக்கு தனியார் ஒருவரால் வழங்கப்பட்ட தங்கத்தினால் ஆன வேலை வைத்துத்தான் பூசை நடத்தப்பட்டு வந்தது. சங்கராச்சாரி- அந்த வேலை அகற்றி விட்டு, சங்கரமடத்திலிருந்த வேலைக் கொண்டு போய் வைத்து, 6 கால பூஜை, அபிஷேகம் நடத்த உத்தரவிட்டார்.

● கருவறைக்குள் நுழைந்து, அபிஷேகம் செய்யும் உரிமை இல்லை என்றாலும் - ஜெயலலிதா அரசில் தனக்குள்ள செல் வாக்கைப் பயன்படுத்தி, கருவறைக்குள் நுழைந்து, அபிஷேகம் செய்தார்.

● பழனி முருகன் சிலைக்கு பதிலாக - புதிய சிலை ஒன்று செய்யப் போவதாக அறிவித்தார்; அப்போதும் எதிர்ப்பு வந்தது.

● அப்போது புலிப்பாண்டியார், கோயிலுக்குள் எந்த மாற்றங்கள் செய்தாலும், தங்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று, புலிப்பாணடி பரம்பரை உரிமைகளை சங்கராச்சாரி மறுத்து தன்னிச்சையாக செயல்படுவதைக் கண்டித்தார்.

● காஞ்சிபுரம் மடத்திலிருந்து புலிப் பாணடிக்கு அழைப்பு வந்தது. சங்கராச் சாரி, தனக்கு சமமாக அமருவதற்கு குடியரசுத் தலைவர்களைக்கூட அனுமதிப் பதில்லை. ஜெயலலிதா ஒருவரை மட்டுமே அனுமதிக்கிறார். இத்தகைய அவமதிப்பு களை ஏற்க மறுத்த புலிப்பாணடியார் - தன்னுடனேயே ஒரு இருக்கையை எடுத்துச் சென்று, சங்கராச்சாரிக்கு சமமாகப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து தனது உரிமையை நிலை நாட்டி, முதுகெலும்புள்ள சொரணையுள்ள தமிழன் என்பதை நிலை நாட்டினார். புலிப்பாணடி பரம்பரைக்கு, பழனி கோயிலுக்குள் இருக்கும் உரிமைகள் பற்றித் தமக்கு எதுவுமே தெரியாது என்று அப்போது சங்கராச்சாரி கூறினார். முதலமைச்சர் ஜெயலலிதா, முருகன் சிலையைமாற்ற விரும்புவதாக சங்கராச்சாரி அவரிடம் தெரிவித்தார்.

● இந்த நிலையில் ஜன.25 ஆம் தேதி 200 கிலோ எடையுள்ள 'அய்ம் பொன்னால்' ஆன புதிய முருகன் சிலை ஒன்று சென்னை அருகே உள்ள சொர்ண கலைக்கூடத்தில் செய்யப்பட்டு பழனிக்குக் கொண்டு வரப்பட்டு நள்ளிரவு 3 மணிக்கு கர்ப்பக் கிரகத்துக்குள் "பிதிஷ்டை" செய்யப்பட்டது. சங்கராச்சாரி ஆணைப்படி - தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஒப்புதலோடு இது நடந்ததால் - இந்த நள்ளிரவு சதிக்கு அறநிலையத் துறை ஆணையர் ஜி. இராமகிருஷ்ணன், பழனி கோயில் இணை ஆணையர் கே.கே.ராஜா ஆகியோர் உடனிருந்து, இந்த 'பிரதிஷ்டை' பார்ப்பனச் சடங்குக்கான ஏற்பாடுகளை செய்து, அவர்களே முன்னின்று செய்து முடித்தனர்.

● வழக்கமாக இரவு நேர பூஜை முடிந்தவுடன் பழனி கோயில் மூடப்பட்டுவிடும். ஆனால், புதிய சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட அன்று, வழக்கத்துக்கு மாறாக, கோயில்களை மூடாமல் திறந்து வைத்திருந்தனர். இரவு 10 மணிக்குமேல், பலத்த போலீஸ் காவலுடன், புதிய சிலையைக் கொண்டு வந்து - வேத பார்ப்பன மந்திரங்களுடன், நள்ளிரவு 3 மணிக்கு ஏற்கனவே இருந்த முருகன் சிலைக்கு முன்பாகவே நிறுவி விட்டனர். இதனால் சித்தர் உருவாக்கிய முருகன் சிலை, மார்பு வரை மறைந்து விடுகிறது. அலங்காரம் செய்து கிரீடம் வைத்தால் புதிய சிலை 'ஒரிஜினல்' பழனி முருகன் சிலையை முழுமையாக மறைத்து விடும்.

● பார்ப்பனரல்லாத சித்தரால் தயாரிக்கப்பட்டு தமிழர் மரபுகளோடு வழிபட்டு வந்த பழனி முருகன் சிலை வழிபடத் தகுதியற்றது என்ற பச்சைப் பார்ப்பன வெறியோடு சங்கராச்சாரி இந்த அத்துமீறலை ஜெயலலிதா ஆட்சியின் முழு ஆதரவோடு நடத்தி முடித்துவிட்டார்.

● அன்று 'ராமப்பய்யன்' துவங்கி வைத்த பார்ப்பனிய ஊடுருவலை இன்று சங்கராச்சாரி முடித்து வைத்திருக்கிறார். தமிழர்கள் விழிப்புற்றிருக்கும் கால கட்டத்திலே இந்தப் பார்ப்பனப் படையெடுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன.

● அன்று ராமப்பய்யன் - இன்று சங்கராச்சாரி. அன்று திருமலைநாயக்கர் - இன்று ஜெயலலிதா.

ஆத்திகத் தமிழர்கள் பொங்கி எழுந்திருக்க வேண்டும்! எழவில்லை!

ஆனாலும் - தந்தை பெரியார் திராவிடர் கழகம், தமிழர்களின் தன்மானக் கண்ணோட்டத்தோடு பார்ப்பனர்களின் பண்பாட்டுப் படையெடுப்புக்கு எதிராகக் களம் இறங்கியிருக்கிறது.

தமிழர்களே, அணிவகுத்து வாருங்கள்! ●

## கருணாவின் பின்புலம் எது?

விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்திய - கருணாவின் பின்னால் இருந்து இயக்கும் சக்திகள் யாவை என்பது அம்பலமாகிவிட்டது. புலிகள் தாக்குதலிலிருந்து தப்பித்து தலைமறைவான கருணா, சிங்கள ராணுவத்தின் ஜீப்பிலே - ராணுவப் பாதுகாப் போடு வெளியேறி இருக்கிறார் என்று கூறப் படுகிறது. கருணாவின் ஆதரவாளர்கள் சந்திரிகா கட்டுப்பாட்டில் இருக்கும் சிங்கள ராணுவத்திடம் சரணடைந்திருக்கிறார்கள். உடனே, இதில் தலையிட்டு,இந்தப் பிரச் சினையை தனக்கு சாதகமாக்கிக் கொள்ள, சிங்கள ராணுவம் திட்டமிட்டது. ஆனால், அதற்கு வாய்ப்பு தராமல், விடுதலைப்புலிகள், கருணா கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைத் தங்கள் வசமாக்கி, போர் நிறுத்தத்தையும் அறிவித்து விட்டனர்.

மட்டக்களப்பு அம்பாறை பகுதியில் சிங்களர் களும், முஸ்லீம்களும் கணிசமாக இருக்கின்ற னர். தமிழர்கள் இவர்களை அங்கே பகைத்துக் கொண்டு வாழ முடியாது. இந்நிலையில், விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தனது பகைமையாக்கிக் கொண்ட கருணா, இனி, சந்திரிகாவின் ஆதரவை நம்பியே இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளில் வாழும் முஸ்லீம்களுக்கு எதிரான தாக்குதலில் - விடுதலைப்புலிகளுக்குத் தெரியாமலே ஈடுபட்டவர் கருணா. முஸ்லீம்கள் புலிகளுக்கு எதிராகக் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் பிரபாகரன் தலையிட்டு, கருணாவைக் கண்டித்த தோடு, நடந்த சம்பவங்களுக்காக இயக்க சார்பில் வருத்தம் தெரிவித்த சம்பவத்தையும் நினைவூட்டு கிறோம்.

## ஜம்மு காஷ்மீரில் முதன்முதலாக இடஒதுக்கீடு

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் முதன் முதலாக இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை முப்தி முகம்மது சய்யத் தலைமையில் நடக்கும் மாநில ஆட்சி, சட்டமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. காஷ்மீர் மாநில ஆட்சி, விசேட உரிமைகள் கொண்ட மாநிலமாக இருந்ததால், இடஒதுக்கீடு சட்டங் களை அம்மாநில அரசே நிறைவேற்ற வேண்டும். அதன்படி சுதந்திரத்துக்குப் பிறகு காஷ்மீரில் அதிகாரத்தில் இருந்த மாநில ஆட்சிகள், இடஒதுக்கீடு கோரிக்கைகள் பற்றி அக்கறை இல்லாமலே இருந்து வந்தன. இப்போது தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், கல்வி சமூக ரீதியாக பிற்படுத்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்பு, பதவி உயர்வு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடுக்கு வழி வகுக்கும் மசோதாவை சட்டமன்றத்தில் கொண்டு வந்து, முப்தி அரசு நிறைவேற்றியுள்ளது. தாழ்த்தப் பட்டோர், பழங்குடி அமைப்புகள் இந்த முடிவைப் பாராட்டி வரவேற்றுள்ளன.

## தூக்குத் தண்டனை நிறுத்தம்

வீரப்பனுக்கு உதவியதாகக் கூறி - உச்சநீதி மன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஞானபிரகாசம், சைமன், மீசேகரமாத்தையா, பிலேவேந்திரா ஆகியோருக்கான தண்டனை நிறைவேற்றம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவருக்கு கருணை மனு போடப்பட்டுள்ளதால், குடியரசுத் தலைவர் இந்த கருணை மனு மீதான கருத்தைத் தெரிவிக்கும் வரை, தூக்குத் தண்டனையை நிறைவேற்ற முடியாது. இவர்களுக்கு ஏப். 16 ஆம் தேதி தூக்குத் தண்டனை நிறைவேற்ற தேதி குறிக்கப்பட் டிருந்தது. இந்தத் தூக்குத் தண்டனையை எதிர்த்து கருநாடக மாநிலம் மாட்டர்லியில் தூக்குத் தண்டனை எதிர்ப்பு மாநாடு - அதிரடிப் படை கெடுபிடிகளையும் மீறி எழுச்சியுடன் நடந்தது. எப். 13 ஆம் தேதி பெங்களூரிலும் தூக்குத் தண்டனை எதிர்ப்பு மாநாடு நடை பெற்றது. இரண்டு மாநாட்டிலும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்றார்.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

ஆண்டுக்கட்டணம் ரூ.150/-

தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29,
பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை - 600 041.
தொலைபேசி: 2451 2857,
2847 4830

## நன்கொடைகள்

● சென்னை எம்.ஜி.ஆர். நகர்ப் பகுதி கழகத் தோழர் கரு. அண்ணாமலை - தமிழ்ச்செல்வி அவர்களின் இரண்டாவது மகன் அ.அன்பரசன் பிறந்த நாளை (12.04.2004) முன்னிட்டு பெரியார் முழக்கத்திற்காக நன்கொடை ரூபாய் ஆயிரம் வழங்கியுள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் - இதுபோல் நன்கொடைகளை வழங்கி வருகிறார்.

● கழக வழக்கறிஞர் குமாரதேவன் - பெரியார் முழக்கம் இதழுக்கு ரூபாய் ஆயிரம் நன்கொடை வழங்கியுள்ளார்.

● தஞ்சை தோழர் பா.மனோகரன் (மகேஷ் மியுசிக்கல்ஸ், தஞ்சை) கழக ஏட்டுக்கு, கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்களிடம் ரூ.500 நன்கொடை வழங்கியுள்ளார்.

● கொளத்தூர் ஒன்றியம் பெரிய தண்டாவில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, கழகத் தோழர் துரசினி - அமுதா ஆகியோரது குழந்தைக்கு கபிலன் என்று பெயர் சூட்டினார். கழக வளர்ச்சி நிதியாக ரூ.200 வழங்கினர்.

நன்கொடை வழங்கிய தோழர்கள் அனைவருக்கும் நன்றி, நன்றி! ( ஆர்)

## கழகத் தோழர்கள் புதிய செல்போன் எண்கள்

| | |
|---|---|
| கொளத்தூர் தா.செ. மணி | 94433 59666 |
| | 98423 59666 |
| கோவை கு. இராம கிருட்டிணன் | 98427 44462 |
| | 98430 11159 |
| (மேலே குறிப்பிட்ட எண் செயலாக்கம் பெறும்வரை - இந்த எண் தொடரும்) | |
| விடுதலை இராசேந்திரன் | 94441 15133 |
| தாமரைக் கண்ணன் | 98428 82268 |
| கொளத்தூர் அ. குமார் | 98428 68897 |
| பொள்ளாச்சி பிரகாஷ் | 98429 59661 |
| மதுரை மாயாண்டி | 98429 59662 |
| சின்ன உடைப்பு பெரியசாமி | 98429 59663 |
| மேட்டூர் மார்டீன் | 98429 59665 |
| கோபி இளங்கோ | 98429 58892 |
| செம்பட்டி இராசா | 98429 12268 |
| ஒட்டன்சத்திரம் சக்திவேல் | 98427 10268 |
| புதுவை லோகு. அய்யப்பன் | 98428 93237 |
| காரைக்கால் சரவணன் | 98427 08074 |
| திருப்பூர் அங்ககுமார் | 98427 25598 |

## ரஜினிக்கு சில கேள்விகள்

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் - கருப்புக் கொடி காட்டுவது - நாகரிக மரபு அல்ல. தேர்தல் பிரச்சாரக் கூட்டத்துக்கு வந்த டாக்டர் ராமதாசுக்கு - மதுரையில் ரஜினி ரசிகர்கள் - மிக அருகிலே நின்று கருப்புக் கொடி காட்டியது ஏன்? அதற்கு ரஜினி அனுமதி அளித்தாரா?

பாபா படத்தை பா.ம.க. எதிர்த்தது, ஓராண்டுக்கு முன்பு. ஓராண்டுக்கு முன் நடந்த பிரச்சினைக்கு இப்போது கருப்புக் கொடி காட்டுவது என்றால், வீண் வம்பை விலைக்கு வாங்கும் அடாவடித் தானே!

இனி கருப்புக் கொடி காட்ட வேண்டாம் என்று ரசிகர்களுக்கு அறிவுரை கூறும் ரஜினி, அப்போதே ஏன் கூறவில்லை?

ரஜினி திரைப்படம் தான் - 14வது நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய தேசியப் பிரச்சினையா?

மதச்சார்பின்மையாளர்களுக்கும், மத வெறி சக்திகளுக்கும் இடையே நடக்கும் தேர்தலில் ரஜினி, யார் பக்கம் நிற்கிறார்?

மசூதியை இடித்தவர்கள் - பாதிரியாரைக் கொன்றவர்கள் குஜராத்தில் 2000 முஸ்லீம்களைக் கொலை செய்த கூட்டத்தின் பக்கம் நிற்கிறார்!

ரஜினி - பார்ப்பன இந்துத்துவாவின் ஆதரவாளர் என்பதை உறுதிப்படுத்தி விட்டார்.

தமிழர்களே அடையாளம் காண்பீர்!

ரஜினி ரசிகர்களே சிந்திப்பீர்! ●

# இவர்கள் தான் 'இந்து'க்களின் காவலர்களா?

பெரியார் பெருந்தொண்டால் - திராவிடர் இயக்கம் விதைத்த கொள்கை விதைகளால், தமிழகத்தில் 50 ஆண்டுகளாக காலூன்ற முடியாத வடநாட்டுப் பார்ப்பனக் கட்சியான பாரதிய ஜனதா, இப்போது தமிழ்நாட்டில், துரோக சக்திகளின் துணையோடு தன்னை வலிமையாக்கிக் கொள்ளத் திட்டமிடுகிறது. பகுத்தறிவுப் பிரச்சாரத்தாலும், சமூக நீதிப் போராட்டத்தாலும், சமூக நல்லிணக்கம் தழைத்து நின்ற தமிழ் மண்ணில், மதவெறி சக்திகள் நுழையும் ஆபத்துக்கு நாம் இடமளிக்கப் போகிறோமா?

**நினைவில் நிறுத்துங்கள்!**

- நம்மை எல்லாம் இந்துக்கள் என்று கூறி ஏமாற்றி, ஓட்டு வாங்கிப் போய் பார்ப்பனீயத்துக்கு சேவை செய்வதே, இவர்களின் நோக்கம்! 5 ஆண்டுகளில் இவர்கள் ஆட்சியில் என்ன நடந்தது?
- அரசு எந்திரம் முழுதும் பார்ப்பன மயமாக்கப்பட்டது.
- அரசு விழாக்களில் - பார்ப்பனச் சடங்குகள், யாகங்கள்!
- பார்ப்பன சங்கராச்சாரிகள் அரசு தூதுவர்களாக்கப்பட்டு ராஜகுருக்களாக உயர்த்தப்பட்டனர்.
- அரசுத் துறைகள் தனியார் மயமாக்கப்பட்டு, இட ஒதுக்கீடு உரிமைகள் ஒழிக்கப்பட்டன!
- தனியார் துறை முழுதும் பார்ப்பன மயமாக்கியது.
- மத்திய அரசின் 78 அரசுத் துறை செயலாளர்களில் 33 பேர் பார்ப்பனர்கள். மற்றவர்கள் பார்ப்பனரல்லாத உயர் சாதியினர். முக்கிய பதவிகளான பிரதமரின் முதன்மைச் செயலாளர், அமைச்சரவை செயலாளர், பிரதமரின் செயலாளர், உள்துறை செயலாளர், முதலீட்டு விலக்குத் துறை செயலாளர், கல்வித் துறை செயலாளர் அனைவரும் பார்ப்பனர்கள். தேர்தல் ஆணையாளர்கள் 3 பேரும் பார்ப்பனர்கள்.
- அயோத்தியில் - பாபர் மசூதி வளாகத்தில் இவர்கள் நடத்தும் பூசைகள், வழிபாடுகள் எல்லாம் பார்ப்பனர்களின் வேத ஓதுதல்களாகவும், யாகங்களுமாகவே இருக்கின்றன.
- கோயில் கட்டுவதை உறுதி செய்வதற்கு அடையாளமாக கல்தூண் ஒன்றை அரசுப் பிரதிநிதி பெற வேண்டும் என்றார், கோயில் கட்டும் இயக்கத்தில் முன்னின்று இறந்து போன பரமஹம்சர் என்ற பார்ப்பனர். அந்தத் தூணைப் பெறுவதற்கு, பிரதமர் அலுவலகத்திலிருந்து வரும் அதிகாரி ஒரு பார்ப்பனராகவே இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார், வாஜ்பாய் ஆட்சி அதை ஏற்றுக் கொண்டது.
- குஜராத்தில் 2000 முஸ்லீம்களைப் படுகொலை செய்து, பல லட்சம் முஸ்லீம்களை அகதிகளாக்கிய நரேந்திர மோடிகள் தேச பக்தர்களாக உலா வந்து கொண்டிருக்கிறார்கள்.
- தேசிய ஜனநாயக முன்னணி வேலைத் திட்டத்தில் ராமன் கோயில் கட்டும் திட்டம் கிடையாது என்று கூறிவிட்டு, அதற்கு நேர்மாறாக, அரசு கையகப் படுத்தியுள்ள பகுதியில் கோயில் கட்ட அனுமதி கோரி, உச்சநீதிமன்றத்தில் மனு போட்டது வாஜ்பாய் ஆட்சி.
- இந்த மண்ணின் மைந்தர்களான இஸ்லாமியர்களையும், கிறிஸ்தவர்களையும், தேசத் துரோகிகள் என்ற முத்திரை குத்தி அன்னியப்படுத்தத் திட்டமிட்டு, அதில் வெற்றி பெற்று வருகிறார்கள்; ஒரே மண்ணில் சகோதரத்துவத்தோடு பழகிய வர்களையே - ஒருவரை ஒருவர் சந்தேகிக்க வைத்து விட்டார்கள்.
- ஈராக்கிலே ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்திக் கொண்டு வரும் அமெரிக்காவிடமும், பாலஸ்தீனர்களைக் கொன்று குவித்து வரும் யூத இன வெறிபிடித்த இஸ்ரேலுடனும் கொஞ்சிக் குலாவுகிறார்கள். பார்ப்பனியத்தை நிலை நிறுத்த இந்த சர்வதேச உறவுகள் வலிமை சேர்க்கின்றன.
- **ஒரு கேள்வியைக் கேட்போம்.**

இந்தியாவை இந்துக்கள் தேசம் என்று பேசுகிற இவர்கள், இந்த தேசத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடும் "இந்துக்களை" முன்னேற்ற திட்டம் போட்டார்களா? இவர்களின் மொழியிலேயே கேட்கிறோம்; 'இந்து' விவசாயிகளையும், 'இந்து' நெசவாளர்களையும், 'இந்து' மீனவர்களையும், 'இந்து' தலித் மக்களையும், நசுக்கி, அவர்கள் பிழைப்பில் மண்ணைப் போட்டு, பார்ப்பன-பனியா பன்னாட்டு நிறுவனங்களின் பகல் கொள்ளைக்காகவே ஆட்சி நடத்துகிற, இவர்களா "இந்து"க்களின் காவலர்கள்?

இப்போது புரிகிறதா? இவர்கள் "இந்து" மக்களின் உரிமைகளுக்காக கவலைப்படவில்லை. ஆனால், இந்த மக்களை அடிமைத்தளையில் ஆழ்த்தி வைக்கும் "இந்து" தர்மத்தைக் காப்பாற்றவே கவலைப்படுகிறார்கள். அதன் வழியாக பார்ப்பனர்களைக் கொழுக்க வைக்கிறார்கள்!

சமூக, அரசியல், பொருளாதார தளங்களில் இந்த மக்களை ஒடுக்கிக் கொண்டு, கலாச்சாரங்களில் மட்டும் இந்துக்களாக இருக்க வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்துவதின் சூட்சமத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

"வர்ணாஸ்ரமம் மிகச் சிறந்த சமூக அமைப்பு"

"சாதி அமைப்பு மிகச் சிறந்த ஏற்பாடு"

"பிராமணர்களே சமூகத்துக்குத் தலைமை ஏற்பவர்கள்"

"சமஸ்கிருதமே நமது தேசிய மொழி" - இவை எல்லாம் ஆர்.எஸ்.எஸ்சின் அச்சிடப்பட்ட கொள்கைப் பிரகடனங்கள்!

வாஜ்பாயும், அத்வானியும் - இதை இதுவரை எதிர்த்தது உண்டா? அதிகார மிக்க எந்த பா.ஜ.க. தலைவராவது எதிர்த்திருக்கிறார்களா? இல்லை; இல்லவே இல்லை. இந்தக் கொள்கைகள் தான் அவர்களின் மறைமுக செயல் திட்டம்; அதை நோக்கியே ஆட்சியை நடத்தியவர்களை மீண்டும் 5 ஆண்டுகாலம் பதவியில் அமர்த்தலாமா? ●

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 16th April 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஏப்ரல் 22, 2004 | புரட்சி 3 | முழக்கம் 15 | விலை : ரூ.2.50

# தமிழர் வழிபாட்டு உரிமையில்-பார்ப்பன சங்கராச்சாரியே தலையிடாதே!

## பழனியில் கழகத்தின் எழுச்சி ஆர்ப்பாட்டம்

பழனி முருகன் கோயிலில், பார்ப்பன சங்கராச்சாரியின் அத்துமீறலைக் கண்டித்து, கழக சார்பில் கண்ட ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

பழனி முருகன் கோயில் தமிழர்களின் கோயிலாகும். பார்ப்பனரல்லாத பண்டாரகர்கள்தான் இந்தக் கோயிலில் அர்ச்சகர்களாக இருந்து வந்தனர். தமிழிலேயே வழிபாடுகள் நடந்தன. திருமலை நாயக்கர் மன்னன் காலத்தில் அவனது தளபதியாக இருந்த ராமப்பய்யன் என்ற பார்ப்பனர், பண்டாகரர்களை ஒழித்து விட்டு, பார்ப்பனர்களை அர்ச்சகர்கள் ஆக்கினான். பழனி முருகன் சிலை போகர் என்ற சித்தரால் மூலிகையில் செய்யப்பட்டது ஆகும். இது பார்ப்பனர்களின் வைதீக வழிபாட்டுக்கு மாறானது. பார்ப்பனர்களால், சமஸ்கிருத மந்திரம் ஓதி, 'பிரதிஷ்டை' செய்யப்படும் சிலைகள் அய்ம்பொன்னால் செய்யப்பட்டவையாகும். எனவே பழனியில் மூலிகையால் ஆன முருகன் சிலைக்கு பக்கத்திலேயே, காஞ்சி சங்கராச்சாரி உத்தரவுப்படி அய்ம்பொன்னால் ஆன சிலையை வைக்க ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். பார்ப்பனியத்தைத் திணிக்கும் சங்கராச்சாரியின் இந்த அத்துமீறிய தலையீட்டைக் கண்டித்து 18.4.2004 அன்று, தந்தை பெரியார் திராவிடர் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

காலை 11 மணி அளவில் பழனி மார்க்கெட் ரவுண்டான பகுதியில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் முன்னிலை வகித்தார். கோவை, பொள்ளாச்சி, உடுமலைப் பகுதிகளிலிருந்து தனி வாகனங்களில் கழகத் தோழர்கள் திரண்டு வந்திருந்தனர். 120 தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். சங்கராச்சாரியின் தலையீட்டை எதிர்த்து முழக்கங்களை எழுப்பினர். ஆர்ப் பாட்டத்தில் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் இராமகிருட்டிணன், திண்டுக்கல் மாவட்டக் கழகத் தோழர்கள் துரை சம்பத், ரவன்னா, சக்திவேல், சிவா, கொங்கு வேளாளர் பேரவையைச் சார்ந்த முருகன் சிலை பாதுகாப்புக் குழுவைச் சார்ந்த ரவிக்குமார், வீரக்கனல் பாலசுப்பிரமணியம், தமிழர் தேசிய இயக்கத்தைச் சார்ந்த விடுதலைப்புலி பாண்டியன் ஆகியோர் உரையாற்றினர். களப்பணி ஒருங்கிணைப்பாளர்கள் தாமரைக்கண்ணன், பொள்ளாச்சி பிரகாஷ், ஆட்சிக்குழு உறுப்பினர் பொள்ளாச்சி மனோகரன், ஆசிரியர் மதிவாணன் உட்பட - கழகத்தோழர்கள் 120 பேர் பங்கேற்றனர். கழகத்தின் ஆர்ப்பாட்டத்துக்கு, பழனி பொதுமக்கள் வியாபாரிகள் தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர்.

# இலவச சேலை : பா.ஜ.க. கட்டணம் வசூலித்தது

## நெஞ்சைப் பிழியும் தகவல்கள்!

வாஜ்பாய் போட்டியிடும் லக்னோ தொகுதியில் லால்ஜி தாண்டனின் 70வது பிறந்தநாளையொட்டி, இலவச வேட்டி சேலை வழங்கும் நிகழ்ச்சியில் 25 அப்பாவி பெண்கள், கூட்ட நெரிசலில் சிக்கி மரண மடைந்தனர். லால்ஜி தாண்டன், வாஜ்பா யின் அதிகாரபூர்வமான பிரதிநிதி. லக்னோ தொகுதியை வாஜ்பாயின் பிரதிநிதியாக இருந்து கவனித்து வருகிறவர். இந்த இலவச வேட்டி சேலை வழங்கும் நிகழ்ச் சியைப் பற்றி மேலும் பல தகவல்கள் வெளி வந்துள்ளன. இறந்து போன உறவினர்களை நேரில் பேட்டி கண்டு 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு செய்திகளை வெளியிட்டுள்ளது. "இலவச சேலையும், நல்ல சாப்பாடும் உண்டு. ரூ.20 கட்டணம் செலுத்த வேண்டும்" என்று பா.ஜ.க.வினர், ஏழை மக்களிடம், பணம் வசூலித்துள்ளனர். - 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டின் தகவல்கள்:

நெரிசலில் சிக்கி பலியான பெண் களில் 10 பேர் காத்ரா என்னும் கிராமத்தை சேர்ந்தவர்கள். பெட்டிக்கடை மற்றும் நடைபாதையில் சிறுசிறு வியாபாரம் செய்து வரும் இப்பகுதி மக்கள் வறுமை யின் கோரப்பிடியில் சிக்கியுள்ளவர்கள்.

கடந்த வாரம் இவர்களிடம் சென்ற பா.ஜ.க. மகளிரணி தலைவர்களான கும்கும் ரஜ்புத் மற்றும் மெஹருநிஷா ஆகியோர் லக்னோவில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்ளும் பெண் களுக்கு ரூ.500 மதிப்புள்ள சேலை மற்றும் உயர்தர உணவு வழங்கப்படும். அதற்கு நுழைவுக் கட்டணமாக ரூ.20 கொடுக்க வேண்டும் என்று வசூலித்துள்ளனர்.

"500 ரூபாய் மதிப்பிலான புடவை மற்றும் நினைத்துக்கூட பார்க்க முடியாத நல்ல சாப்பாடு ஆகியவை ரூ.20 கொடுத்தால் கிடைக்கும் என்று நினைத்து, சிறுக சிறுக சேமித்து வைத்திருந்த தொகையில் ரூ.80 கட்டி, எனது குடும்பத் தில் 4 பேர் சென்றோம்" என்கிறார் நெரிசலில் தனது மருமகளை பறிகொடுத்த கணேஷ்தேவி என்ற 80 வயது மூதாட்டி.

மேலும் அவர் கூறுகையில், புத்தியை தொலைத்துவிட்டதால், அந்நிகழ்ச்சிக்கு செல்ல முடிவு செய்தோம் என்றார்.

படிப்பறிவில்லாத அப்பகுதியில் மட்டும் சுமார் 2 ஆயிரம் பேரிடம் நுழைவுக் கட்டமணமாக தலா ரூ.20 வீதம் 40 ஆயிரம் ரூபாயை கும்கும் ரஜ்புத் உள்ளிட்டோர் வசூலித்துள்ளனர்.

"இதில் வேடிக்கை என்னவென்றால், காத்ராவிலிருந்து விழா நடந்த சந்திரசேகர் ஆசாத் மைதானத்திற்கு செல்ல பஸ் கட்டணம் ரூபாய் 7 மட்டுமே. ஆனால் அதற்கு 20 ரூபாய் வசூலிக்கிறார்கள் என்பது கூட எங்களுக்கு தெரியாது. சேலை மற்றும் உணவு கிடைக்கிறது என்பதற்காக கொடுத்தோம்" என்கிறார். தனது மாமியார் ஜனக் துரள என்பவரை பறிகொடுத்த மது நிஷார் என்ற பெண்மணி. "நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமானால் கண்டிப் பாக ரூபாய் 20 கொடுக்க வேண்டும் என்று பா.ஜ.க.வினர் கட்டாயப்படுத்தி வாங்கினர். விபரீதம் தெரியாமல் கொடுத்துவிட்டு இப்போது அவதிப்படுகிறேன்" என்கிறார் உறவினரை பறிகொடுத்த ரமாவதி என்ற 45 வயது பெண்மணி. "வழக்கமாக பெரிய பெரிய அரசியல் தலைவர்களின் கூட்டம் என்றால், பணம் கொடுத்து எங்கள் பகுதி மக்களை அழைத்து செல்வார்கள். ஆனால் முதல் முறையாக பணம் வாங்கிவிட்டு எங்களை அழைத்துப் போனார்கள்" என்கிறார் மற்றொரு பெண்மணி.

25 பெண்கள் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து அவர்களின் சடலங்கள் லக்னோவில் உள்ள கிங் ஜார்ஜ் மருத்துவப் பல்கலைக் கழக மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது.

அப்போது அங்கு வந்த உள்ளூர் பா.ஜ.க. தலைவர்கள் சதாசிவ மிஸ்ரா மற்றும் அனுராஜ் மிஸ்ரா ஆகியோர், பலி யானவர்களின் உறவினர்களிடம் இச் சம்பவம் குறித்து பத்திரிகையாளர்களுக்கு பேட்டி எதுவும் கொடுக்கக் கூடாது. மீறி கொடுத்தால், உங்கள் உறவினர்களுக்கு ஏற்பட்ட கதி தான் உங்களுக்கும் என்று மிரட்டியுள்ளார்.

உறவினரை பார்க்க வந்த கீதா நிஷாத் என்ற ஊர்க்காவல் படை கான்ஸ்டபிள் கூறுகையில், "ஆம். பா.ஜ.க. தலைவர்கள் மிரட்டல் விடுத்தது உண்மை தான்" என்று ஒப்புக் கொண்டுள்ளார். ●

தலையங்கம்

# தேர்தல் அறிக்கைகளில் ‘இடஒதுக்கீடு’

தேர்தல் அறிக்கைகள் வெளியிடுவது இப்போதெல்லாம், ஒரு சடங்காகிவிட்டது. அவ்வப்போது, மக்களின் ஓட்டுகளை வாங்குவதற்கான முழக்கங்களாக மட்டுமே தேர்தல் அறிக்கைகள் இருக்கின்றன. அதிகாரத்துக்கு வந்த பிறகு, தேர்தல் அறிக்கையில் தரப்பட்ட வாக்குறுதிகள் பற்றிக் கவலைப்படுவதே இல்லை.

1999–ல் பா.ஜ.க.வை உள்ளடக்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில், இடஒதுக்கீட்டுக் கொள்கைகள் எடுப்பாக இடம் பெற்றிருந்தன. ஏற்கனவே இருந்துவரும் இடஒதுக்கீட்டுக்கு சட்டப் பாதுகாப்பு; தேவைப்பட்டால், அதற்காக சட்டத்தில் திருத்தம்; 50 சதவீதத்துக்கு மேல் இடஒதுக்கீடு பின்பற்றப்படும் மாநிலங்களில் அதைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள் – இந்த மூன்று திட்டங்களையும் முன் வைத்தது அந்தத் தேர்தல் அறிக்கை. இதன்படி – தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீட்டைக் காப்பாற்றும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வரவில்லை. இப்போது, தொலை நோக்குத் திட்டமாக பா.ஜ.க. அறிவித்துள்ள அறிக்கையில், பெயரளவுக்கு இரண்டே இரண்டு இடங்களில், இட ஒதுக்கீடு பற்றி மேலோட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகூட பொருளாதார சீர்திருத்தங்கள் என்ற தலைப்பின் கீழ் தான் கூறப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு பற்றி இதில் எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. “சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களைய கண்காணிப்புக் கமிட்டி அமைக்கப்படும். பழங்குடியினர் மற்றும் மைனாரிட்டிகள் முன்னேற்றத்துக்காக தேசிய அளவில் பழங்குடியினருக்கான கொள்கை வகுக்கப்படும்” என்ற அளவோடு, இடஒதுக்கீடு கொள்கைகள் ஓரம் கட்டப்பட்டு விட்டன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. எதிரணியில் நின்ற ஜெயலலிதா, தனது கட்சித் தேர்தல் அறிக்கையில், ‘முஸ்லீம்களுக்கு தனி இடஒதுக்கீடு செய்யப்படும்’ என்று அறிவித்திருந்தார். இப்போது அ.இ.அ.தி.மு.க. அறிக்கையில், இந்த அறிவிப்பு காணாமல் போய்விட்டது. நாட்டின் மிக முக்கியப் பிரச்சினையான தனியார் துறை இடஒதுக்கீடு பற்றி அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் எந்தக் குறிப்பும் இல்லை.

சமூக கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் முஸ்லீம் சமூகத்தினருக்கும், கல்வி, வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு செய்யப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை கூறுகிறது.

தமிழ்நாட்டில் தி.மு.க., பா.ம.க.வின் தேர்தல் அறிக்கைகள், தனியார் துறை இடஒதுக்கீட்டை வலியுறுத்தியுள்ளன. இதிலே மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி அதன் தேர்தல் அறிக்கையில், நீதித்துறை, அமைச்சரவை, தனியார் துறைகளில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தியுள்ளதோடு, பார்ப்பனர்களுக்கும், முன்னேறிய சாதியினருக்கும், அவர்களது மக்கள் தொகை விகிதாச்சாரத்துக்கு ஏற்ப, இடஒதுக்கீடு செய்யப்படும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது. பகுஜன் சமாஜ் கட்சி மீது, பல்வேறு பிரச்சினைகளில் நமக்கு கருத்து மாறுபாடுகள் இருந்தாலும், திட்டவட்டமான இடஒதுக்கீட்டுக் கொள்கைகளை அது முன் வைத்துள்ளது பாராட்டத் தக்கதாகும். சரத்பவார் தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சி இஸ்லாமியர்களுக்கு, ராணுவம் உட்பட – அனைத்துத் துறைகளிலும் உரிய இடஒதுக்கீடு வழங்கப்படும் என்ற கருத்தைத் தனது தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது, சுடடிக் காட்டப்பட வேண்டியதாகும்.

ஆக, தந்தை பெரியார் வலியுறுத்திய சமூகநீதி கோட்பாடான இடஒதுக்கீடு, இன்று கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளாலும் வலியுறுத்தப்படும் கொள்கையாக மாறியிருக்கிறது. பெரும்பாலான அரசியல் கட்சிகள் இடஒதுக்கீட்டை ஆதரிப்பவையாக இருந்தாலும், அதிகாரத்துக்கு வந்த பிறகு, பார்ப்பன அதிகார சக்திகளும், பாாப்பன ஊடகங்களும், இந்த சமூகநீதிக் கோட்பாடுகளை அமுலாக்க விடாமல், தடுத்து விடுகின்ற சக்தி படைத்தவைகளாக இருக்கின்றன. வெகு மக்கள் விழிப்புணர்ச்சி பெறாத காரணத்தால், ஆளும் கட்சிகள், பார்ப்பன சக்திகளுக்கு பணிந்து போய், தங்களது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கே முன்னுரிமை தருகின்றன. இதுதான் நாட்டில் நிலவும் நிலை. எனவே, தேர்தல் அறிக்கைகள் செயல்படும் அறிக்கைகளாக மாறவேண்டுமானால், ஒடுக்கப்பட்ட மக்களின் வலிமையான போராட்ட இயக்கம் உருவாக்கப்படவேண்டும். அது பார்ப்பன பனியாக்களின் எதிர்ப்பை மய்யமாகக் கொண்டு, வலிமையாகக் களத்தில் இறங்க வேண்டும். இந்த நிலை உருவாகும் வரை தேர்தல் அறிக்கைகளில் கூறப்படும் சமூகநீதிகள் அறிவிப்புகளோடு நின்று போகும் நிலை தான் நீடிக்கும்.

# ஆர்.எஸ்.எஸ். - இத்தாலி தொடர்பு; திடுக்கிடும் தகவல்கள்

இந்தியக் குடிமகனாகப் பதிவு செய்து கொண்டு - தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று - நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக செயல்பட்டு வரும் சோனியாவை - ஜெயலலிதாவும், பா.ஜ.கவும் ‘அன்னியர் - இத்தாலியர்’ என்று பேசி வருகின்றனர். உண்மையில், இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியான முசோலினியோடு நெருக்கமாகத் தொடர்புள்ளது ஆர்.எஸ்.எஸ். தான். முசோலினியின் சர்வாதிகார தத்துவமான ‘பாசிசம்’ என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு, அந்த வழியில் தான் அவர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பையே உருவாக்கினார்கள். மார்ஜியா கசோலரி என்ற இத்தாலி ஆய்வாளர் இது பற்றி விரிவாக, ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’ பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இத்தாலி நாட்டில் உள்ள ஆவணக் காப்பகங்களில் உள்ள பதிவேடுகளை ஆதாரமாகக் கொண்டு எழுதிய கட்டுரை இது. இக்கட்டுரைக்கு இதுவரை - சங்வரிவார்களிடமிருந்து எந்த மறுப்பும் இல்லை. அக்கட்டுரையின் சுருக்கத்தை ‘ஒற்றுமை’ இதழ் வெளியிட்டுள்ளது. அதிலிருந்து ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.

முலோலினி இத்தாலியில் நடத்திய ஆட்சியின் ஆரம்ப காலத்திலிருந்தே அதைப் பற்றிய செய்திகள் சங்பரிவார் ஆதரவு பெற்ற மராட்டிய இதழ்களில் விரிவாக வெளிவரத் தொடங்கியது.

**1924** முதல் **1935** வரை ஆர்.எஸ்.எஸ். ஆதரவு மராட்டிய ஏடான ‘கேசரி’ இத்தாலியைப் பற்றியும், பாசிசத்தைப் பற்றியும், முசோலினி பற்றியும் செய்திகளையும், கட்டுரைகளையும், தலையங்கங்களையும் எழுதி வந்தது. ‘கேசரி’ இதழ் வெளியிட்ட தலையங்கங்கள், இத்தாலியில் நிலவி வந்த ஒரு தாராளமயமான அரசாங்கம் - சர்வாதிகார ஆட்சியாக மாற்றப்பட்டதைப் புகழ்ந்து தள்ளியது.

ஆர்.எஸ்.எஸ். ஆதரவு பெற்ற மராட்டிய நாளிதழான ‘கேசரி, இத்தாலியின் முசோலினி மேற்கொண்ட “அரசியல் சீர்திருத்தங்கள்” பற்றிய விரிவான செய்திகளை வெளியிட்டு வந்தது. நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தேர்தல் மூலம் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக உறுப்பினர்களை நியமனம் செய்வது, நாடாளுமன்றத்திற்கு பதிலாக பாசிச பொதுக் குழுவிற்கு அதிகாரத்தை அளிப்பது போன்ற முசோலினியின் நடவடிக்கைகளைப் பற்றியும் அது பாராட்டி எழுதியது.

முசோலினியின் சிந்தனைகள் ஜனநாயகத்திற்கு எதிரானது என்பது பற்றியோ அவரது நடவடிக்கைகள் அனைத்தும் சர்வாதிகாரத்தின் வெளிப்பாடாக இருந்தது பற்றியோ ‘கேசரி’ கண்டுகொள்ளவில்லை.

ஆகஸ்டு **13, 1929** கேசரியின் “இத்தாலியும் இளம் தலைமுறையும்” என்ற தலைப்பில் நீண்ட கட்டுரை ஒன்று வெளியானது. இந்தக் கட்டுரையில் இத்தாலிய சமூகம் எவ்வாறு பாசிசத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது என்பது பற்றி விவரிக்கப்பட்டது. இத்தாலியின் இளைய தலைமுறையினர் தங்கள் நாட்டை அவர்களது மூத்த தலைமுறையினரைவிட எவ்வாறு வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றுள்ளார்கள் என்பது பற்றியும் கூறப்பட்டது.

இந்த இத்தாலிய இளைஞர்களிடம் வலுவான மத உணர்வுகள், பாரம்பரிய பண்புகளை மதித்தல் முதலிய குணநலன்கள் இருந்தனவாம். பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்காததும் முன்னேற்றத்திற்கு உதவியதாக அந்தக் கட்டுரை குறிப்பிட்டிருந்தது. இத்தாலியில் செயல்பட்டு வந்த பலில்லா மற்றும் அவாங்கார்டிஸ்டி ஆகிய பாசிச இளைஞர் அமைப்புகள் குறித்தும் சிறப்பாக அந்த கட்டுரையில் கோடிட்டுக் காட்டப்பட்டது.

**1920**களின் பிற்பகுதியில் இத்தாலியின் பாசிச ஆட்சியும் முசோலினியும் மராட்டியத்தில் பெரும் அளவிற்கு பிரபலப்படுத்தப்பட்டிருந்தது. ஆர்.எஸ்.எஸ். காரர்களுக்கு பாசிசம் சமுதாயத்தை ராணுவமயமாக்கியது கவர்ச்சிகரமாகத் தோன்றியது. இதே போல் ஜனநாயகத்துக்கு விரோதமான அமைப்பு இத்தாலியில் நிறுவப்பட்டதையும் அவர்கள் போற்றினார்கள். ஆங்கிலேயர்களின் ஜனநாயகத்திற்கு ஒரு மாற்றாக சர்வாதிகாரத்தை அவர்கள் பரப்பினார்கள்.

ஆர்.எஸ்.எஸ்.காரர்களில், இத்தாலிய பாசிச அரசு மற்றும் முசோலினியிடன் முதன்முதலாக தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவர் வி.எஸ். மூஞ்சே ஆவார். இவர், ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் ஹெக்டே வரின் ஞான குருவாவார். இதனை ஆர்.எஸ்.எஸ். தலைவர்களே ஒப்புக் கொண்டுள்ளார்கள். (ஆதாரம்: RSS A VISION IN ACTION, H.V. SHESHADRI)

மூஞ்சேக்கும் ஹெக்டேவருக்கும் இடையே நெருங்கிய நட்பும் தொடர்பும் இருந்தது. ஆர்.எஸ்.எஸ்ஸை பலப்படுத்தி அதனை நாடு முழுவதும் இயங்கும் அமைப்பாக உருவாக்குவது தான் தனது எண்ணம் என்று மூஞ்சே வெளிப்படையாகவே அறிவித்திருந்தார்.

**1931**-ல் ஐரோப்பா பயணம் ஒன்றை மூஞ்சே மேற்கொண்டார். அப்போது அவர், இத்தாலிக்கு சென்றிருந்தார். இத்தாலியில் சில முக்கிய ராணுவப் பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களை மூஞ்சே சென்று பார்த்தார். இவரது இத்தாலி விஜயத்தின் மிக முக்கிய நிகழ்வாக அமைந்தது பாசிச சர்வாதிகாரி முசோலினியுடனான சந்திப்பாகும். இதுகுறித்து அவர் தனது நாட்குறிப்பில் பதிமூன்று பக்கங்கள் எழுதியுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். முன்னோடித் தலைவரான மூஞ்சே, இத்தாலியின் தலைநகரான ரோமில் **1931** ஆம் ஆண்டு மார்ச் **15** முதல் **24** வரை தங்கியிருந்தார். ரோமில் அவர் ராணுவக் கல்லூரி, உடற்கூறு கல்விக்கான பாசிச அகாடமி மட்டுமல்லாது மிக முக்கியமாக பலில்லா அவாங்கார்டிஸ்டி ஆகிய அமைப்புகளுக்கும் சென்றிருந்தார். இந்த இரு அமைப்புகளுக்கும் சென்றதை தனது நாட்குறிப்பில் இரு பக்கங்களில் விவரிக்கிறார் மூஞ்சே. இத்தாலிய இளைஞர்களை மூளை சலவைச் செய்வதில் இந்த இரண்டு அமைப்புகளும் பெரும் பங்காற்றின. இந்த இத்தாலிய பாசிச அமைப்புகளின் கட்டமைப்பும் வாஜ்பேயி உறுப்பினராக இருக்கும் ஆர்.எஸ்.எஸ்ஸ ூம் ஒரே மாதிரியாக இருப்பது கவனிக்கத்தக்கதாகும். இந்த இரு அமைப்புகளும் ஆறு வயது முதல் 18 வயது வரையுள்ள பையன்களை முதலில் சேர்த்துக் கொள்ளும். பிறகு அவர்கள் வாராந்திர வகுப்புகளுக்கு வரவேண்டும். அங்கு அவர்களுக்கு உடற்பயிற்சிகள், இராணுவ ரீதியான பயிற்சிகள் மற்றும் அணி வகுப்பு பயிற்சிகள் அளிக்கப்படும்.

ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஹிந்துத்துவ அமைப்புகளின் வெளியீடுகளில் ஹெக்டே வாரின் சிந்தனை மற்றும் செயல்பாடுகளின் வெளிப்பாடாகவே ஆர்.எஸ்.எஸ்ஸின் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால் ஆர்.எஸ்.எஸ்ஸை இத்தாலிய பாசிச வழியில் வடிவமைப்பதில் மூஞ்சே பெரும் பங்கு வகித்தார். பாசிச அமைப்புகள் மூஞ்சேயின் சிந்தனை எவ்வாறு கவர்ந்தன என்பதை அவரது நாட்குறிப்பிலிருந்து அறிய முடிகின்றது. ✦

## உமாபாரதி ஆட்சியில் சங்பரிவார் வன்முறைகள்


ம.பி.யில் நடக்கும் உமாபாரதி ஆட்சியில் சங்பரிவார் கும்பல் சட்டம் ஒழுங்கைக் கைகளில் எடுத்துக் கொண்டு ஆட்டம் போடுகிறது. காவல்துறை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறது. மத்திய அரசின் சுற்றுலாத் துறையின் கீழ் செயல்படும் நிர்வாகப் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியையாக இருக்கும் ஒரு பெண்ணின் வீட்டிற்குள் சங்பரிவார் குண்டர்கள் - கடந்த மார்ச் 14-ம் தேதி நுழைந்து, அந்தப் பெண்ணின் முகத்தில் தாரைப் பூசியுள்ளனர். பெற்றோர்களை அடித்து உதைத்து, வீட்டில் இருந்த பொருள்களையும் சேதப்படுத்தியுள்ளனர். கல்லூரியில் நடந்த நாடகம் ஒன்றில் மாணவிகள் நடத்திய நாடகத்தில் ராமனும் - சீதையும் ஜீன்ஸ் உடையில் வந்து, திரைப்படப் பாடல்களைப் பாடினார்களாம். இது ராமபக்தர்களைப் புண்படுத்தி விட்டதாகக் கூறி இந்தக் காலித்தனத்தில் இறங்கியுள்ளனர். மார்ச் 9-ம் தேதி - அந்நிறுவனத்தின் இயக்குனராக உள்ள மூத்த அய்.ஏ.எஸ். அதிகாரி தேவேந்திர சிங்கால் வீட்டுக்குள் புகுந்து, அவரது முகத்திலும் தார் பூசியுள்ளனர். மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் இது பற்றி தனக்கு ஏதும் தெரியாது என்று கூறிவிட்டார்.

இதே போல் சுஜித்கார்வாலா என்ற முஸ்லீம் இளைஞரும், ஒரு சிந்திப் பெண்ணும் காதலித்தனர். பஜ்ரங்தள் குண்டர்கள், அந்த முஸ்லீம் இளைஞரின் கார் விற்பனை நிலையத்தை உடைத்து நாசமாக்கினர். அந்த இந்திப் பெண்ணையும் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர். மத்திய பிரதேச மாநிலம் - சங்பரிவார் கும்பலின் கலவரப் பிரதேசமாகி வருகிறது. பா.ஜ.கவிடம் ஆட்சிக்கு வந்தால் நாடு முழுதும் இது தான் நடக்கும்.










# "வாஜ்பாயின் தூக்கமில்லாத இரவு"களுக்கு யார் காரணம்?

**1998** ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், ஜெயலலிதா - பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைத்தார். அப்போது தமிழ்நாட்டில் ஜெயலலிதா பதவியில் இல்லை. தி.மு.க. ஆட்சி நடந்து கொண்டிருந்தது. தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சிக்கு இதன் மூலம் முதன்முதலாக அடித்தளம் அமைத்துக் கொடுத்தவரே ஜெயலலிதா தான்! நிலையான ஆட்சி அமைய வாஜ்பாயை பிரதமராக்க வேண்டும் என்பதே ஜெயலலிதாவின் பிரச்சாரமாக இருந்தது. வாஜ்பாய் அமைத்தக் கூட்டணி அமைச்சரவை 1998 மார்ச் 19-ம் தேதி பதவி ஏற்றது. அதில் அ.இ.அ.தி.மு.க.வும் இடம் பெற்றது. அமைச்சரவை அமைந்த ஒரு மாதத்துக்குள்ளே ஜெயலலிதா தமிழ்நாட்டில் நடந்த தி.மு.க. ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று வாஜ்பாயை நெருக்கத் துவங்கினார். இதை வாஜ்பாயே - பிறகு 'குமுதம்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஒரு மாபெரும் விலையுடன் தான் அ.தி.மு.க. ஆதரவு எங்களுக்கு கிடைத்தது என்று விரைவில் நாங்கள் உணர்ந்தோம். கருணாநிதியின் அரசைக் கலைக்க வேண்டும். பல ஊழல் வழக்குகளிலிருந்து ஜெயலலிதாவை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என்ற இரண்டும் அவரது நிபந்தனையாக இருந்தது. **ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்த காலத்தில் நான் தூக்கம் இல்லாது தவித்தேன்**" - (குமுதம் பேட்டி *23.9.1999*)

● வாஜ்பாய் அமைச்சரவையில் சட்டத் துறை அமைச்சரானார் தம்பிதுரை. மத்திய அரசு நிறுவனங்களில் சட்ட ஆலோசகர்களை, ஜெயலலிதா தந்த பரிந்துரைப் பட்டியலை ஏற்று நியமித்தார். அந்த நியமன உத்தரவுகளையே ஜெயலலிதாவின் போயஸ் கார்டனில் வைத்துதான் தம்பித்துரை வழங்கினார். (அப்போது ஜெயலலிதா முதலமைச்சராக இல்லை)

● வருவாய் நிதித்துறைகளை அமைச்சரான - ஆர்.கே. குமார் என்ற ஜெயலலிதாவின் ஆடிட்டராக இருந்த பார்ப்பனர் நியமிக்கப்பட்டார். ஜெயலலிதாவின் ஊழல் வழக்குகளிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தோடு, வருமானத்துறை அதிகாரிகளை மாற்றி அமைத்தார். நிதி அமைச்சரின் கீழ் இருந்த வருமான வரித்துறையை இணை அமைச்சரான தனது கட்டுப்பாட்டின் கீழ் வரவேண்டும் என்று போராடி பெற்றார்; ஜெயலலிதா ஊழல் வழக்குகள் -வருமான வரித்துறை தொடர்பாக இருந்ததால் - இந்த ஏற்பாடு; இதற்கு வாஜ்பாய் சம்மதித் தார்.

● தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சரானார் சேடப்பட்டி முத்தையா. தமிழக சட்டசபையில் பேரவைத் தலைவராக இருந்த போது வருவாய்க்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் இவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா ஆணைப்படி பதவி ஏற்ற சில வாரங்களிலேயே அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

● சேடப்பட்டி முத்தையா பதவி விலகலைத் தொடர்ந்து, வாஜ்பாய் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள கிரிமினல் வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள அமைச்சர்கள் அனைவரும் பதவி விலக வேண்டும் என்று ஜெயலலிதா போர்க்கொடி உயர்த்தினார். சேடப்பட்டி முத்தையா பதவி விலகாமல் இருந்திருந்தால் ஜெயலலிதா இக்கோரிக் கையை வற்புறுத்தியிருக்க மாட்டார். வாஜ்பாய்க்கு இது குறித்து ஜெயலலிதா கடிதம் எழுதினார். அதில் பல்வேறு வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள ராம் ஜெத்மலானி, பூட்டாசிங், ஹெக்டே மூவரையும் அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தார். ஆனால் பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்த அத்வானி பதவி விலகலை ஜெயலலிதா கோரவில்லை. மசூதி இடிப்பை கிரிமினல் குற்றமாக ஜெயலலிதா கருதவில்லை.

● ராம கிருஷ்ண ஹெக்டே - ஜெயலலிதாவைக் கடுமையாக விமர்சித்தார். இதற்கு அ.இ.அ.தி.மு.க. மத்திய அமைச்சர்கள் பதிலடி தந்தனர். மத்திய அமைச்சர் ஜஸ்வந்த்சிங் சென்னை போயஸ்கார்டனுக்கு வந்து ஜெயலலிதாவை சந்தித்து சமாதானப் படுத்தினார்.

● வாஜ்பாய் கூட்டணி அமைச்சரவை அமைப்பதற்கு தனது கட்சியின் சார்பில், அமைச்சரவை அமைக்க ஒப்புதல் கடிதம் தருவதற்கு - ஜெயலலிதா ஒரு மாதத்துக்கு மேல் தாமதப்படுத்தினார். அந்தக் கடிதத்தை வாங்குவதற்காகவும் ஜஸ்வந்த் ஜெயலலிதா இல்லத்துக்கு வந்தார்.

● தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பற்றி ஆராய மத்தியக் குழு ஒன்று சென்னை வந்தது. தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு நன்றாகவே இருக்கிறது என்று அந்தக் குழு உண்மையைத் தெரிவித்தது. தி.மு.க. ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி வந்த ஜெயலலிதாவுக்கு குழுவின் அறிக்கை எரிச்சலை ஏற்படுத்தியது. ஜெயலலிதா நிர்ப்பந்தத்தின் பேரில், குழுவில் இடம் பெற்றிருந்த மத்திய அரசின் விசேட செயலாளர் அசோக்குமார் அந்தப் பொறுப்பிலிருந்து உடனடியாக விடுவிக்கப்பட்டார்.

● ஜெயலலிதாவின் ஊழல் வழக்கு களை விசாரிக்க தனி நீதிமன்றங்கள் அமைக்கப் பட்டதை ஜெயலலிதா எதிர்த்து வந்தார். வாஜ்பாய் அரசு, தனி நீதி மன்றங்கள் இல்லாமல், வழக்கமான நீதி மன்றங்கள் மூலமே விசாரணை நடத்துவதற்கு அரசாணைகள் மூலம் ஏற்பாடு செய்தது.

● இதனைத் தொடர்ந்து, சுப்பிரமணிய சாமி வகுத்துக் கொடுத்த திட்டத்தின் கீழ் ஜெயலலிதா டெல்லியில் முகாமடித்து - சோனியாவை சந்தித்து, வாஜ்பாய் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, சோனியா தலைமையில் ஆட்சி அமைக்க முயன்றார். வாஜ்பாய் ஆட்சிக்கு தனது கட்சியின் ஆதரவைத் திரும்பப் பெற்றார். நம்பிக்கை ஓட்டில் - வாஜ்பாய் ஆட்சி ஒரு ஓட்டில் தோற்றது.

ஆட்சி - விரைவில் தேர்தலை சந்திக்க வேண்டியிருந்தது. பல ஆயிரம் கோடி ரூபாயில் மக்கள் வரிப்பணம் பாழடிக்கப் பட்டு, தேர்தல் நடத்தப்பட்டது. ஜெயலலிதா, வாஜ்பாய் அணியை எதிர்த்து நின்றார். உடனே அவர் மதச்சார்பற்ற ஆட்சியின் 'தலைவி' எனறு வர்ணித்தார்கள். அவர் எந்தக் காலத்திலும் மதச்சார்பற்ற கொள்கையை ஏற்றவராக செயல்பட்டதில்லை. வாஜ்பாய் ஆட்சியை கவிழ்த்தது தனது ஊழல் வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும், அதற்காக தி.மு.க. ஆட்சியை டிஸ்மிஸ் செய்யாததற்கும் தான்! நாட்டுக்கு பல்லாயிரம் கோடி செலவில் தனது சொந்த நலனுக்காக தேர்தலை திணித்த ஜெயலலிதா தான், மக்களுக்கு செலவிட வேண்டிய நிதியில் பெரும் பகுதியை அரசு ஊழியருக்கு செலவிடுவதா என்று நீலிக் கண்ணீர் வடித்தார்.

இப்போது அதே வாஜ்பாயும் - ஜெயலலிதாவும் சேர்ந்து தான் வாக்கு கேட்டு வருகிறார்கள். ●

## ஆரியரும் அந்நியரே!

"அவர் அந்நியர்! இவர் வெளியார்! எனவே, அவர்கள் ஆளக்கூடாது!" என்று ஜே... ஜே... ஜே... முதல் அத்வானி - வாஜ்பாய் வரை பலரும் சொல்கின்றனர்.

இந்தியாவை அந்நியர் ஆளக்கூடாது என்று சொல்லும் இவர்கள் யார்?

ஆரியக் கொழுந்துகள்!

இனமென்று பார்த்தால் இந்தத் துணைக் கண்டத்தில் அடிநாளில் இருந்தோர் திராவிடர் தாமே!

கைபர் கணவாய் வழியே புகுந்த கூட்டம், திராவிடரை வடபுலத்தைவிட்டு விரட்டியது! திராவிடர் வாழ்ந்த பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது!

நம் மண்ணைப் பறித்ததுடன் நில்லாமல், நம் மண்ணுக்கு 'ஆரியவர்த்தம்' என்று பெயரும் சூட்டிக் கொண்டனர்! இதனாலேயே இந்த ஆரியர்கள் இந்தியர்களாகி விடுவார்களா?

ஆரியர்கள் தாயகம் - அவர்கள் முதலில் தோன்றி வாழ்ந்த மண் - மத்திய ஆசியாவே! அங்கு வளம் குன்றிய போது, நிலத்தின் இயல்பு மாறியபோது, அந்த ஆரியர்கள் பிழைப்பு தேடி வெளியிடங்கள் நோக்கிச் சென்றனர். அவர்களுள் ஒரு தரப்பினர் ஐரோப்பாவுக்குள் சென்று குடியமர்ந்தனர்! மறுதரப்பினர் கைபர் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் புகுந்து கங்கைக் கரையில் குடியமர்ந்தனர்! - இவ்வாறு கூறுவது நாமில்லை!

ஆரியர்களாலேயே போற்றிப் புகழப்படுபவரும் - ஆரியர்கள் பழைமைப் பற்றி ஆராய்ந்தவரும், நான்கு மறைகளையும் கற்றுணர்ந்தவருமான ஜெர்மானிய அறிஞர் மாக்ஸ் முல்லர் அவர்களாவார்கள்!

"ஆரியம் பற்றியும், வேதம் பற்றியும் அவர் சொன்னால் சொன்னது தான்! அதற்கு மறுபேச்சில்லை!" என்று தமிழகப் பார்ப்பனர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாக்ஸ் முல்லர் தான் அப்படிச் சொன்னார்!

பிழைக்க இடம் தேடி கங்கைக் கரைக்கு வந்த இந்த ஆரியர்களுக்கு - அப்பட்டமான அந்நியர்களுக்கு -

சோனியாவைப் பார்த்து அந்நியர் என்று சொல்ல என்ன தகுதி உள்ளது?

ஐரோப்பாவுக்குப் போன ஆரியர்கள், முதலில் குடியேறிய இடங்கள் கிரேக்கமும், இத்தாலியும் என்று மாக்ஸ் முல்லரே கூறுகிறார்!

பாலகங்காதர திலகர் இந்துமதத்தின் பால் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்; பார்ப்பன சனாதனி. அவரும் ஆரியர்கள் தாயகம் இந்தியா இல்லை; வடதுருவம் தான் என்று எழுதினார்!

*1902*இல் ஒரு நூலை எழுதினார்! *1903*இல் அதை வெளியிட்டார்! அந்நூலின் பெயர் "The Arctic Home of Vedas" என்பதாகும்!

வட இந்தியாவில் மட்டுமின்றி, அய்ரோப்பாவில் இந்திய இயல் ஆராய்ச்சி அரங்கங்களிலும் அந்நூல் பேசப்பட்டது!

ரிக் வேதத்தில் ஓர் அடி, இந்திரன் போர் பற்றி வருகிறது! அப்போர் நடந்த காலத்தில் - இரவுப் பொழுதுகள் நீள்வதும், மறு கட்டத்தில் பகல் பொழுதுகள் நீள்வதுமாகக் காலநிலை இருந்தது என்று அந்நூல் வரி தெரிவிக்கிறது!

இப்படி நீள் இரவுகளும், நீள் பகல்களும் நிலவுவது வட துருவத்தில்தான்; பனிப்பகுதியாகக் கிடக்கும் வட துருவத்தில் தான்; எனவே, ஆரியவர்களின் தாயகம் வடதுருவம்தான் என்பது, திலகர் அந்நூலில் தெரிவித்த முடிவு!

மாக்ஸ் முல்லரை போன்றே திலகரும் ஒன்றை அடித்துச் சொல்லியுள்ளார்! ஆரியர்களின் பூர்வீக மண் - தாயகம் - இந்தியா இல்லை; வடதுருவம் தான் என்பதே திலகர் சொன்ன கருத்து!

அப்படிப் பார்த்தாலும் வாஜ்பாய் - அத்வானி - ஜே... ஜே... ஜே... வகையறாக்களும் இந்தியாவுக்கு அந்நியர்கள் தானே!

இந்த அந்நியர்கள், இப்போது சோனியாவைப் பார்த்து அந்நியர் என்பது என்ன நீதி? அவர் அந்நியர் என்றால்,

திராவிடர்க்கு ஆரியர்கள் அந்நியர்களே! ஆரியப் பண்பாடுகளும் அந்நியமே! ஆக, அந்நியர்களான அத்வானி வகையறாக்கள் தமிழர்கள் தலையில் மிளகாய் அரைக்க இன்னும் எத்தனை நாள் இடம் தருவது?

நன்றி: 'சங்கொலி'

## உடுமலை கழகத்தின் வெளியீடுகள்

உடுமலைப்பேட்டை தந்தை பெரியார் திராவிடர் கழகம் கீழ்க்கண்ட வெளியீடுகளை வெளியிட்டுள்ளது.

1) பார்ப்பன ஆட்சியை ஒழித்திடுவோம் - தந்தை பெரியார் - ரூ.5/-

2) மதங்களை ஒழிப்போம் - தந்தை பெரியார் - ரூ.5/-

**பொள்ளாச்சி பெரியார் படிப்பக வெளியீடுகள்**

1) சாதி ஒழிப்பும் அரசியல் சட்ட எரிப்பும் - திருச்சி செல்வேந்திரன் - ரூ.10

2) யார் அன்னியர். யார் இவர்கள் ? - ஆதாரங்களுடன் - விடுதலை இராசேந்திரன் - ரூ.10

நூல் வேண்டுவோர் தொடர்புக்கு :
பெரியார் படிப்பகம், 25, வசந்த் பிளாசா,
காந்தி மண்டபம் வீதி,
பொள்ளாச்சி-642 001.

## மோடி ~ ஒரு நீரோ: உச்சநீதிமன்றம் கூறுகிறது

குஜராத் பா.ஜ.க. முதல்வர் மோடி - நீரோ மன்னரைப் போல் செயல்பட்டிருக்கிறார் என்று உச்சநீதிமன்றம் - பெஸ்ட் பேக்கரி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. 14 முஸ்லீம்களை பெஸ்ட் பேக்கரி எனும் ரொட்டிக் கடையில், உயிருடன் எரித்துக் கொன்ற வழக்கில் - குஜராத் உயர்நீதிமன்றம் குற்றவாளிகளை விடுதலை செய்தது. உச்சநீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்யப்பட்டது. வழக்கை மீண்டும் புலன் விசாரணை செய்து மகாராஷ்டிரா நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும் என்று கூறிய உச்சநீதிமன்றம் - மோடி நீரோ மன்னனைப் போல் செயல்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது. ரோம் நாட்டில் ஆட்சி செய்த நீரோ மன்னன் - மற்றவர்கள் துயரப்படுவதைப் பார்த்து மகிழக் கூடியவன்; வீடு தீப்பற்றி எரிவதைப் பார்த்து - மகிழ்ந்து பிடில் வாசித்தவன்; உச்சநீதி மன்றத்தின் இந்தப் "பாராட்டுப்" பத்திரத்தை வாங்கிய மோடி - தனது மகுடத்தில் சொருகிக் கொண்டு, பதவி விலக மறுத்து வருகிறார்; இந்த மோடி பதவி ஏற்பு விழாவில் பங்கேற்று வாழ்த்தியவர் தான் ஜெயலலிதா.

## தாண்டன் கைது : தேர்தல் ஆணையம் நடவடிக்கை

வாஜ்பாய் போட்டியிடும் லக்னோ தொகுதியில் - பா.ஜ.க. தலைவர் லால்ஜி தாண்டன் இலவச சேலை வழங்கிய நிகழ்ச்சியில் கூட்ட நெரிசலில் சிக்கி 22 பெண்களும் - 3 குழந்தைகளும் மரணமடைந்தனர். இலவச வேட்டி சேலை வழங்கியது - தேர்தல் விதிமுறைகளுக்கு மாறானது என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இது குறித்து பாரதிய ஜனதா கட்சிக்கு தேர்தல் ஆணையம் ஏழு நாட்களுக்குள் விளக்கம் கேட்டு தாக்கீது பிறப்பித்துள்ளது. சேலை வழங்கும் விழாவுக்கு ஏற்பாடு செய்த தாண்டன் மீது வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக வழக்குப் பதிவு செய்யுமாறு உ.பி. மாநில அரசுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தாண்டன் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பிரச்சாரக் கூட்டங்கள் சென்னை மாவட்டக் கழகம் திட்டம்

சென்னை மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் 8.4.2004 அன்று மாலை 7 மணி அளவில் கழகத் தலைமை அலுவலகத்தில் ஒருங்கிணைப்பாளர் எ.கேசவன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:

1) வர்ணாசிரமத்தை வலியுறுத்தும் பா.ஜ.க., அ.தி.மு.க. கட்சிகளின் முகமூடியைக் கிழிக்கும் பொதுக் கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது என்றும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

2) கழக நூல்கள் விற்பனை- கழக ஏட்டுக்கு சந்தா சேர்ப்புப் பணிகளைத் தீவிரமாக்கவும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் : பத்ரி நாராயணன், அன்பு தனசேகர், தபசி குமரன், கருங்குழி கண்ணன், கவிதா, தினகரன், முருகன், குமரன், வழக்கறிஞர், குமாரதேவன் மற்றும் பகுதி தோழர்கள் கலந்து கொண்டனர். மதுரை கழகத் தோழர்கள் தமிழ்பித்தன், வெண்மணி ஆகியோர் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

# காமராசரை சரியாக அடையாளம் காட்டும் நூல்

தந்தை பெரியாரால் பச்சைத் தமிழர் என்று அடையாளம் காட்டப்பட்டவர் காமராசர்; ஆரவாரப் பேச்சுகளை அறிந்திடாது - மக்களின் இதயங்களோடு பேசியவர். காமராசருடைய லட்சியங்களை அடையாளப்படுத்தியது எல்லாம் அவரது பேச்சுக்கள் அல்ல. அவரது செயல்பாடுகள் தான், 'நல்ல செயலே சிறந்த பேச்சு' என்ற கருத்துக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் அவர். 'ஏழை-எளிய மக்களுக்கான சமூக நீதி' தான் அவரது லட்சியம். பல்வேறு நேரங்களில், தனிப்பட்ட முறையில், தனது சிந்தனைகளை உளம் திறந்து பரிமாறிக் கொண்டிருந்திருக்கிறார் காமராசர். அப்படி காமராசர் உளம் திறந்த உரத்த சமூகநீதி சிந்தனைகளைத் திரட்டி, ஒரு நூலாக்கியிருக்கிறார் - 'சன்' தொலைக் காட்சி அரசியல் விமர்சகர் திரு. வீர பாண்டியன்.

கையில் டேப்ரிக்கார்டுகளோடு பல பிரமுகர்கள் வீட்டுக்குப் படை எடுத்து, அவர்களது குரலிலே காமராசர் பற்றிய காட்சிகளைப் பதிவு செய்து, சுமார் 30 நாடாக்களில், பதிவான கருத்துக்களை நூலாகத் தொகுத்துள்ளார் திரு. வீர பாண்டியன் ! தமிழ் மண்ணின் சமூக உளவியலோடு, தன்னைச் சரியாகப் பொருத்திக் கொண்டு அதன் காரணமாகவே சரித்திரமாகி நிற்கும் காமராசரின், சரியான கொள்கை அடையாளமாக இந் நூல் விளங்குகிறது. இதுவே இந்நூலின் சிறப்பு. 288 பக்கங்கள் கொண்ட இந்த நூலை படிக்கத் துவங்கிவிட்டால், முடித்து விட்டுத்தான் மூட வேண்டும். அவ்வளவு தகவல்களின் குவியல்கள். தமிழர்கள் ஒவ்வொருவரும் தவறாமல் வாங்க வேண்டிய நூல்.


கடவுள் கொள்கையில் காமராசர் எத்தகைய கருத்து கொண்டிருந்தார் என்பதை, தஞ்சை மாவட்ட காங்கிரஸ் தலைவராக இருந்து மறைந்த சீர்காழி எத்திராஜ் அவர்கள் நூலில் விளக்கியிருக்கிறார். அந்தப் பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.

"தலைவர் அடுத்த ஊர் நிகழ்ச்சிக்குப் போவதற்காகக் காரில் ஏறினார். நானும் அவரோடு பயணம் செய்தேன். "கடவுள் பற்றி காமராஜ் என்ன நினைக்கிறார்... பூஜை, வழிபாடு, நேம, நைவேத்தியங்கள் பற்றி அவரது கருத்து என்ன ?" என்பதையெல்லாம் அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது என் நெடு நாளைய அவா. இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று எண்ணி நான் தலைவரிடம் மெல்ல ஆரம்பித்தேன்.

"கடவுள்னு ஒருத்தர் இருக்கார்னு உங்களுக்கு நம்பிக்கை உண்டா... ?"

"இருக்கு. இல்லைங்கிறதைப் பத்தி எனக்கு எந்தக் கவலையும் கிடையாதுன்னேன். நாம செய்றது நல்ல காரியமா இருந்தா போதும். பக்தனா இருக்கறதை விட யோக்யனா இருக்கணும். அயோக்கியத்தனம் ஆயிரம் பண்ணிகிட்டு கோவிலுக்குக் கும்பாபிஷேகம் பண்ணிட்டா சரியாப் போச்சா... ?" என்றார்.

நான், "கடவுள் விஷயத்துல நேரு கொள்கையும், உங்க கொள்கையும் ஒண்ணாயிருக்கும் போலிருக்கே..." என்று ஆரம்பிக்கவும், அவரே, "அக்னாடிஸ்ட்டுன்னு" சொல்றீயா... ? நேரு ரெண்டப் பத்தியும் கவலப்படாதவர் தான். ஆனா... மனிதனை முன்னேற்றணும், சமூகம் வளரும்ணும்கிறதுல அவர் கவனமாயிருந்தார். அதுக்கு மதமோ, கடவுளோ தடையாயிருந்தா அதைத் தூக்கிக் குப்பையிலே போடணும்கிற அளவுக்கு




அவர் தீவிரவாதி. எப்படி யோசிச்சிப் பார்த்தாலும், சாதாரண மனிதனைக் கை தூக்கி விடணும்கிறதத் தானே எல்லா மதமும் சொல்லுது. சமுதாயத்துல பேதம் போகணும்.... ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாதுங்கிறதத் தானே மகான்கள் சொல்றாங்க. ஆனா, இன்னிக்கு நம்ம மதங்கள் அதப்பத்திக் கவலைப்படுதான்னேன்... ? எவன் தலையைத் தடவியாவது, எவனை அழிச்சாவது தான் முன்னேறணும்னுதானே ஒவ்வொரு மடாதிபதியும் நினைக்கிறான்...

"நீங்கள் ஏன் உங்களை ஒரு முழு நாத்திகராய் அறிவித்துக் கொள்ளவில்லை... ?" என்று கேட்டேன்.

"நான் ஒரு சமுதாயத் தொண்டன். நாத்திகவாதி - ஆத்திகவாதி எல்லாருக்கும் சேவை செய்றவன். எனக்கு எதிரே வர்றவனை "மனுஷன்"னுதான் பாக்குறேனே தவிர அவனை பிராமணன், சூத்திரன்னு பாக்குறதில்லை... அப்படி எவனும் என்கிட்டே பேசிகிட்டு வரவும் முடியாது. நாத்திக வாதம்கிறது ஒரு தனி மனிதக் கொள்கை. அரசியல்வாதி பொதுவானவன். ஒரு கோவிலை நிருவாகம் பண்ண நிதி கொடுக்க வேண்டியது, அரசியல்வாதியோட கடமை. அந்தக் கோவில்லே ஆறுகால பூஜை ஒழுங்கா நடக்குதா... விளக்கு எரியுதான்னு பாக்க வேண்டியது, "கவர்னென்ஸ்" பண்றவ

## ரஜினி பிரச்சினை - டாக்டர் ராமதாஸ் பக்கம் முழுமையாக நிற்கிறோம்

நடிகர் ரஜினிகாந்த் - பா.ஜ.க.வை ஆதரிப்பதால் தி.மு.க. கூட்டணிக்கு எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடாது; டாக்டர் ராமதாஸ் - நடிகர் சங்கங்கள், இளைஞர்களை சீரழிப்பதை எதிர்த்துக் குரல் கொடுத்தார். நடிகர் சங்கங்களைக் கலைத்துவிட்டு பெரியார் படிப்பகங்களைத் துவக்குமாறு கூறினார். இதிலே என்ன தவறு இருக்கிறது? நடிகர் ரஜினிகாந்த் ரசிகர் மன்றமும் - இளைஞர்களை சீரழிக்கத் தானே செய்கிறது? இதிலே டாக்டர் ராமதாஸ் கருத்துக்களை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். அவரோடு இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டு நிற்கிறோம்.

**~ புதுவையில் செய்தியாளர்களிடையே கழகத் தலைவர் கொளத்தூர் மணி**

இதுக்குக் கடவுள் சம்மதப்படுறாரா... ?" என்று கேட்டார்.

நான் உடனே, "அப்படியானா ஆண்டவன்னு ஒருத்தர் இல்லேன்னுதான் நீங்களும் நினைக்கிறீங்களா... ? இருந்திருந்தா இந்த அயோக்கியத்தனத்தையெல்லாம் ஒழிச்சிருப்பாரே...! தன்னோட எல்லா பிள்ளைகளையும் மேல் ஜாதி, கீழ் ஜாதின்னு படைச்சிருக்க மாட்டாரே... ?" என்றேன்.

"மேல் ஜாதி, கீழ் ஜாதியெல்லாம் இடையிலே வந்த திருட்டுப் பயலுக பண்ணினதுன்னேன். சுரண்டித் திங்கிறதுக் காகச் சோம்பேறிப் பசங்க பண்ணின ஏற்பாடுன்னேன். எல்லாரும் ஆயா வவுத்துல பத்து மாசம் இருந்து தானே பொறக்கிறான். அதுலே என்ன பிராமணன், சூத்திரன்... ? ரொம்ப அயோக்கியத்தனம்... !" என்றார் காமராஜர். எனக்குள் பெருமையும், பூரிப்பும் பிடிபடவில்லை. காமராஜரைக் கட்டிப் பிடித்து ஆலிங்கனம் செய்ய வேண்டும் போலிருந்தது. இவருக்குள் இவ்வளவு சிந்தனை ஊற்றா... ? இத்தனை கம்பீரமா ? அடங்காத சீற்றமா ? ஆத்திர நெருப்பா ? அவர் பேசப் பேச நான் வானுக்கும், பூமிக்குமாய்க் குதித்தேன்.

னோட வேலை. "நான் நாத்திகவாதி. எனவே கோவிலை இடிப்பேன்"னு எவனும் சொல்ல முடியாது. கம்யூனிச சமுதாயத்திலேயே கோவிலும், பூஜையும் இருக்கே...! தனிப்பட்ட முறையில் நான் கோவில், பூஜை, புனஸ்காரம்னு பைத்தியம் பிடிச்சி அலையிறதில்ல. மனிதனோட அன்றாடக் கடமைகள்தான் முக்கியம்னு நெனைக்கிறவன்..." என்று மிகத் தெளிவாகப் பேசினார்.

"அப்படியானா, நீங்க பூஜை, பிரார்த்தனையெல்லாம் பண்றதில்லையா ?" எனக் கேட்டேன்.

"அதெல்லாம் வேலை, வெட்டியில்லாதவன் பண்றதுன்னேன். அடுத்த வேளை சோத்துக்கில்லாதவன், கடன் வாங்கி ஊர், ஊரா 'ஷேத்ராடனம்' போறான்... எந்தக் கடவுள் வந்து, 'நீ ஏண்டா என்னப் பாக்க வரலைன்'னு இவன்கிட்டே கோவிச்சுகிட்டான்... ? அபிஷேகம் பண்றதுக்காக கொடம், கொடமாப் பாலை வாங்கி வீணாக்குறானே மடையன்... அந்தப் பாலை நாலு பிள்ளைங்ககிட்டே கொடுத்தா, அதுங்க புஷ்டியாவாவது வளருமால்லியா... ?"

(மீதி அடுத்த வாரம்)

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 22nd April 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஏப்ரல் 29, 2004 | புரட்சி 3 | முழக்கம் 16 | விலை : ரூ.2.50

# கோவையில் கழகத்தின் தேர்தல் பிரச்சாரம்

கழக சார்பில் கோவை, நீலகிரி, பொள்ளாச்சி பாராளுமன்ற தொகுதிகளில் கே. சுப்பராயன், ஆர். பிரபு, டாக்டர் சி. கிருஷ்ணன் ஆகியோரை ஆதரித்து கழகம் தொடர் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துகிறது.

ஏப்ரல் 24-ம் தேதி மாலை கணபதி பேருந்து நிலையத்திலும், ஏப்ரல் 25-ம் தேதி மாலை பீளமேடு ஆரோக்கியசாமி திடலிலும், மே 1-ம் தேதி உடையாம்பாளையம், புலியகுளம் ஆகிய இடங்களில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் கழகப் பேச்சாளர் கோபி சு.வேலுசாமி பேசுகிறார்.

ஏப்ரல் 27-ம் தேதி மேட்டுப்பாளையத்திலும், ஏப்ரல் 28-ம் தேதி கோவை வேலாண்டி பாளையத்திலும் ஏப்ரல் 29-ம் தேதி மாலை 5 மணிக்கு உடுமலை சின்னவீரம்பட்டி இரவு 7 மணிக்கு உடுமலை நகரத்தில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் தி.மு.க. மாநில வெளியீட்டுச் செயலாளர் திருச்சி என்.செல்வேந்திரன் பேசுகிறார்.

மே 1-ம் தேதி காலை கோவை மாநகர். மாலை பொள்ளாச்சி, மே 2-ம் தேதி திருப்பூர், மே 3-ம் தேதி பொள்ளாச்சி ஆனைமலையிலும், மே 4-ம் தேதி உடுமலையிலும் நடைபெறும் கூட்டங்களில் தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச்செயலாளர் விடுதலை க. இராசேந்திரன், ஆட்சிக் குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன் பேசுகிறார்கள்.

மே 2-ம் தேதி திருப்பூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகிறார்.

மே 5-ம் தேதி உடுமலை மலையாண்டி பட்டினத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மறுமலர்ச்சி தி.மு.க. பேச்சாளர் மயிலாடுதுறை என்.எஸ்.அழகிரி பேசுகிறார்.

அனைத்து கூட்டங்களிலும் தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் கலந்து கொள்கிறார்.

## புதுவை கழகம் வெளியிட்ட நூல்

புதுவை மாநில தந்தை பெரியார் திராவிடர் கழகம் - 'தமிழர்களே; எச்சரிக்கை' என்ற 34 பக்கங்கள் கொண்ட சிறு வெளியீட்டை கடந்த 25.4.2004 அன்று வெளியிட்டது. பாரதிய ஜனதா - அ.தி.மு.க. ஆட்சியின் தமிழின விரோதப் போக்கை ஏராளமான தகவல் களுடன் விளக்குகிறது இந்நூல். நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, திரைப்பட இயக்குநர் சீமான் பெற்றுக் கொண்டார். புதுவை அரியாங் குப்பம், பெரியார் சிலை அருகே நடந்த நூல் வெளியீட்டுப் பொதுக் கூட்டத்துக்கு ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். புதுவை கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் தலைமை ஏற்றுப் பேசினார். நெய்வேலி கணேசன், புதுவை கழக செய்தி தொடர்பாளர் இளங்கோ ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திரைப்பட இயக்குநர் சீமான் சிறப்புரை யாற்றினார். இறுதிவரை கூட்டத்தினர் கருத்துகளைக் கேட்டனர். இயக்குனர் சீமான், சுமார் 2 மணி நேரம் எழுச்சி உரையாற்றினார்.

**நூல் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:** லோகு அய்யப்பன், (தந்தை பெரியார் தி.க. புதுவை), 35, திருவள்ளுவர் வீதி, இராதா கிருட்டிணன் நகர், அரியாங் குப்பம், புதுச்சேரி-605007. தொ.பே. 98428 93231.

## அரசு ஊழியர்களை பார்ப்பன நடிகர் எஸ்.வி. சேகர் மிரட்டுகிறார்!

"அரசு ஊழியர்கள் எங்கெங்கு அதிகம் வசிக்கிறார்கள். அவர்கள் யாருக்கு வாக்களிக்கிறார்கள் என்பதை எல்லாம் அரசு கண்காணிக்கும். அப்படி அரசுக்கு எதிராகத் தங்கள் உணர்வு களைக் காட்டினால் மீதமிருக்கும் இரண்டு ஆண்டுகளில் அவர்கள் நசுக்கப்படு வார்கள்" என்று பார்ப்பன காமெடி நடிகர் எஸ்.வி. சேகர், விஜய் தொலைக்காட்சியில் மக்கள் யார் பக்கம் நிகழ்ச்சியில் பேசும் போது, பகிரங்கமாக மிரட்டியுள்ளார். - 'குமுதம் ரிப்போர்ட்டர்'

# ரஜினியை இயக்கும் ஆர்.எஸ்.எஸ். புள்ளிகள்

பா.ஜ.க.வை ஆதரித்து நடிகர் ரஜினிகாந்த் - வெளியிட்ட அறிக்கைக்குப் பின்னணியாக இருந்து செயல்பட்டவர்கள் யார் என்ற தகவலை 'சிஃபி நியூஸ்' என்ற இணையதள - பத்திரிகை அம்பலப்படுத்தி யுள்ளது. கடந்த ஏப்ரல் 22-ம் தேதி அதன் சென்னை செய்தியாளர் பி.சி.வினோஜ் குமார் ரஜினிகாந்தை இயக்குவது யார் என்ற தலைப்பில் ஒரு செய்தி கட்டுரை வெளியிட்டுள்ளார். ரஜினிகாந்த் செய்தி யாளர்களிடம் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக படித்த அறிக்கை, துக்ளக் சோ வீட்டில், ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுக்கு மிகவும் நெருக்கமான குருமூர்த்தி ஆலோசனை யோடு தயாரிக்கப்பட்டது என்று, அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. "தமிழ் நாட்டில் இந்துத்வா கோட்பாட்டை வளர்ப் பதற்கு ரஜினிகாந்த் மிகவும் சரியானவர் என்று நீண்டகாலமாகவே ரஜினி மீது ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்கள் குறிவைத் திருக்கின்றன. ஆனாலும், இந்தக் கால கட்டத்தில், ரஜினியோடு நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொள்வதை, ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்கள் விரும்ப வில்லை. 'இந்துத்துவா'வில் உடன்பாடு இல்லாத ரஜினி ரசிகர்களும் இருப்பதால், அவர்களின் வெறுப்புக்கு உள்ளாக நேரிடும் என்பதே, இதற்குக் காரணம்" என்றும் அந்தக் கட்டுரை கூறுகிறது. "அதோடு, ரஜினி இந்துத்துவா ஆதர வாளர் என்பதை வெளிப்படுத்தி விட்டால், திராவிடக் கட்சிகளின் கோபத்துக்கும் ரஜினி உள்ளவார். எனவே, பா.ஜ.க.வை ஆதரிக்க இந்துத்துவா கொள்கையை முன் வைக்காமல் நதி நீர் இணைப்புத் திட்டத்தை முன் வைக்கலாம் என்று, ரஜினிக்கு, ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்கள் ஆலோசனை கூறின" என்றும் அந்தக் கட்டுரை மேலும் கூறுகிறது.

"நான் மாதத்துக்கு 10 முறையாவது ரஜினியை சந்திக்கிறேன். ஆனால் நான் அவருக்கு 'சாவி' கொடுப்பது இல்லை; அவரும் என்னிடமிருந்து 'சாவி' வாங்கு வது இல்லை" - என்று, தமிழ் வார ஏடு ஒன்றுக்கு அண்மையில் சோ பேட்டி அளித் துள்ளதை எடுத்துக் காட்டி, சோவுக்கும், ரஜினிக்கும் உள்ள நெருக்கத்தை கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

**ரஜினியின் பார்ப்பனக் குடும்பம்**

ரஜினியின் குடும்பத்தினர், அவர் அரசி யலுக்கு வர வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக அக்கட்டுரை கூறுகிறது. ரஜினியின் குடும்பத்தினர் பற்றிய தகவல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. மகாராஷ்டிராவைச் சார்ந்த ரஜினி, லதா என்ற தமிழ்நாட்டுப் பார்ப்பனப் பெண்ணைத் திருமணம் செய்து கொண் டார். லதாவின் சகோதரி, ஒய்.ஜி.மகேந் திரன் என்ற செல்வாக்குள்ள பார்ப்பன குடும்பத்தைச் சார்ந்த நடிகரைத் திருமணம் செய்து கொண்டுள்ளார். லதாவின் சகோதரர், பின்னணிப் பாடகர் எஸ்.வி. ரமணனனின் மகளைத் திருமணம் செய்து கொண்டுள்ளார். இந்த குடும்பங்கள் மிகவும் நெருக்கமாக இருந்து வருகின்றன. ரஜினி அரசியலுக்கு வந்தால், மிகவும் மகிழ்ச்சி அடைவது இந்தக் குடும்பமாகவே இருக்கும். தமிழக அரசியலில் ரஜினி செல்வாக்குள்ள தலைவராக வரப் போகிறார் என்ற நம்பிக்கையோடு, இந்தக் குடும்பம் இருக்கிறது" என்றும் அக் கட்டுரை குறிப்பிடுகிறது. *

புதுச்சேரி மாநில தந்தை பெரியார் திராவிடர் கழக நிர்வாகக் குழு கூட்டத்திற்கு வருகை தந்த தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர், கொளத்தூர் மணி அவர்களை, புதுவை மக்களவை தொகுதியின் பா.ம.க. வேட்பாளர் பேராசிரியர் மு.இராமதாஸ் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து கழக ஆதரவினைக் கோரிய போது எடுத்த படம். உடனிருப்போர்; விடுதலை இராசேந்திரன், லோகு அய்யப்பன் (புதுவை கழகத் தலைவர்), பா.ம.க. புதுவை மாநில அமைப்பாளர் என்.ஜி.பன்னீர் செல்வம்.

## ஆர்.எஸ்.எஸ் நிறுவனத்திற்கு அரசு ஒதுக்கிய ஆயிரம் கோடி

ஆர்.எஸ்.எஸ். மற்றும் சங் பரிவார்கள் நடத்தும் 'குருகுலம்' மற்றும் அதன் சார்பு நிறுவனங்களுக்கு, முரளி மனோகர் ஜோஷியின் மத்திய மனித வளத்துறை அமைச்சகம் கடந்த 5 ஆண்டுகளில் ஒதுக்கிய தொகை ரூ.1000 கோடி.

5 ஆண்டுகளில் உருது மொழி வளர்ச்சிக்கு ஒதுக்கியது ரூ.35 கோடி. அரசு வெளியிட்டுள்ள ஆவணங்களிலிருந்து இந்த தகவலை வெளியிட்டுள்ளார் மாநிலங்களவை உறுப்பினர் சைபுதின் சோஸ். முஸ்லீம்களின் வாக்குகளுக்காக, வாஜ்பாய் பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், 2 கோடி உருது ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப் போவதாக வாஜ்பாய் அறிவித்தார். அடுத்த நாளே 2 கோடி அல்ல; 2 லட்சம் என்று பிரதமர் அலுவலகம் திருத்தம் வெளியிட்டது. 5 ஆண்டுகளில் உருது வளர்ச்சிக்கு ரூ.35 கோடி மட்டுமே ஒதுக்கிய ஒரு ஆட்சி, 2 லட்சம் பேருக்கு வேலை கொடுப்பதாகக் கூறுவதை எப்படி நம்ப முடியும் என்று அவர் கேட்டுள்ளார்.

தலையங்கம்

## வாஜ்பாய் வடிக்கும் நீலிக் கண்ணீர்

முஸ்லீம்களின் வாக்குகளைக் கவருவதற்காக - திடீர் என்று வாஜ்பாய் தனது குரலை மாற்றிக் கொண்டுள்ளார். "முஸ்லீம்கள் தாங்கள் ஒதுக்கப்பட்டது போல் நினைக்க வேண்டாம். சிறுபான்மையினரிடைய பிளவு ஏற்படுத்தும் எந்த முயற்சியிலும் நாங்கள் இறங்க மாட்டோம். முஸ்லீம்கள் ஆதரவு ஒத்துழைப்பு இன்றி நாடு முன்னேற முடியாது" - என்று டெல்லியில் தன்னை சந்தித்து, ஆதரவு தெரிவிக்க வந்த சில முஸ்லீம் பிரமுகர்களிடம் வாஜ்பாய் கூறியிருக்கிறார்.

முஸ்லீம்களை எல்லாம் தேச விரோதிகள் என்று முத்திரை குத்தி, அவர்களைத் தனிமைப்படுத்தும் நோக்கத் துடனேயே - வாஜ்பாய் ஆட்சி செயல்பட்டது யாருக்குத் தான் தெரியாது? குஜராத்தில் - முஸ்லீம்கள் மீது இனப் படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்ட நரேந்திரமோடியை பதவி விலகச் சொல்லாமல், அவரை 'தேசிய கதாநாய கனாக்கி' மகிழ்ச்சிக் கூத்தாடிக் கொண்டிருக்கிறவர்கள், இப் போது முஸ்லீம்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்.

பாபர் மசூதி இடிப்பதற்கு முதல் நாள் - 1992 டிசம்பர் 5ம் தேதி - வாஜ்பாய் கரசேவகர்களிடம் பேசியதை, ஒரு வீடியோ படமாக்கி, பாபர் மசூதி நடவடிக்கைக் குழு, ஒளிபரப்பி வருகிறது. முஸ்லீம்களுக்கு எதிராக, வாஜ்பாய் நஞ்சு கக்கியிருக்கிறார், அந்த உரையில்!

"என்னைப் பொறுத்தவரை, உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அர்த்தம் இது தான். 'கரசேவை'யை அது நிறுத்தப் போவதில்லை. கரசேவையை நிறைவேற்றும் உரிமையை உச்சநீதிமன்றம் நமக்கு அளித்தள்ளது. (ஜெய் ஸ்ரீராம் என்ற கூச்சல்) நம்மை எவராலும் நிறுத்த முடியாது. நாளைக்கு கரசேவையை நிறைவேற்றுவதன் மூலம், நாம் உச்சநீதிமன்றத்தை மீறுகிறோம் என்று அர்த்தமல்ல; மாறாக உச்சநீதி மன்றத்துக்கு மரியாதை செய்கிறோம்." (ஜெய ஸ்ரீராம் என்ற கூச்சல்; கைதட்டல்)

"அயோத்தியில் கரசேவகர்கள் என்ன செய்வது என்று தீர்மானமாக முடிவெடுத்துவிட்டார்கள். இது உச்சநீதி மன்றத்தின் உத்தரவை மீறுவது ஆகாது. நாளை அங்கே என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது. நானும் அயோத்திக்கு வரத்தான் விரும்புகிறேன். ஆனால், என்னை டெல்லிக்கு போகச் சொல்லி இருக்கிறார்கள்"

- இப்படித்தான், மசூதி இடிப்புக்கு முதல் நாள், கரசேவகர்களைத் தூண்டிவிட்டுப் பேசினாரே தவிர, ஒரு பொறுப்புள்ள தலைவராக அவர் பேசவில்லை.

ராம ஜென்ம பூமி அறக்கட்டளைத் தலைவர் பரமஹம்சர் இறந்தவுடன், அவரது சடலத்தை அயோத்தியில் வைத்துக் கொண்டு, 'ராமர் கோயிலைக் கட்டியே தீருவோம்' என்று, வீர சபதம் எடுத்தவர், இதே வாஜ்பாய் தான். நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது என்பது பற்றிக் கவலைப்படவில்லை.

உச்சநீதிமன்றம் - எந்தக் கட்டுமானத்துக்கும் அனுமதி மறுத்து, தடைவிதித்துள்ள பகுதியில் - தடையை நீக்க வேண்டும் என்று, அரசு சார்பிலே, உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தவர் வாஜ்பாய் தான்! பாபர் மசூதியை இடிப்பதற்குத் தூண்டி விட்டு, இடித்த இடத்தில், ராமன் கோயிலைக் கட்டுவதற்குத் துடிக்கும் 'வாஜ்பாய்கள்' இப்போது முஸ்லீம்களுக்காகக் கண்ணீர் விடுகிறார்கள். முஸ்லீம்களைப் பிளவுபடுத்தி ஒதுக்கி வைக்கும் அடுக்கடுக்கடுக்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டிருப்பவர்களின் இந்தத் திடீர் கரிசனம் - நாடகம் தான், என்பது முஸ்லீம்களுக்கு நன்றாகவே புரியும்.

நாளைக்கு ஒரு பேச்சு என்பது - வாஜ்பாய் கலாச் சாரமாகவே மாறிவிட்டது. கூட்டணிக் கட்சிகளைத் தூக்கி சுமக்க முடியாது என்றார். பிறகு, குரலை மாற்றிக் கொண்டு, மெஜாரிட்டி கிடைத்தாலும் கூட்டணி ஆட்சி தான் என்கிறார். தனது வாரிசு யார் என்பதைத் தேர்வு செய்து விட்டோம் என்றார். இப்போது, அப்படித் தேர்வு எதுவும் செய்யவில்லை என்கிறார். இதுவே நான் போட்டியிடும் கடைசி தேர்தல் என்று கடந்த முறை சொன்னார். இப்போது தான் போட்டியிடாவிட்டால், தேசமே, குழப்பத்தில் மூழ்கிப் போய்விடும் என்கிறார். நேற்று ஒரு பேச்சு, இன்று ஒரு பேச்சு - என்பதை வழக்கமாக்கிக் கொண்டவர் வாஜ்பாய். எனவே முஸ்லீம்களின் மீதான திடீர் பாசமும் அந்தப் பட்டியிலில் சேர்க்கப்பட வேண்டியது தான்!

உதாரணத்துக்கு சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டோம்; இதுபோல் ஏராளம் உண்டு.

## திருப்பூரில் கழக நூல் வெளியீட்டு விழா

முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் சுப்பராயனுக்கு ஆதரவு; மற்றும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதி கழக சார்பில் வெளியிடப்பட்டுள்ள சங்பரிவாரின் சதி வரலாறு நூல் வெளி யீட்டு விழா பொதுக் கூட்டம், மே 2ம் தேதி மாலை 6 மணி யளவில், திருப்பூரில் அரிசிக் கடைவீதியில் நடைபெறுகிறது. கழகக் களப்பணி ஒருங்கிணைப்பாளர் அங்கக்குமார் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், 'சன்' தொலைக்காட்சி அரசியல் விமர்சகர் திரு. வீர பாண்டியன் ஆகியோர் உரையாற்றுகின்றனர். நூலை, கழக ஆட்சிக்குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன் வெளியிட, முதல் பிரதியை தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத் தலைவர் பேராசிரியர் ஜவஹிருல்லாஹ் பெற்றுக் கொள்கிறார். வேட்பாளர் சுப்பராயன், தோழர்கள் கோவிந்தசாமி (மார்க்சிஸ்ட்), கா.செல்வராஜ் (திமுக), ரவி (சி.பி.அம்), மு.சக்திவேலு (மாநில துணைப் பொதுச்செயலாளர் பா.ம.க.), த. சிவ பாலன் (ம.தி.மு.க.) மற்றும் தோழர்கள் பேசுகின்றனர். திருப்பூர் நகர தந்தை பெரியார் திராவிடர் கழகம் நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகளை செய்து வருகிறது. 230 பக்கங்கள் கொண்ட நூலின் விலை ரூ.60/- *

## கழகப் பிரச்சாரத்துக்கு கெடுபிடி; சென்னை கூட்டத்தில் கண்டனம்

தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுக்கூட்டம் 26.4.2004 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு, லாயிட்சு சாலை, பி.எம். தர்கா அருகில், கழகத் தோழர் இரா. உமாபதி தலைமையில் சிறப்புடன் நடந்தது. ச. குமரன் வரவேற் புரையாற்றினார். பழ.நெடுமாறன், கொளத்தூர் மணி, பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ஆனூர் ஜெக தீசன், விடுதலை இராசேந்திரன், செ. பத்ரி நாராயணன் ஆகியோர் உரையாற்றினர். அ. ராஜா நன்றி கூறினார்.

கழகப் பிரச்சாரக் கூட்டத்துக்கு காவல் துறையும் தேர்தல் ஆணைய அதிகாரிகளும், கெடுபிடி தந்து கருத்துரிமைகளைப் பறிக்கும் நிபந்தனைகள் போட்டுள்ளதை தோழர் பத்ரி நாராயணன் சுட்டிக் காட்டி கண்டித்தார்.

'புரட்சி முழக்கம்' இதழில் வெளிவந்த "யார் அன்னியர் ?" என்ற செய்தியை கழகத் தோழர்கள் துண்டுப்பிரசுரமாக அச்சடித்து வழங்கி வருகிறார்கள். சென்னையில் - வீதிப் பிரச்சாரக் கூட்டத்தின் போது, கழகத்தினர் இந்தத் துண்டறிக்கைகளை வழங் கினர். தேர்தல் ஆணைய பார்வை யாளர் இந்தத் துண்டறிக்கையில் பார்ப்பன எதிர்ப்பு கருத்து அடங்கி யுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்; அவரது ஆலோசனை பேரில் கழகத் தோழர் உமாபாரதி மீது, காவல் துறை வழக்கு பதிவு செய் துள்ளது. அதோடு, கழகத்தின் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங் களுக்கும் அனுமதி மறுத்து விட்டனர்.

சோனியா அன்னியர் என்று ஜெயலலிதா பேசி வருகிறார். அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காத தேர்தல் ஆணையம், அதற்கு பதில் கூறும் உரிமை களைத் தடுத்து நிறுத்தியிருக் கிறது. பார்ப் பனர்கள் - தங்களை 'பிராமணர் களாக' அடையாளம் காட்டிக் கொண்டு வலம் வரும் போது, இழிவுபடுத்தப்படும் "சூத்திரர்கள்" இதை சுட்டிக்காட்ட உரிமை கிடையாதா ? என்று, கழகத் தோழர் பத்ரி நாராயணன் கேட்டார். *

## வன்முறைக்கு லட்சிய சாயமா?

பா.ஜ.கவினருடைய ஊழலுக்கும் மற்றவர் களுடைய ஊழல்களுக்கும், இவர்களுடைய கிரிமினல் நடவடிக்கைக்கும், மற்ற அரசியல் கட்சி நடத்துகின்ற கிரிமினல் நடவடிக்கைக்கும் இடையிலே ஒரு வேறு பாடு உண்டு. இவர்கள் எந்தக் கிரிமினல் நடவடிக்கை யில் ஈடுபட்டாலும் அந்தக் கிரிமினல் நடவடிக்கைக்கு ஒரு தத்துவத்தைச் சொல்லி, அதை நியாயப்படுத்தி இந்த இலட்சியங்களுக்காக அந்த கிரிமினல் நட வடிக்கையில் ஈடுபட்டேனென்று நியாயம் கற்பிக் கிறார்கள்.

ஒரிஸ்ஸாவிலே மருத்துவம் செய்து வந்த ஸ்டெயின் பாதிரியாரை எரித்துக் கொன்றார்கள். அவர்களது இரண்டு குழந்தைகளையும் சேர்த்து எரித்துக் கொன்றார்கள். இன்னும் சொல்லப் போனால் அவர் பாதிரியாரே அல்ல. ஆஸ்திரேலியா விலிருந்து மருத்துவம் செய்ய வந்த ஒரு மருத்துவர். உயிரோடு எரித்து - நாடு முழுவதும் ஒரு பதற்றம் உருவாகியிருக்கிற சூழலில் வாஜ்பாயும், அத்வானியும் அங்கே இருந்து சொன்னார்கள். 'எரிக்கப்பட்டது வேதனை தான். ஆனால் ஏன் எரிக்கப்பட்டார்கள் ? மதமாற்றம் என்பது நாடு முழுவதும் நடந்து கொண் டிருக்கிறது. எனவே மதமாற்றம் பற்றி ஒரு தேசிய விவாதம் நடத்த வேண்டுமென்று.' டாக்டர் எரிக்கப் பட்ட சம்பவத்தை பின்னுக்குத் தள்ளிவிட்டு, மத மாற்றம் பற்றி தேசிய விவாதம் நடத்த வேண்டும் என்ற கருத்தை அவர்கள் அன்றைக்கு முன் வைத்தார்கள். அப்படிப்பட்ட ஒரு கிரிமினல் நடவடிக்கையைக்கூட மதமாற்றத்திற்கெதிரான ஒரு கொள்கை நடவடிக்கை என்று அவர்கள் சித்தரித்தார்கள். ஒரிஸ்ஸாவிலே அருட்சகோதரிகளை விசுவஇந்து பரிஷத் பாலியல் வன்மறைக்கு உட்படுத்தியது. இது ஒரு கிரிமினல் குற்றம். ஆனால், இதற்கும் கொள்கை முலாம் பூசிட அவர்கள் தவறவில்லை. அருட்சகோதரிகள் திருமணம் செய்து கொள்ளாமல் மதத் தொண்டு செய்கிறார்கள். அந்த பிரம்மச்சரியத்தைத் தகர்க்கும் கொள்கை ரீதியான நடவடிக்கை என்று இந்த கிரிமினல் குற்றத்தை நியாயப்படுத்துகிறார்கள். இதை இந்துக்களின் எழுச்சி என்று பிரகடனப் படுத்துகிறார்கள்.

மசூதியை இடித்தார்கள். மசூதியை இடிப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணம், 'இந்த நாட்டில் அவமானச் சின்னங்கள் இருக்கக் கூடாது. இந்த நாட்டில் ஒரு வரலாறு எழுதப்பட வேண்டும் என்றும், அது பாபர் மசூதி இடிப்பதற்கு முன், பாபர் மசூதி இடிப்பதற்குப் பின் என்று எழுதப்பட வேண்டும்' என்று சொன்னார்கள். அவமானச் சின்னங்கள் இந்த நாட்டிலே அகற்றப்பட வேண்டும் என்று மசூதி இடிப்பு என்கிற வன்முறைக்கும் ஒரு தத்துவத்தைத் தான் காட்டுகிறார்கள். மதம் மாறினார்கள் ஒரிஸ்ஸாவிலே, மதம் மாறியவர்களை மொட்டையடித்தார்கள். மொட்டையடித்துவிட்டு அந்த வன்முறையையும் மதமாற்றத்திற்கெதிரான நடவடிக்கை என்று அதற்கு ஒரு தத்துவம் கற்பிக்கிறார்கள். உசேன் என்று சொல்லப்படுகின்ற சர்வதேசப் புகழ் பெற்ற ஓவியர் அந்த ஓவியரின் கலைக்கூடத்தில் அவர் வரைந்த ஓவியங்களைக் கிழித்து நாசமாக்குகிறார்கள். அது ஒரு வன்முறை. ஆனால், அது வன்முறையாகச் சித்தரிக்கப்படவில்லை. அதற்கு கொள்கை முலாம் பூசப்பட்டது. இந்த வன்மறையாளர்களை தேச பக்தர் களாக சித்தரிக்கிறார்கள். கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு விளை யாட வருகிறார்கள் என்று சொன்னால், மைதானத் திற்குள்ளே புகுந்து மைதானத்தை நாசப்படுத்து கிறார்கள். இந்த வன்முறையைக் காலித்தனமாக அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதற்கும் ஒரு கொள்கை முலாம் தான் பூசப்படுகிறது. இப்போது பாகிஸ்தானுக்கு இந்திய கிரிக்கெட் அணி விளையாடப் போவதாக முடிவு செய்தது. முதலில் வாஜ்பாயே இதை அரசியலாக் கினார். இந்திய அணிக்கு பாதுகாப்பு இருக்காது. எனவே விளையாடப் போக வேண்டாம் என்றார். பாதுகாப்புக்கு நாங்கள் பொறுப்பு என்று பாகிஸ்தான் அதிபர் அறிவித்தார். முழுமையான பாதுகாப்போடு விளையாடி திரும்பியிருக்கிறார்கள். வெற்றியும் பெற்றுள்ளார்கள். ஆனால் இந்தியாவில் பாகிஸ்தான் அணியினர் விளையாட வந்த போது மைதானத்தைச் சேதப்படுத்தி அங்கே பன்றித் தலையை வெட்டி போட்டவர்கள் இவர்கள் தான். எனவே, வன்முறை என்று சொல்லப்படுவதைக்கூட அதற்கு ஒரு கொள்கை நியாயத்தைக் கற்பித்து அதற்கு ஒரு தத்துவத்தைக் கற்பித்து நடத்தப்படுகிறது. அவர்கள் தேச பிதாக்கள், தேச பக்தர்கள் என்று போற்றப் படுகிறார்கள். *

# கல்வியை ஆர்.எஸ்.எஸ். மயமாக்கிய ஜோஷி!

**வ**ரலாறுகளையே திரித்து - வரலாற்று மோசடிகளுக்கு வழிவகுத்தவர்கள் மீண்டும் தங்களை ஆட்சியில் அமர்த்தக் கோரி வருகிறார்கள். எந்தத் திராவிடர் இயக்கம் தமிழனை நிமிரச் செய்ததோ, எந்தத் திராவிடர் கோட்பாடு தமிழனின் நெற்றியில் 'சூத்திரப்'பட்டத்தை பச்சைக் குத்திவிடாமல், பார்ப்பனர்களை முடக்கி வைத்ததோ அந்தத் திராவிடர் இயக்கம் மீட்டெடுத்த அடையாளத்தையே அழித்து, அனைத்தையும் ஆரிய நாகரீகத்துக்குள், அடக்கிவிடத் துடிக்கும் ஆரியத்தின் வாரிசுகள், ஆட்சி அதிகாரத்தில் தங்களை மீண்டும் அமர்த்தக் கோரி வருகின்றன. அகில இந்திய ஆரிய திராவிட முன்னேற்றக் கழகத்தை நடத்தி வரும் அம்மையார் ஜெயலலிதாவும், ஆரியத்தின் ஆணவத்தோடு ஒட்டுக் கேட்டு வலம் வருகிறார்.

வாஜ்பாயின் 'வர்ணாஸ்ரம ஆட்சி' வேதப் பார்ப்பனர்களின் ஆசீர்வாதத்தோடு, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன், கல்வித் துறையை காவி மயமாக்கிய செய்திகள் உங்களுக்குத் தெரியுமா? இதோ நடந்த சூழ்ச்சிகளைப் பட்டியலிடுகிறோம், பாருங்கள்!

❖1998-ல் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சி பதவிக்கு வந்தபோது, கல்வித்துறை அமைச்சரானவர் உ.பி. பார்ப்பனர் முரளி மனோகர் ஜோஷி. இதே துறையில் இணையமைச்சரானவர் மற்றொரு தீவிர இந்துத்துவாவாதியான உமாபாரதி.

❖ ஜோஷி பதவி ஏற்ற உடனே, இந்திய வரலாற்று ஆய்வுக்கழகம் (ICHR) என்ற புகழ்பெற்ற அரசு நிறுவனத்தில் அங்கம் வகித்த 18 வரலாற்று ஆய்வாளர்களை, அதிரடியாகப் பதவி நீக்கம் செய்து விட்டு, அந்த இடங்களில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களை நியமித்தார். பதவி நீக்கம் செய்யப்பட்ட வரலாற்று அறிஞர்கள் செய்த "குற்றம்" - அயோத்திப் பிரச்சினையில், பா.ஜ.க.வினர் நிலைப்பாட்டை ஏற்க மறுத்தது தான்.

❖ மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் தலைவர் பதவியில் - பி.ஆர்.குரோவர் என்பவர் நியமிக்கப்பட்டார். ராமன் பிறந்த இடத்தில்தான் பாபர் மசூதி கட்டப்பட்டது என்றும், பாபர் மசூதி இடிக்கப்படவில்லை; அது தானாக தகர்ந்து வீழ்ந்தது என்றும் எழுதியவர் இவர்.

❖ நாடாளுமன்ற ஒப்புதலுடன் "அய்.சி.எச்.ஆர்" நோக்கம் வரையறுக்கப்பட்டிருந்தது. வரலாற்று ஆய்வை பகுத்தறிவு வழியில் நடத்த வேண்டும் (Rational direction) என்கிற குறிக்கோளை மாற்றி, 'பகுத்தறிவை' நீக்கி விட்டு, தேசிய வழியில் (National direction) வரலாற்றை அணுக வேண்டும் என்று மாற்றி அமைத்தார்கள்.

❖ நவம்பர் 98ல் மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டிய ஜோஷி, அங்கே சரசுவதி கடவுளுக்கு வணக்கம் செலுத்தும் பாடலை பாடச் செய்தார். திமுக உட்படப் பல கல்வி அமைச்சர்கள் எதிர்த்தனர்.

❖ வேத, உபநிஷத்துக்களைப் பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும்; மூன்றாம் வகுப்பிலிருந்து சமஸ்கிருதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்; உயர்க் கல்வி பயிலும் பெண்களுக்கான பாடத் திட்டத்தில், வீட்டு நிர்வாகம் பற்றி சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும்; ஆன்மீகக் கல்வியை பாடத் திட்டமாக்க வேண்டும் - இவையெல்லாம் ஜோஷி, அம்மாநாட்டில் முன் வைத்த தீர்மானங்கள். இந்தக் கல்வித் திட்டத்தைத் தயாரித்தவர் மேற்கு வங்க மாநிலத்தைச் சார்ந்த தொழிலதிபர் பி.டி. சிட்லாங்கியா.

**இதோ அடுக்கடுக்கான ஆதாரங்கள்!**

❖ எந்த விவாதங்களும் நடத்தப்படாமல், இந்தப் பார்ப்பனிய கல்வித் திட்டங்களை அமுல்படுத்தத் துவங்கிய ஜோஷி, அவைகளை நடைமுறைப்படுத்துவதற்கேற்ப, என்.சி.ஈ.ஆர்.டி. (கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில்), பல்கலைக் கழக மான்யக் குழு (யு.ஜி.சி.), இந்திய வரலாற்று ஆய்வுக் கழகம் (அய்.சி.எச்.ஆர்), இந்திய சமூக விஞ்ஞான ஆய்வுக் கழகம் (அய்.சி.எஸ்.எஸ்.ஆர்) ஆகியவற்றை மாற்றி அமைத்தார்.

❖ 1967 தேர்தலில் - நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனசங் கட்சி வேட்பாளராக நின்று வெற்றி பெற்ற பி.எல். சோந்தி அய்.சி.எஸ்.எஸ்.ஆர். தலைவரானார். அய்.சி.எச்.ஆர். தலைவர் பதவி பி.ஆர். குரோவத் என்பவருக்குக் கிடைத்தது. ராமர் பிறந்த இடத்தில் தான் பாபர் மசூதி கட்டப்பட்டது என்று கூறியவர் இந்த குரோவர் உலகத் தொல்லியல் மாநாடுகளிலும், இந்திய வரலாற்றுக் கழக மாநாடுகளிலும் வகுப்புவாதத்துக்கு எதிரான தீர்மானங்கள் வந்தால், அவைகளை எதிர்ப்பதையே தனது முழு நேரப் பணியாகக் கொண்டிருந்தவர் இவர்.

❖ என்.சி.ஈ.ஆர்.டி என்ற அமைப்பில் அதிகாரமிக்க பொறுப்பில் கே.ஜி.ரஸ்தோகி என்பவர் நியமிக்கப்பட்டார். யார் இந்த ரஸ்தோகி? 1998-ல் இவருடைய சுயசரிதை வெளிவந்தது. அதை ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு சமர்ப்பணம் செய்திருந்தார். ரஸ்தோகி, ஆர்.எஸ்.எஸ்.சில் பணியாற்றிய காலத்தில், வெடிகுண்டுகளைக் கையாளும் பயிற்சி பெற்றவர். ஒருமுறை புரன்கலியார் எனுமிடத்தில் மதக்கலவரம் நடந்தபோது, ஒரு அழகிய முஸ்லீம் பெண்ணைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றவர் இந்த ரஸ்தோகி. இதை அவரே அவரது சுயசரிதையில் குறிப்பிட்டிருந்தார். அவருக்குத் தான் என்.சி.ஈ.ஆர்.டி.யில், பதவி நியமனங்களைச் செய்யும் பொறுப்பில் அமர்த்தினார் ஜோஷி.

❖ இவை மட்டுமல்ல, இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனம் (ஏ.எஸ்.அய்), தேசிய அருங் காட்சியகம், உயர்கல்விக்கான இந்திய நிறுவனம், கலைகளுக்கான இந்திராகாந்தி தேசிய மய்யம், இந்திய தத்துவ ஆய்வுக் கழகம், தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் முதலிய அமைப்புகளில் 250 ஆர்.எஸ்.எஸ். காரர்களை நியமித்து, கல்வி தொடர்பான அமைப்புகளை முழுமையாகக் காவி மயமாக்கிவிட்டது, வாஜ்பாய் ஆட்சி.

❖ இந்திய சமூக விஞ்ஞான ஆய்வுக் கழகத்தின் கீழ், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களான சியாமா பிரசாத் முகர்ஜி, தீனதயாள் உபாத்யாயா ஆகியோரது பெயரில் ஆய்வு மய்யங்களையும் உருவாக்கினார்கள்.

❖ தொல் பொருள் ஆய்வுத் துறை முற்றிலும் காவிமயமாக்கப்பட்டது.

❖பதேபூர் சித்ரி வளாகம் - யுனெஸ்கோ நிறுவனத்தால் உலக மரபுச் சின்னமாக அறிவிக்கப்பட்ட பகுதியாகும். அக்பர் மன்னரால் கட்டப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரண்மனை இங்கே தான் உள்ளது. தொல்லியத் துறையின் முன்னாள் அதிகாரி டி.வி.சர்மா என்பவரைக் கொண்டு, இங்கே 'அகழ்' ஆய்வுகள் நடத்தியது தொல்லியல் துறை. இந்து, சமண கோயில்களை இடித்து விட்டுத்தான் அக்பர் இந்த அரண்மனையைக் கட்டியதாக அறிவித்தார்கள். உலக மரபுச் சின்னமாக அறிவிக்கப்பட்ட பகுதியை அகழ்வாராயச்சி செய்வது, தொல்லியல் மரபு அல்ல என்றாலும், ஜோஷி நிர்வாகம் இதைச் செய்தது.

❖ இவை மட்டுமா? வரலாற்று அறிஞர் சர்வ பள்ளி கோபாலை பொது ஆசிரியராகக் கொண்டு இந்திய வரலாற்று ஆய்வுக் கழகம், இந்திய விடுதலைப் போர் தொடர்பான நூல்வரிசை ஒன்றை வெளியிட்டு வந்தது. புகழ்பெற்ற வரலாற்று அறிஞர்கள், கே.என்.பணிக்கர், சுமித் சர்க்கார் ஆகியோரால் தொகுக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டம் தொடர்பான இரண்டு வரலாற்றுத் தொகுப்புகளை, அச்சுக்கு அனுப்பப்பட்ட நிலையில், அவைகளை வெளியிடாமல் இருந்தது, முரளி மனோகர் ஜோஷியின் நிர்வாகம்.

❖ 'இந்திய வரலாற்று மாநாடு' - எப்போதும், இந்துத்துவாவாதிகளின் புரட்டல் வரலாறுகளை அங்கீகரிப்பது இல்லை. எனவே இந்த மாநாட்டுக்கு நிதி உதவி செய்யக் கூடாது என்று, மனித வளத்துறை செயலாளர் தாஸ்குப்தா என்பவருக்கு, குரோவர் கடிதம் எழுதினார். "மகாபாரதக் கதை பற்றி துவாரகையில் ஆய்வு நடத்தக் கூடாது என்று கூறும், இந்திய வரலாற்று மாநாட்டுக்கு ஏன் நிதி உதவி தரவேண்டும்! அயோத்தியில் பிரச்சினைக்குரிய கட்டிடத்தை (மசூதியை) இடித்த போது, அதைக் கண்டித்தவர்கள் இவர்கள். இவர்களுக்கு அரசு நிதி உதவி செய்வது வீண்" என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் குரோவர்.

❖ 'ஆன்மீகமும் அறிவியலும்', 'வேதாந்தமும் கலாச்சார மரபும்' என்ற தலைப்புகளில் இந்துத்துவ ஆதரவு கல்வித் துறை கருத்தரங்குகளை நடத்தியதோடு, கருத்தரங்குகளை துவங்கும்முன் வேதப் புரோகித பார்ப்பனர்களைக் கொண்டு புரோகிதச் சடங்குகளை நடத்தியது. மேடையில் சரசுவதி சிலை வைக்கப்பட்டிருந்தது. இராமாயணம், மகாபாரதம் பற்றியும், வர்ணாஸ்ரமத்தின் இன்றையத் தேவை பற்றியும் அரசு நடத்திய இந்தக் கருத்தரங்கில் கட்டுரைகள் படிக்கப்பட்டன.

❖ 2001 மார்ச் 12-ம் தேதி, அய்தராபாத்தில், பல்கலைக்கழக மான்யக் குழுத் தலைவர் அரிகவுதம், வேதிய விஞ்ஞானப் படிப்பு தொடங்குவது பற்றி, ஒரு நிகழ்ச்சியில் பேசினார். காலை சரியாக 10.45 மணிக்கு நிகழ்ச்சிகளை நிறுத்திவிட்டு, மீண்டும் 11.01 மணிக்கு, புரோகிதர்களின் வேதமந்திர முழக்கங்களோடு அரிகவுதம், பல்கலைக்கழகத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

- இப்படி, கல்வித் துறையைக் கல்வி மயமாக்கிய கூட்டத்திடம், மீண்டும் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தால், அது எங்கே போய் முடியும்?

சிந்தியுங்கள், தமிழர்களே!

(நன்றி: அ.மார்க்ஸ் எழுதிய 'ஆட்சியில் இந்துத்துவம்' நூல்)

## சாதி-மத மறுப்பு வாழ்க்கை ஒப்பந்தம்

மணமகன்: **பா. ஜெயக்குமார்** மணமகள்: **இரா. ஷர்மிளா தேவி** ஆகியோரது சாதி-மத மறுப்பு திருமணம் 24.4.04 பல்லாவரத்தில் மிக எளிமையாக நடந்தது. பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் ஆட்சிக் குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன் தலைமையேற்று மணவிழாவை நடத்தி வைத்து உரையாற்றினார். தென்சென்னை மாவட்ட பொறுப்பாளர் அன்பு தனசேகர், களப்பணி ஒருங்கிணைப்பாளர் கேசவன் ஆகியோர் மணமக்களை வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்கள் ஜெயக்குமார், காஞ்சி மாவட்ட கழகப் பொருளாளர் பல்லாவரம் ஆ.பா. செல்வராஜ் அவர்களின் தம்பியாவார். அவரது மற்றொரு சகோதரர் தமிழரசன் இல்லத்தில் தாலி இன்றி முழுமையான சுயமரியாதை திருமணமாக நடந்தது.

## அத்வானி ~ ஜெ. ரகசிய அணி

'பொடா' சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டபோது - அதில் பேசுவதற்குச் சென்னை உயர்நீதிமன்றம் எனக்கு அனுமதி வழங்கியது. இரவு பதினொரு மணிக்கு அந்த அனுமதி இரத்து செய்யப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்குப் பேசப் போனால், கேட்க நினைத்திருந்தேன் அத்வானி அவர்களை! 'பொடா'வைத் தவறாகப் பயன்படுத்த மாட்டோம் என்றீர்களே! தவறாகப் பயன்படுத்தியதற்கு என்ன சொல்கிறீர்கள்? ஒரு நாள் பொடாவில் சிறைக்குப் போனாலும் ஆறு வருடம் தேர்தலில் நிற்க முடியாது என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தீர்களே! ஜனநாயகத்தின் குரல்வளையை அறுத்தீர்களே! - இதைப் பிரதமர்க்குத் தெரியாமல் செய்தீர்களே என்று நான்குற்றம் சாட்டியிருப்பேன்.

நான் வருத்தப்படுகிறேன். பிரதமருக்குத் தெரியாமல் ஒரு வரியை உள்ளே சேர்த்து அனுப்புகின்ற அளவுக்கு உள்துறை அமைச்சர் இதைச் செய்தார். எதற்காக? ஜெயலலிதாவைத் திருப்திப்படுத்தி கூட்டணி அமைக்க!

மாறன் உடல் நலமில்லாமல் இருந்தாரே! உங்களுக்கு மனிதாபிமானம் இருந்ததா? அத்வானி அவர்களே இரண்டு முறை சென்னை வந்தீர்களே! அவரை மருத்துவமனையில் சென்று பார்க்கக்கூடாதா? அரசியல் ஒரு பக்கம் இருக்கட்டும். ஜெயலலிதா, ஆட்சியைக் கவிழ்த்தபோது மாறன் வீட்டைத் தேடிப் போனீர்களே! அவர் மரணப் படுக்கையில் இருக்கிறார் என்று தெரிந்தும்கூடப் பக்கத்துத் தெருவரை வந்த நீங்கள் அப்பலோ மருத்துவமனைக்குப் போகக்கூடாதா?

ஏன் போகவில்லை? ஜெயலலிதா கோபித்துக் கொள்வார். நாளை அமைய இருக்கும் கூட்டணி கெட்டுப் போகும் என்பதற்காகத்தானே போகவில்லை. - **பழனி கூட்டத்தில் வைகோ. பேச்சு.**

## கழக ஏட்டுக்கு நன்கொடை

● 14.4.2004 அன்று மாலை சத்திய மங்கலம் புதுரோட்டில் பொதுக்கூட்ட மேடையில் நடைபெற்ற தோழர்கள் ஈசுவரி-மணி ஆகியோரது சாதி மறுப்புத் திருமணத்தின் போது மணமக்கள் சார்பாக 'பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு ரூ.500/- நன்கொடையாக வழங்கப்பட்டது.

● மறைந்த தங்கள் தந்தை மேட்டூர் திரு.எஸ்.ஆர். சுந்தரம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி அவரது மக்கள் சு.கோகுல் ராசு, வானவில் அச்சகம் சம்பத் ஆகியோர் 'பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு நன்கொடை ரூ.500/- வழங்கியுள்ளனர்.

● பல்லாவரம் கழகத் தோழர் ஆ.பா. செல்வராஜ் அவர்களின் சகோதரர் பா.ஜெயக்குமார்-சர்மிளா தேவி ஆகியோரது சாதி-மத மறுப்புத் திருமணம் 24.4.04 அன்று, பல்லாவரத்தில் அவரது சகோதரர் தமிழரசன் இல்லத்தில் எளிமையுடன் நடந்தது. மணமக்கள் சார்பில் இயக்க ஏட்டுக்கு ரூ.500/- நன்கொடை வழங்கப்பட்டது.

● கோபி. தோழர் மா.சிதம்பரம் - ம.பூங்கொடி ஆகியோருக்கு 3.4.2004 அன்று பெண் குழந்தை பிறந்ததன் நினைவாக கழக ஏட்டுக்கு ரூ.50 நன்கொடை வழங்கியுள்ளனர்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

### தொலைபேசி எண் திருத்தம்

மார்ட்டின், மேட்டூர் 98428 59665

புதுவை லோகு
அய்யப்பன் 98428 93231

### மேட்டூரில் கழகக் கூட்டம்

மேட்டூர் சதுரங்காடியில் கழக சார்பில் இந்துத்துவா பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு பொதுக்கூட்டம் 21.4.2004 அன்று மாலை, சிறப்புடன் நடைபெற்றது. கழகத் தோழர் சுரேசுக்குமார் தலைமை தாங்கினார். சோ. பாலு (திமுக), தாஸ் குட்டப்பன் (பா.ம.க.), திருமலைச்சாமி (திமுக), முல்லை வேந்தன் (கழக மாவட்ட அமைப்பாளர்) ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### வி.பி.சிங் காங்கிரசுக்கு ஓட்டு

எனது ஓட்டு காங்கிரசுக்குத்தான் என்று சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அறிவித்துள்ளார். மதவெறி எதிர்ப்பில் இடதுசாரி கட்சிகளுக்கு முதலிடமும், மதச் சார்பற்ற ஜனதாதளத்துக்கு இரண்டாவது இடமும் தருவேன் என்று கூறியுள்ள வி.பி.சிங், லக்னோ தொகுதியில் வாஜ்பாயை எதிர்த்துப் போட்டியிடும் ராம்ஜெத் மாலனிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

### முஸ்லீம்கள் இடஒதுக்கீடு: ஜெ. மவுனம்

கடந்த சட்டசபைத் தேர்தலில் - அ.இ. அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் - முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு செய்வதாகக் கூறப்பட்டிருந்தது. இப்போது தி.மு.க., பா.ம.க., காங்கிரஸ் கட்சிகளில் தேர்தல் அறிக்கையில் இது இடம் பெற்றிருந்தாலும் - அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இடம் பெறவில்லை. இது பா.ஜ.க.வுக்குக் கிடைத்த வெற்றி என்கிறார், பார்ப்பன எம்.எல்.ஏ., பா.ஜ.க. எம்.எல்.ஏ. வான ராஜா.

# "ராமனும் கிருஷ்ணனும் கற்பனைப் பாத்திரம்னேன்"


('சன்' தொலைக்காட்சி அரசியல் விமர்சகர் திரு. வீரபாண்டியன் தொகுத்துள்ள காமராசர் பற்றிய 'ஆகட்டும் பார்க்கலாம்' நூல் விமர்சனத்தின் கடந்தவார தொடர்ச்சி இது. காங்கிரஸ் தலைவர் சீர்காழி எத்திராஜ் – காமராசர் தன்னிடம், கடவுள் மதம் பற்றி தெரிவித்த கருத்துக்களின் தொடர்ச்சி)

"பதினெட்டு வருஷமா மலைக்குப் போறேன்னு பெருமையா சொல்றான். அதுக்காக அவனுக்குப் பி.ஹெச்.டியா கொடுக்கிறாங்க...? பதினெட்டு வருஷமா கடன்காரனா இருக்கான்னு அர்த்தம். பணம் படைச்சவன் போடுற பக்தி வேஷம். 'சோஷியல் ஸ்டேட்டஸ்'க்காக. நாலு பேர் தன்னைப் பக்திமான், பெரிய மனுஷன்னு பாராட்டணும்கிறதுக்காக. ஒரு அனாதை இல்லத்துக்கோ, முதியோர் இல்லத்துக்கோ கொடுக்கலாமில்லியா..." ஊருக்கு நூறு சாமி... வேளைக்கு நூறு பூஜைன்னா மனுஷன் என்னிக்கு உருப்படறது? நாட்டுல வேலையில்லாத் திண்டாட்டம்... வறுமை - சுகாதாரக்கேடு... ஏற்றத்தாழ்வு இத்தனையையும் வச்சிக்கிட்டு பூஜை என்ன வேண்டி கிடக்கு... பூஜைன்னேன்...? ஆயிரக்கணக்கான இந்த 'சாமிகள்' இதப்பாத்துகிட்டு ஏன் பேசாம இருக்குன்னேன்...?"

தலைவர் போடு, போடு என்று போட்டுக் கொண்டு வந்தார். அவருக்குள் ஆயிரம் இங்கர்சாலை, பெரியாரை நான் கண்டெடுத்தேன். "அப்படியானா... பல தெய்வ வழிபாட்டை வெறுக்கிறீங்களா... இல்லே, தெய்வ வழிபாட்டையே வெறுக்கிறீங்களா...?" என்று கேட்டேன்.

அவர் கொஞ்சம் கூடத் தாமதிக்காமல்... "லட்சுமி, சரஸ்வதி, பார்வதி, முருகன், விநாயகர், பராசக்திங்கிறதெல்லாம் யாரோ ஓவியர்கள் வரைஞ்சி வச்ச சித்திரங்கள். அதையெல்லாம் ஆண்டவன்னு நம்மாளு கும்பிட ஆரம்பிச்சிட்டான். சுடலைமாடன், காத்தவராயன்கிற பேர்ல அந்த வட்டாரத்துல யாராவது பிரபலமான ஆசாமி இருந்திருப்பான். அவன் செத்ததும் கடவுளாக்கிட்டான் நம்மாளு. கடவுள்ங்கிறவரு கண்ண உருட்டிக்கிட்டு, நாக்கை நீட்டிகிட்டுதான் இருப்பாரா? அரேபியாவிலே இருக்கிறவன் 'அல்லா'ன்னான். ஜெருசலத்தில் இருக்கிறவன் 'கர்த்தர்'ன்னான். அதிலேயும் சில பேரு மேரியக் கும்பிடாதேன்னான். கிறிஸ்துவ மதத்திலேயே ஏழு, எட்டு 'டெனாமினேஷன்' உண்டாக்கிட்டான். மத்திய ஆசியாவிலிருந்து வந்தவன், அக்கினி பகவான், ருத்ரன், வாயு பகவான்னு நூறு சாமியச் சொன்னான். நம்ம நாட்டு பூர்வீகக் குடிமக்களான திராவிடர்கள், காத்தவராயன், கழுவடையான், முனியன், வீரன்னு கும்பிட்டான். எந்தக் கடவுள் வந்து இவன்கிட்டே 'என்பேரு இதுதான்னு சொன்னான்...? அவனவனும் அவனவன் இஷ்டத்துக்கு ஒரு சாமிய உருவாக்கினான். ஒவ்வொரு வட்டாரத்துல உருவான ஒவ்வொரு மகானும் ஒரு கடவுள உண்டாக்கி, எல்லாரும் தன் கட்சியிலே சேரும்படியா செஞ்சான்...

காங்கிரஸ் - கம்யூனிஸ்ட் - திமுக மாதிரி ஒவ்வொரு மதமும் ஒரு கட்சி. யார் யாருக்கு எதிலே லாபமிருக்கோ அதுல சேந்துக்குறான்... மதம் மனிதனுக்குச் சோறு போடுமா...? அவன் கஷ்டங்களைப் போக்குமா? இந்தக் குறைந்தபட்ச அறிவுகூட வேண்டாமா மனுஷனுக்கு? உலகத்துல இருக்கிற ஒவ்வொரு மதமும், நீ பெரிசா... நான் பெரிசான்னு மோதிகிட்டு ரத்தம் சிந்துதே...! நாட்டுக்கு நாடு யுத்தமே வருதே...! இப்படியெல்லாம் அடிச்சிகிட்டு சாகச் சொல்லி எந்த ஆண்டவன் சொன்னான்?" தலைவர் தெளிந்த




நீரோடை மாதிரி பேசிக் கொண்டே வந்தார். ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் ஒரு அழுத்தமான முடிவை அவர் வைத்திருப்பதைப் பார்த்து நான் வியந்தேன்.

"அப்படியானா... உங்களுக்கு புராணம், இதிகாசம் போன்ற விஷயங்கள்ல நம்பிக்கையோ, ஈடுபாடோ கிடையாதா?" என்று நான் கேட்டேன்.

"புராணம், இதிகாசமெல்லாம் அந்தக் காலத்துல இருந்த மகான்கள் எழுதி வச்சது. அவங்களுக்கு எந்த உள் நோக்கமும் இருந்திருக்காது. பாரதம், ராமாயணத்துல பல நல் விஷயங்கள் மனுஷனுக்கு இருக்கு... பாவ, புண்ணியத்துக்குப் பயப்படணும். கெட்டவன் அழிஞ்சு போவான். நல்லவன் வாழ்வான்னு சொல்லப்பட்டிருக்கு. மண்ணாசை, பொன்னாசை கூடாது. அடுத்தவன் மனைவியைத் தப்பாப் பாக்கக் கூடாதுன்னு எச்சரிச்சிருக்காங்க. ராமன் மாதிரியா ஒரு 'யோக்யனை' சிருஷ்டிச்சி, அவனை நல்லவனுக்கு உதாரணமா காட்டியிருக்காங்க.

... இதையெல்லாம் மனுஷன் எடுத்துக்கணும். அரசாங்கம் போடுற வெறும் சட்ட திட்டங்கள் மட்டும் மனுஷனுக்குப் போதாது. தீமையைச் செஞ்சவனுக்குச் சட்டத்துல தண்டனை உண்டு. தீமையை நெனக்கிறவனுக்குத் தண்டனை உண்டா? மனசாலேயும் தப்பு நெனைக்காதேன்னு நம்ம இதிகாசங்கள் சொல்லுது!"

நான் இடைமறித்து, "அந்த இதிகாசங்களிலும் பல நம்ப முடியாத விஷயங்கள், மூட நம்பிக்கைகள்... மலிந்து கிடக்கே...?" என்று கேட்டேன்.

உடனே அவர், "எது, எது ஆகாததோ அதையெல்லாம் விட்டுட வேண்டியதுதான். எத்தனை ஆயிரம் வருஷத்துக்கு முன்னே எழுதி வைக்கப்பட்ட விஷயங்கள் அவை. இன்னிக்கு அதெல்லாம் அப்படியே பொருத்தமாயிருக்குமான்னேன்...? சமுதாயத்துல அன்னிக்கு இருந்த நடைமுறையை வச்சி எழுதியிருப்பாங்க... சாரத்த எடுத்துகிட்டு சக்கையைத் தூக்கிப் போட்டுடணும்னேன்..." என்றார்.

"நீங்க சொல்றதைப் பார்த்தா ராமன், கிருஷ்ணனையெல்லாம் கடவுளாக்கிட்டானே... அதை ஏத்துக்கிறீங்க போலிருக்கே...?" என்று வினாத் தொடுத்தேன்.

தலைவர் குலுங்கக் குலுங்கச் சிரித்தார். "டேய்... கிறுக்கா... நான் சொல்றது ஒனக்கு விளங்கலையான்னேன்...? ராமன், கிருஷ்ணன்கிறது கற்பனைக் கதாபாத்திரம்னேன். அதையெல்லாம் நம்மாளு கடவுளாக்கிட்டேன்னேன்...! இன்னிக்கு நம்ம சினிமாவுல வர்ர கதாநாயகனுக்குக் 'கட்அவுட்' வைக்கிறானில்லையா... அது மாதிரி அந்தக் காலத்துல கதாநாயகன் மாதிரி வருணிக்கப்பட்ட ராமனுக்கும், கிருஷ்ணனுக்கும் கோவில் கட்டிபுட்டான். அந்தப் புத்தகங்கள்ல சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள எடுத்துக்கணும். ஆசாமிய விட்டுபுடணும்.

... காலப் போக்குல என்னாச்சுன்னா... லட்சக்கணக்கான மக்கள் ராமனை, கிருஷ்ணனைக் கும்பிட ஆரம்பிச்சிட்டான்னு தெரிஞ்சதும், அவுங்களை வச்சி கட்சி கட்ட ஆரம்பிச்சிட்டான் அரசியல்வாதி. அவனுக்குத் தெரியும் ராமன் ஆண்டவன் இல்லேன்னு. ஆனா, அதை வச்சிப் பொழப்பு நடத்தப் பாக்குறானுங்க களவாணிப் பசங்க... புராணங்கள்லே சொல்லப்பட்டிருக்கிற கதாபாத்திரங்கள வச்சித்தான் நம்ம ஜனங்கள அடிமையா ஆக்கிவச்சிருக்கான். நரகாசுரன் கதையை வச்சி தீபாவளி கொண்டாடுறான். நவராத்திரி கதையைச் சொல்லி சரஸ்வதி பூஜை பண்றான். விக்னேஸ்வரனைச் சொல்லி விநாயகருக்குக் கொழுக்கட்டை பண்றான். இது மாதிரி ஏற்பாடுகளை செஞ்சி ஏழை ஜனங்களையும், பாமர ஜனங்களையும் தன்னோட மதத்தின் பிடிக்குள்ளேயே வச்சிப் பொழப்பு நடத்தறான்.

நான் தீபாவளி கொண்டாடுனதுமில்ல.. எண்ணெய் தேச்சிக் குளிச்சதுமில்ல... புதுசு கட்டுனதுமில்ல... பொங்கல் மட்டும் தான் நம்ம பண்டிகைன்னேன். நம்ம சமுகம் விவசாய சமூகம். அது நம்ம கலாச்சாரத்தோட ஒட்டுன விழான்னேன்..." என்று விளக்கினார்.

வெளியீடு:
'தாரிகை' 28 - 5வது முதன்மைச் சாலை, கஸ்தூரிபாய் நகர், அடையாறு, சென்னை-600 020.
விலை: ரூ.125/-

### தமிழகத்தில் பா.ஜ.க. அணி தோற்கும்

சென்னை லயோலா கல்லூரி தகவல் தொடர்புத் துறை தமிழகம் முழுதும் நடத்திய தேர்தல் கருத்துக் களின்படி தி.மு.க. அணிக்கு 62.1 சதவீத வாக்காளர்கள் ஆதரவும், பா.ஜ.க. - அ.தி.மு.க. அணிக்கு 31.7 சதவீத வாக்காளர்கள் ஆதரவும் இருப்பதாகக் கூறுகிறது. தி.மு.க. அணி 35 இடங்களைக் கைப்பற்றும்; 2 தொகுதிகளை அ.தி.மு.க. கைப்பற்றும்; 3 தொகுதிகளில் கடும் போட்டி நிலவுகிறது என்று அந்தக் கருத்துகள் கணிப்பு கூறுகிறது. ராசிபுரம், திருச்செங்கோடு தொகுதிகள் அ.தி.மு.க. அணிக்கு சாதகமாக இருப்பதாகவும், நாகர்கோயில், திருநெல்வேலி, திருப்பத்தூர் தொகுதிகளில் கடும் போட்டி நிலவுவதாகவும், கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. தலித், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோரில் பெருமளவு ஆதரவு தி.மு.க. அணிக்கே இருக்கிறது.

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 29th April 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.